ஞாயிறு
யாழ்
வாரமலர்
# தினக்குரல்
தினக்குரல்
THINAKKURAL
AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL
Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com
ஓசை : 020 குரல் : 266 ஞாயிற்றுக்கிழமை 05 டிசம்பர் Sunday 05th December 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 40/= பக்கங்கள் : 28

## ஜனாதிபதி வீட்டிலும் எரிவாயு கசிவு

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் இல்லத்திலும் எரிவாயு கசிவு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் நுகேகொட, மிரிஹானவில் அமைந்துள்ள பக்கம் 02

## 21 கொரோனா மரணங்கள் பதிவு

நாட்டில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்ட மேலும் 21 பேர் உயிரிழந்ததாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று உறுதி செய்தார்.

இவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட மரணங்களில் பக்கம் 02

# உள்ளக சுயநிர்ணய உரிமையை மறுத்தால் வெளியக சுய நிர்ணயம்




## கோரும் அதிகாரம் எமக்கு உண்டு; பாராளுமன்றில் சுமந்திரன்

பா. கிருபாகரன்

எமது சுய நிர்ணய உரிமை இலங்கைக்குள் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டு எமது உரிமைகள் நிராகரிக்கப்பட்டால் சர்வதேச சட்டத்திற்கு அமைய வெளியக சுய நிர்ணய உரிமையை கோரும் அதிகாரம் எமக்குள்ளது.

எனவே எமது மக்கள் தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டால் நாம் வெளியக சுய நிர்ணய உரிமையை கோர நேரிடுமென தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி.யும் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.எ.சுமந்திரன் தெரிவித்தார்.

அத்துடன் சர்வதேச தரப்பு எமது நிலைப்பாட்டை அங்கீகரித்துள்ளதுடன் எமது நிலைப்பாடு நியாயமானது எனவும் பக்கம் 02



## ஆளும் - எதிர்க் கட்சியினர் நாடாளுமன்றில் பெரும் அமளி

-சபாநாயகரை தாக்க முயன்றதாக குற்றச்சாட்டு -

பா. கிருபாகரன்

அரச தரப்பின் பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சண்டியர் போல் சபையில் செயற்படுவதாக எதிர்க்கட்சியினரும் எதிர்க்கட்சியினர் சபாநாயகரை தாக்க முயன்றதாக அரச தரப்பினரும் பரஸ்பரம் குற்றம்சாட்டி தர்க்கத்தில் ஈடுபட்டதால் சபையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

பாராளுமன்றம் நேற்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பக்கம் 02

## ஜனாதிபதி வேட்பாளர் சம்பிக்க? யாழில் நேற்று புதிர் போட்டார்

-நான் இனவாதி இல்லை எனவும் தெரிவிப்பு -



அடுத்த ஜனாதிபதி தேர்தலில் நான் களமிறங்குவேனா? இல்லையா? என்பது தெரியாது. களமிறங்கினாலும் இறங்காவிட்டாலும் நான் இனவாதி இல்லை. நான் சரித்திர பூர்வமாக இனவாதத்தையும் தீவிரவாதத்தையும் எதிர்ப்பவன் என முன்னாள் அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். பக்கம் 02

## காஸ் விநியோகத்துக்கு நிபந்தனையுடன் அனுமதி

கைத்தொழில் மற்றும் மயான பயன்பாட்டிற்காக எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் எரிவாயு நிறுவனங்களுக்கு நுகர்வோர் விவகார அதிகார சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



எனினும்வீட்டுப் பாவனைக்காக சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க தொடர்ந்தும் பக்கம் 02


## உரும்பிராய் - மானிப்பாய் வீதியில் வான் மோதி நேற்றிரவு ஒருவர் பலி



உரும்பிராய் - மானிப்பாய் வீதியில் நேற்றிரவு சைக்கிளில் சென்றவரை ஹயஸ் வாகனம் மோதியதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த நபர் மீது பக்கம் 02

## தினமும் ஒரு மணி நேர மின்வெட்டு




நுரைச்சோலை அனல் மின் நிலையம் முழுவதுமாக செயற்பாட்டிற்கு வரும் வரையில் நாட்டின் சில பகுதிகளில் ஒரு மணித்தியால மின் வெட்டு ஏற்படலாம் என மின்சார சபை தெரிவித்துள்ளது. பக்கம் 02

## தமிழ் தேசத்தை அங்கீகரிக்காதவரை முழு நாட்டுக்குமே அழிவுதான்

-பாராளுமன்றில் கஜேந்திரகுமார் -

பா. கிருபாகரன்

இலங்கை ஒரு பல்தேசங்கள் கொண்ட நாடென்பதை ஏற்றுக்கொள்ளாதவரைக்கும் தமிழ் மக்கள் ஒரு தேசம் என்பதை அங்கீகரிக்காத வரைக்கும் நீங்கள் எங்களை மட்டுமல்லாது உங்களையும் சேர்த்தே அழிக்கப்போகிறீர்கள் . நாட்டின் ஸ்திரத்தன்மை குலைந்து பிளவடையப்போவது சிங்கள தலைவர்களாலேயே அன்றி தமிழ் மக்களால் அல்ல என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இனப்படுகொலை புரிந்தவர்களை பாதுகாத்துக்கொண்டு இருக்கும்வரையில் இனப்படுகொலை என்பது தப்பிக் கொள்ளக்கூடிய ஒருகுற்றம் என நம்பிக்கொண்டிருக்கும் வரையிலும் உங்களால் சமாதானத்தை கட்டியெழுப்பவும் முடியாதுபாதுகாப்பாக உணரவும் முடியாது எனவும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை பக்கம் 02

## எதிர்க்கட்சி எம்.பியை தாக்க அரச தரப்பு முயற்சி

-சபையிலிருந்து வெளியேறி ஆர்ப்பாட்டம் -

பா. கிருபாகரன்

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. மனுஷ நாணயக்காரவை சபைக்கு வெளியே வைத்து அரச தரப்பினர் தாக்க முற்பட்டதையடுத்து தமது பாதுகாப்புக்கு உத்தரவாதம் தரும் வரையில் சபை பக்கம் 02



## கடலில் மூழ்கி இரு சிறுவர்கள் பலி

திருகோணமலை - நிலாவெளி கடலில் நீராடச் சென்ற இரண்டு சிறுவர்கள் நீரில் மூழ்கி நேற்று உயிரிழந்தனர்.

இறக்கக்கண்டி வாழைத் தோட்டம் பகுதியை சேர்ந்த 13 மற்றும் 14 வயதுடைய இரண்டு சிறுவர்களே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர்.

நேற்று முற்பகல் உறவினர்களுடன் கடலில் நீராட சிறுவர்கள் சென்ற நிலையில் இந்த அனர்த்தம் இடம்பெற்றது.

உயிரிழந்த சிறுவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக நிலாவெளி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை குச்சவெளி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## வவுணதீவு பொலிஸார் கொலை; புலிகள் மீது பழி போட்டது யார்?

-வெளிப்படுத்த கோருகிறது ஜே.வி.பி. -

வவுணதீவில் பொலிஸார் இருவர் கொல்லப்பட்ட சம்பவத்தை விடுதலைப் புலிகளின் பக்கம் திருப்ப ஆலோசனை வழங்கியவர் யார்? என்பதை வெளிக்கொண்டுவர வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்தியுள்ளது.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் அச்சம்பவத்தை பொறுப்பேற்க அழுத்தம் கொடுத்தவர்கள் யார் என்ற தகவல்களையும் அரசாங்கம் வெளியிட வேண்டும் என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

52 நாட்கள் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற வவுணதீவு கொலை சம்பவத்தை விடுதலைப் புலிகளின் முன்னாள் செயற்பாட்டாளர்கள் பக்கம் கொண்டு செல்ல ஆலோசனை வழங்கப்பட்டிருந்த நிலையில் பின்னர் சஹ்ரான் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அந்த நேரத்தில் அவர்களை கைது செய்திருந்தால் ஈஸ்டர் தாக்குதலை தடுத்திருக்கலாம் என்றும் ஆனால் அந்த சம்பவத்தை விடுதலைப் புலிகளின் பக்கத்திற்கு திருப்ப வேண்டுமென்றே செய்யப்பட்டதா ? என்றும் அனுரகுமார திஸாநாயக்க கேள்வியெழுப்பினார்.

## கொடூர கொலையாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை

-ஜனாதிபதியிடம் பாகிஸ்தான் பிரதமர் உறுதி -



பாகிஸ்தானில் கைத்தொழிற் சாலையில் தொழில் புரிந்துகொண்டிருந்த இலங்கைத் தொழிலாளரான பிரியந்த குமார என்பவர் கொடூரமாகக் கொலை செய்யப்படுவதற்குக் காரணமான அனைத்துக் குற்றவாளிகளுக்கு எதிராகச் சட்டத்தை நிலைநாட்டுவதாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் உறுதியளித்துள்ளார்.


ஜனாதிபதியுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட பாக்கிஸ்தான் பிரதமர், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் நம்பிக்கை என்பன ஒரு போதும் பாதிப்படைய இடமளிக்கப்பட மாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார். பக்கம் 02

## இலங்கை கடற்பரப்பிலிருந்து வெளியேறியது சீன உரக் கப்பல்

இலங்கை அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்ட சீன உரக் கப்பல் இலங்கை கடற்பரப்பில் இருந்து வெளியேறியுள்ளது.

அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்ட ஹிப்போ ஸ்பிரிட் என்ற குறித்த சீன உரக் கப்பல் நீதி கோரி நடுவர் மன்றத்தை நாடப்போவதாக கூறியுள்ளது.

இலங்கையிலிருந்து வெளியேறிய இக்கப்பல் சிங்கப்பூருக்குச் சென்றுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



## ஜனாதிபதி வேட்பாளர் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

என்னைப் பற்றிய விமர்சனங்கள் குறித்து ஜனநாயகத்தை விரும்பும் தமிழ் மக்களுடன் விவாதிக்க விரும்புகின்றேன்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு மின்சார வசதியை பெற்றுக் கொடுக்க முழு முயற்சி எடுத்தது நான் தான். மலையக மக்களுடைய குடியிருப்புகளுக்கு மின்சார வசதியை பெற்றுக் கொடுத்தது நான் மின்சாரத் துறை அமைச்சராக இருக்கும் போது தான்.

நான் நகரசபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராக செயற்பட்ட போது கொழும்பு நகருக்குள் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளை வழங்கியபோது தமிழ் முஸ்லிம் மக்களுக்கு எதுவித எவ்வித பாகுபாடும் காட்டவில்லை.

யாழ்ப்பாணத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தவன் நான். நான் ஒரு இனவாதியாக இருந்தால் இது போன்ற செயல்களை செய்து இருப்பேனா? நான் ஜனாதிபதி தோ்தலில் போட்டியிடுவேனா? இல்லையா? என்பது வேறு கதை. ஆனால் நிச்சயமாக நான் மத வாதியும் இல்லை. இனவாதியும் இல்லை. நான் ஒரு ஜனநாயகவாதி. திறமைசாலிகளை மதிக்கிறவன். ஜனாதிபதி தேர்தலுக்கு காலம் இருக்கிறது எல்லோருடனும் கலந்துரையாடி சரியான நேரத்தில் சரியான வேட்பாளர் களமிறக்கப்படுவார் என சம்பிக்க மேலும் தெரிவித்தார்.

(ச-75,40)

## தமிழ் தேசத்தை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

ரோம் சாசனத்தின் 6வது உறுப்புரையானது இனப்படுகொலைக் குற்றம் என்பதனை வரையறைசெய்கின்றது. இந்த சர்வதேச சாசனத்தை இலங்கை அரசு தொடர்ந்து ஏற்க மறுத்துவருவதற்கான காரணம்இன்று வெளிப்படையாகின்றது.அன்று யுத்தம் அதன் உச்சக்கட்டத்தில் இருந்தபோது நடைபெற்ற சம்பவங்களை கடந்த வரவு செலவுத்திட்டத்தில்பாதுகாப்பு அமைச்சு மீதான விவாதத்தின் போது தெளிவாக வெளிப்படுத்தியிருந்தேன்.

அங்கு போர் வலயத்தினுள் சிக்கியிருந்த மக்களின் உயிர்களைப் பாதுகாக்கும் பொருட்டு விடுதலைப்புலிகள் தமது ஆயுதங்களை மௌனிப்பதாக அறிவித்ததை ஏற்றுக்கொள்வதென்ற முடிவுக்கு மே 16 இரவு எட்டு மணியளவில் சிறிலங்கா அரசாங்கம் கொள்கையளவில் முன்வந்திருந்தது. ஆனால் அங்கு சிக்கியிருந்த ஏறத்தாழ 150,000 மக்களை பாதுகாத்து அவர்களை பாதுகாப்பாக அழைத்துவரும் செயற்பாடு அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஜோர்டானில் நடைபெற்றுக் கொண்டிருந்த அணிசேரா நாடுகளின் மாநாட்டில் இருந்து மே 17 -ஆம் திகதி திரும்பி வந்தவுடன் ஆரம்பிக்கப்படும் என கூறப்பட்டது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அச்செயற்பாடுநடைபெறவில்லை. 17 ம் திகதி காலை போர் வலயத்தினுள் சிக்கியிருக்கும் மக்களை பாதுகாப்பாகவெளியேற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்பதை நான் விடுதலை புலிகளுக்கு அறிவித்திருந்தேன்.

ஆனால் 16 ம் திகதி இரவு 10 மணியளவில் மிகவும் பயங்கரமான செய்திகளைத் தாங்கிய பல தொலைபேசி அழைப்புகள் வன்னியிலிருந்து எனக்கு வந்தன. ஆயுதங்களை மௌனிப்பது எனும் புலிகளின் முடிவை அரசு ஏற்று மக்களை பாதுகாப்பாக வெளியேற்றும்நடவடிக்கைக்கு ஒத்துக்கொண்ட பின்னரும் கூட போர் வலயத்தை நோக்கி எழுந்தமானமாக கடும் உயிர் இழப்புகளை ஏற்படுத்தக்கூடிய வகையில் ஆட்டிலறித் தாக்குதல்கள் முடுக்கிவிடப்பட்டிருப்பதாக அங்கிருந்துவந்த தொலைபேசி அழைப்புகள் கூறின.

நான் உடனடியாகவே 16 -05-2009 இரவு 10.30 மணியளவில் பசில் ராஜபக்சவுடன்தொடர்புகொண்டு நீங்கள் மக்களின் பாதுகாப்பிற்காகவும் நலனுக்காகவுமே அனைத்தையும் (இந்த யுத்தத்தை ) செய்கிறோம் எனகூறிக்கொண்டு இருக்கிறீர்கள். ஆனால் உங்கள் அரசாங்கம் ஒத்துக்கொண்டால் அங்கிருக்கும் 150,000 பொது மக்களின் உயிர்களை பாதுகாப்பாக நாளையே அழைத்துவரக்கூடிய கூடிய நிலைமை இருக்கும்போது ஏன் பொது மக்கள் மீது இப்படியான கொடூரமானஆட்டிலறி தாக்குதல்களை பாதுகாப்பு அமைச்சு மேற்கொள்கிறது? எனக் கேட்டிருந்தேன்.

அவர் தான் பாதுகாப்பு அமைச்சோடு பேசி ஒரு முடிவுக்கு வருவதாக என்னிடம் கூறினார். ஆனால் அவர்மீண்டும் என்னிடம் தொடர்பு கொண்டு அடுத்த பாதுகாப்பு கவுன்சில் கூட்டம் 17 -ஆம் திகதி நடக்கும் வரை இந்த தாக்குதல் திட்டம் தொடரும் என பாதுகாப்பு அமைச்சு தனக்கு அறிவித்ததாக அவர் கூறினார். இந்தபயங்கரமான நிலைமையின் தாற்பரியத்தை நம்புவதற்கு நீங்கள் மறுக்கலாம் அப்படி நடந்தது என்பதைகூறக்கூட நீங்கள் மறுக்கலாம் ஆனால் அதற்கெல்லாம் நேரடி சாட்சியாக நான் இருக்கிறேன்.

போர்வலயத்துள் சிக்கியுள்ள 150,000 மக்களின் உயிர்களைப் பாதுகாக்கும் பொருட்டும் தமது ஆயுதங்களை மௌனிக்கத் தயாராக இருப்பதாக 16 மே பிற்பகல் 4.00 மணியளவில் மிக தெளிவாக என்னூடாக அரசுக்கு அறிவித்திருந்தார்கள். ஆனால் பாதுகாப்பு அமைச்சு பொதுமக்களை பாதுகாக்கும் அந்த முயற்சியை ஏற்க அடியோடு மறுத்துவிட்டது. மாறாக கனரகஆயுதங்கள் மூலம் தாக்குதல்களை தொடர்ந்து நடத்தினார்கள் .அதற்கு நான் சாட்சிமேலும் கடந்த வருடம் இந்த அவையில் உரையாற்றிய சரத் பொன்சேகா யுத்தத்தின் இறுதி நாள் வரை கடுமையான கனரக ஆயுத தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்பட்டதாக உரிமைகோரியிருந்தார்.

இப்படியாக போரில் ஈடுபட்ட ஒரு தரப்பு தமது ஆயுதங்களை மௌனிப்பதாக அறிவித்திருந்தநிலையில் நீங்கள் அதை ஏற்கமறுத்து தொடர்ந்தும் கனரக ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடத்தியதென்பது மக்களின் உயிரிழப்பை முடிந்தளவு அதிகரித்து அந்த மக்களை முழுமையாகவோ ஆகக்குறைந்தது பகுதியாகவோ அழிப்பது என்னும் ஒரே நோக்கத்திற்காகவே என்பது தெளிவாகிறது. இது இனப்படுகொலை என்பதில் சந்தேகமில்லை. இது ஒரு சாதாரணமான ஒருகுற்றம் அல்ல. எவரும் எண்ணிப் பார்க்க முடியாத மிக பயங்கரமான குற்றம் என தனது நீண்ட உரையில் கஜேந்திர குமார் மேலும் குறிப்பிட்டார்.

## காஸ் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடைவிதிக்கப்பட்டுள்ளது.

எரிவாயு கலவையில் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுத் சிக்கல்களுக்கு தீர்வு கண்ட பின்னரே சமையலுக்கான எரிவாறு விநியோகம் குறித்து முடிவெடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவித்துள்ளது. (மற்றுமோர் செய்தி பக்கம் 3 இல்)

## உள்ளக ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே அரசாங்கம் இப்போதாவது எம்முடன் பேச்சுவார்த்தை நடத்தி, தீர்வுகளை நோக்கி பயணிக்க தயாராக வேண்டும். இனியும் இது உள்ளக விவகாரம் அல்ல. இது சர்வதேசத்திற்கு கொண்டுசெல்லப்பட்டுள்ள விவகாரம் எனவும் சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற நெடுஞ்சாலைகள் அமைச்சு,போக்குவரத்து அமைச்சு ,தொழில் அமைச்சு, மற்றும் 3 இராஜாங்க அமைச்சுக்கள் ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தூதுக் குழு அண்மையில் அமெரிக்கா,கனடா மற்றும் பிரித்தானியாவிற்கான விஜயத்தை மேற்கொண்ட நிலையில் அது குறித்த செய்திகள், ஊகங்கள் விமர்சனங்கள் வெளிவந்துள்ளன. எமது உள்ளக விவகாரங்கள் சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளதாகவும், தமிழ் தேசிய கூட்டமைப்பு சர்வதேச தலையீடுகளை கோருவதாகவும் அவற்றை உள்ளக விவகாரங்களுக்குள் நுழைப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. வரலாறுகளை மீட்டுப்பார்த்தால் இந்த விடயங்கள் எவ்வாறு உருவாகின என்பது தெரியவரும்.

ஒட்டுமொத்த சர்வதேச தரப்பிற்கும் ஒரு வாக்குறுதியை வழங்கிவிட்டு இன்று அதில் இருந்து மாறுபட்டு, ஒரு நாடு ஒரு சட்டம் என்ற சுலோகத்துடன் இயங்க அரசு முயற்சிக்கின்றது. ஒரே நாடு, ஒரே சட்டம் யதார்த்தம் என்றால் மத்தியின் எந்தவொரு அதிகாரமும் மாகாணங்களுக்கு வழங்கப்படாது. அவ்வாறான நிலையில் இந்த கொள்கையில் மாகாணங்கள் எவ்வாறு அதிகார பரவலுடன் செயற்பட முடியும். இது அதிகார பரவலாக்கல் அல்ல. தசாப்தகால வாக்குறுதிகளை தாண்டிச்சென்று எதிர்மாறான பயணத்தை முன்னெடுக்க முடியாது. ஆகவேதான் வடக்கு கிழக்கு மக்களின் பிரதிநிதிகள் என்ற ரீதியில், தமிழ் தேசிய கூட்டமைப்பு மக்களின் பெரும்பான்மை ஆதரவை பெற்றுள்ள கட்சி என்ற ரீதியில் எமது மக்களின் நிலைப்பாட்டை சர்வதேச சமூகத்திடம் கொண்டு சேர்த்துள்ளோம். இந்த நெருக்கடிக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுத்து எமக்கு உதவ வேண்டும் என வலியுறுத்தியுள்ளோம் என்றார்.

## தினமும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்படி, மாலை 6 மணி முதல் இரவு 9 மணிக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் ஒரு மணித்தியால மின் வெட்டு ஏற்படக்கூடும் என மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் பல பகுதிகளில் தடைப்பட்டிருந்த மின்சாரம் மற்றும் குடிநீர் விநியோகம் முழுவதுமாக வழமைக்குக் கொண்டுவரப் பட்டுள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

## எதிர்க்கட்சி ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமர்வுகளில் பங்கேற்க மாட்டோம் என அறிவித்த எதிர்க்கட்சி சபையிலிருந்து வெளிநடப்பு செய்ததுடன் பாராளுமன்றம் முன்பாக ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டது.

பாராளுமன்றம் நேற்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதனையடுத்து இடம்பெற்ற தினப்பணிகளையடுத்து எழுந்த எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தமது கட்சி எம்.பி.யான மனுஷ நாணயக்கார வெள்ளிக்கிழமை சபாநாயகரிடம் முறைப்பாடு ஒன்றை செய்ய சென்ற போது, அரச தரப்பின் பிரதான கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட அரச தரப்பினர் அவரை தாக்க முயன்றதை சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து அரச தரப்புக்கும் எதிர்க்கட்சிக்குமிடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது.

சுமார் 20 நிமிடங்கள் வரை இதனால் சபை அமளிதுமளிப்பட்ட நிலையில் ஒருவாறு நெடுஞ்சாலைகள் அமைச்சு,போக்குவரத்து அமைச்சு ,தொழில் அமைச்சு ஆகியவற்றின் மீதான குழுநிலை விவாதம் ஆரம்பமானது. இதில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. யான மனுஷ நாணயக்கார அரச தரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ,இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆகியோர் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார். .

இதன்போது இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர மீது ஊழல் மோசடிக்குற்றச்சாட்டுகளை சுமத்திய ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. யான மனுஷ நாணயக்கார இன்னும் பல விடயங்களை அம்பலப்படுத்தினார். இதனால் அவரின் உரையின்போது மீண்டும் இரு தரப்புக்கும் இடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது,

இந்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. யான மனுஷ நாணயக்கார உரை நிகழ்த்திவிட்டு சபையை விட்டு வெளியேறிச் சென்ற நிலையில் சபைக்கு வெளியே காத்திருந்த இராஜாங்க அமைச்சர் காஞ்சனா விஜேசேகர மற்றும் சில இராஜாங்க அமைச்சர்கள் எம்.பி.க்கள் என சுமார் 15 பேர் மனுஷ நாணயக்காரவை தக்க முயன்றுள்ளனர். இதனால் சபைக்கு வெளியே பெரும் இழுபறி நிலைமை ஏற்பட்டது.

இதனையடுத்து சபைக்குள் வந்த எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி, எமது கட்சி எம்.பி. யான மனுஷ நாணயக்கார உரை நிகழ்த்திவிட்டு சபையை விட்டு வெளியேறிச் சென்ற நிலையில் சபைக்கு வெளியே காத்திருந்த அரச தரப்பினர் சுமார் 15 பேர் அவரை தாக்க முயன்றனர். இதன் மூலம் எமது பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. எமக்கு பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே எமது பாதுகாப்பு சபாநாயகர் உறுதிப்படுத்த வேண்டும். எமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப் படும் வரையில் நாம் சபை அமர்வுகளில் பங்கேற்க மாட்டோம் எனக்கூறியதையடுத்து பிரதான எதிர்க்கட்சியினரான ஐக்கிய மக்கள் சக்தியினர் சபையிலிருந்து வெளியேறிச் சென்று பாராளுமன்றம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## கொடூர ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்செயலுடன் தொடர்புடைய அனைத்து வீடியோக் காட்சிகள் மற்றும் தகவல்கள், தற்போது பாகிஸ்தான் பாதுகாப்புப் பிரிவினரால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை 113 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதுடன், ஏனையவர்களைத் தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும், பாகிஸ்தான் பிரதமர் குறிப்பிட்டார்.

குற்றவாளிகளுக்கு கடவுளின் மன்னிப்பு இல்லை என்றும் சட்டத்திலும் அவர்களுக்கு மன்னிப்பு கிடைக்காதென்றும் தெரிவித்த பிரதமர், நியாயத்தைப் பெற்றுக்கொடுப்பதுடன், குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்படும் என்றும், இலங்கை அரசாங்கமும் மக்களும் வைத்துள்ள நம்பிக்கையை உறுதி செய்வதாகவும் குறிப்பிட்டார்.

## உரும்பிராய் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹயஸ் வாகனம் மோதியதில் 42 வயது மதிக்கதக்க நபர் குறித்த இடத்திலேயே பலியானார்.

சம்பவம் தொடர்பில் வாகனச் சாரதி கைது செய்யப்பட்ட நிலையில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-75)

## 21 கொரோனா ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

04 பெண்களும் 17 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இவற்றுடன் நாட்டில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14, 440 ஆக அதிகரித்துள்ளது.

## ஜனாதிபதி வீட்டிலும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லத்தில் இவ்வாறு எரிவாயு கசிவு பதிவாகியுள்ளது என வரவு செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் நேற்று முன்தினம் பங்கேற்று பேசும் போது அவர் கூறினார்.

குறித்த சம்பவம் கடந்த நவம்பர் மாதம் 26ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. எரிவாயு கசிவு குறித்து உடனடியாக நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டது. பின்னர் புதிய எரிவாயு சிலிண்டர் ஒன்று ஜனாதிபதியின் இல்லத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஆளும் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதனையடுத்து இடம்பெற்ற தினப்பணிகளையடுத்து எழுந்த எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தமது கட்சி எம்.பி.யான மனுஷ நாணயக்கார வெள்ளிக்கிழமை சபாநாயகரிடம் முறைப்பாடு ஒன்றை செய்ய சென்ற போது, அரச தரப்பின் பிரதான கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட அரச தரப்பினர் அவரை அச்சுறுத்தியதாக சபாநாயகரின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

அத்துடன் அரச தரப்பு உறுப்பினர்கள் எமது பக்கத்துக்கு வந்து,தாக்க முற்பட்டனர் , தள்ளிவிட்டார்கள். இந்த சபையை உங்களால் கட்டுப்படுத்த முடியாதா? 5நிமிட நேரத்தை வழங்குவதற்கு நீங்கள் இணங்கி இருந்தீர்கள். ஆனால் அரச தரப்பு பிரதம கொரடாவின் பேச்சைக்கேட்டு நீங்கள் அதனை வழங்க மறுத்தீர்கள். பாராளுமன்றத்தை இவ்வாறு வழிநடத்த இடமளிக்கவேண்டாம். மக்கள் இந்த பாராளுமன்றம் குறித்து விரக்தியடைந்துள்ளனர் என்றார்.

ஆனால் இதனை மறுத்த சபை முதல்வரான அமைச்சர் தினேஷ் குணவர்தன மனுஷ நாணயக்கார எம்.பி. சபாநாயகருக்கு அருகில் சென்று அவரை அச்சுறுத்தியதாகவும் சபாநாயகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தமது கடமையெனவும் கூறினார் .அத்துடன் சம்பவம் இடம் பெற்றுக்கொண்டிருக்கையில் சபாநாயகரை நோக்கி சென்ற எதிர்க்கட்சி உறுப்பினர் சபையை நடத்திச்செல்ல உதவி செய்யவேண்டியது எமது கடமை. அதனால் சபாநாயகரை பாதுகாக்கவே எமது உறுப்பினர்கள் தலைமை ஆசனத்தை நோக்கி சென்றனர். அதனால் சபாநாயகரை நோக்கிச்சென்ற எதிர்தரப்பு உறுப்பினரின் செயலையே முதலாவது கண்டிக்கவேண்டும். அதேபோன்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வழங்கிய கடிதத்தை எதிர்க்கட்சி பிரதமகொறடா சபாநாயகருக்கு வழங்காமை தொடர்பாக விசாரணைக்குட்படுத்தவேண்டும் என்றார்.

இதன்போது மீண்டும் எழுந்த லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. , எமது உறுப்பினர் பாராளுமன்ற செயலாளர் இருக்கும் இடத்துக்கு சென்றது. தனக்கு கிடைக்க வேண்டிய 5 நிமிட நேரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிப்பதற்காகும். அவ்வாறு இல்லாமல் சபாநாயகரை அச்சுறுத்த செல்லவில்லை. அரச தரப்பு பிரதம கொரடாவும் ஒருசில உறுப்பினர்களுமே அந்த இடத்துக்கு வந்து எமது உறுப்பினரை தள்ளிவிட்டார்கள் என்றார்.

அதனைத்தொடர்ந்து எழுந்த எதிர்க்கட்சி எம்.பி. மனுஷ நாணயக்கார , எனது உரையின்போது நேரம் தொடர்பான பிரச்சினை இருந்தது. மேலதிக நேரத்தை பெற்றுக்கொண்டால், இல்லாமல்போன 5நிமிட நேரத்தை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்து அதனை நீங்கள் பெற்றுத்தந்தீர்கள். ஆனால் அரசதரப்பு பிரதம கொரடா ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால், எனது பேச்சை நீங்கள் இடைநிறுத்தினீர்கள். அதனால் இதுதொடர்பாக செயலாளரிடம் குறிப்பிடவே அந்த இடத்துக்கு நான் வந்தேன். நான் உங்களை அச்சுறுத்தினேனா? ஆனால் சபாநாயகரின் ஆசனத்துக்கு பின்னால்வந்த ஜோன்ஸ்டன் , மிகவும் மோசமான தூஷண வார்த்தைகளால் என்னை பேசினார். அதுமாத்திரமல்லாது இராஜாங்க அமைச்ச்சர் காஞ்சன விஜேசேகர என்னை தள்ளிவிட்டார். சக எம்.பி. ஹர்ஷடி சில்வா மற்றும் படைக்கல சேவிதர்களும் எனது அருகில் இருந்ததால் அவர்கள் என்னை பாதுகாத்தனர். இல்லாவிட்டால் நான் கீழே விழுந்திருப்பேன் . இதுவா பாராளுமன்ற ஜனநாயகம் என கேட்கின்றேன் என்றார்.

அதனைத்தொடர்ந்து எழுந்த நளின் பண்டார தெரிவிக்கையில், சபாநாயகரின் ஆசனத்துக்கு பின்னால், எமது பக்கம் வந்து எமது உறுப்பினரை தாக்கிய அரச தரப்பு பிரதமகொறடாவின் செயலை நாங்கள் கண்டிக்கின்றோம். இதுதொடர்பாக விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

இதனையடுத்து அரச தரப்பினருக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையில் தர்க்கம் வெடித்தது. இரு தரப்புக்களும் சபைக்கு உதவாத வார்த்தைகளை தாராளமாக பாவித்ததுடன் கூச்சல் குழப்பங்களில் ஈடுபட்டனர்.

# அமைச்சுக்களின் செயலாளர்கள், தூதுவர் நியமனத்துக்கு பாராளுமன்றம் அனுமதி

பா. கிருபாகரன்

ஏழு இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் தூதுவர் ஒருவரின் நியமனத்துக்கு பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவில் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவில் மாலைதீவுக்கான இலங்கை தூதுவராக ஏ.எம்.ஜே.சாதிக்கை நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தவிரவும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சின் செயலாளராக திருமதி.கே. எம்.எஸ்.டி.ஜயசேகரவின் நியமனத்துக்கும், உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளராக .என்.எச்.எம்.சித்ரானந்தவின் நியமனத்துக்கும் உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேதவைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சின் செயலாளராக செல்வி.ஏ.கே.டபிள்யூ. டபிள்யூ.எம்.என்.கே.வீரசேகரவின் நியமனத்துக்கும், பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளராக கலாநிதி.டி.பி.எஸ். அமல்ஹர்ஷ்.டி.சில்வாவின் நியமனத்துக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத் திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளராக எஸ்.ஜீ.விஜய பந்துவின் நியமனத்துக்கும், கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளராக பொறியியலாளர் கீர்த்தி ரஞ்சித் அபேசிறிவர்த்தனவின்நியமனத்துக்கும் அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால் வளர்ப்பு, கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சின் செயலாளராக ஜயந்த சந்திர சோமவின் நியமனத்துக்கும் உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

## பாகிஸ்தானில் இலங்கையர் கொலை; பாராளுமன்றத்தில் கடும் கண்டனம்

பா. கிருபாகரன்



பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற த்தில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டதுடன் பாகிஸ்தானிலுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் கோரிக்கை விடப்பட்டது.

பாகிஸ்தானில் சியால்கோட்டில் உள்ள வசிராபாத் வீதியில் அமைந்துள்ள, தனியார் தொழிற்சாலை ஒன்றில் முகாமையாளராக பணிபுரியும் பிரியந்த குமார என்ற இலங்கையைச் சேர்ந்தவர் பொதுமக்கள் முன்னிலையில் வைத்து அடித்து சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டு அவரின் உடல் தீவைத்து எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே பாராளுமன்றத்தில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம் பவம் தொடர்பில் பாகிஸ்தான் தூதரகத்திடம் வினவிய போது அவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அறிந்துள்ள போதும் அது தொடர்பில் முறைப்பாடுகள் எதுவும் கிடைக்க வில்லையென தெரிவிக்கப்பட்டதாகவும் சபையின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. அத்துடன் இந்த சம்பவம் தொடர்பில் பாகிஸ்தான் பிரதமர் விடுத்துள்ள அறிவிப்புக்கு வரவேற்பும் தெரிவிக்கப்பட்டது.

அரச தரப்பு எம்.பி. யான சாந்த பண்டாரவே இவ்விடயத்தை சபைக்கு கொண்டு வந்த நிலையில் அமைச்சர் பந்துல குணவர்தன எதிர்க்கட்சி எம்.பி. யான ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் தமது கருத்துக்களை முன்வைத்தனர்

## மக்களை சூழ்ந்துள்ள இருளை அகற்றி இனி மின்சூளம் ஏந்தி வருவோம்

### -இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு-



தமிழ் முற்போக்கு கூட்டணியானது மின்சூளாக இனி ஒளியை பாய்ச்சும். உங்களை சூழ்ந்துள்ள இருளையும் அகற்றும். மூன்று கட்சிகளின் புரிந்துணர்வுடனான பயணத்தால் எதிர்காலமும் பிரகாசமாக இருக்கும். என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கடந்த வருடம் தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சுமார் 300 மாணவ, மாணவிகளுக்கு பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று அட்டன் ஹைலன்ஸ் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கல்வி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம். ராம், மத்திய மாகாண மேலதிக கல்வி பணிப்பாளரும், அட்டன் வலய கல்வி பணிப்பாளருமான அருந்ததி சத்தியேந்திரா, பேராசிரியர் எஸ்.விஜயசந்திரன், அட்டன் ஹைலன்ஸ் கல்லூரியின் அதிபர் ஆர்.ஸ்ரீதர் மற்றும் ஹைலன்ஸ் கல்லூரியின் ஆசிரியர்கள் உட்பட ஏனைய பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து இங்கு கருத்து தெரிவிக்கையில், ஒமிக்ரோன் என்ற புதிய வைரஸ் பிறழ்வும் உருவாகியுள்ளது. இந்நிலையில் உலக நாடுகள் திண்டாடுகின்றன. இலங்கையிலும் பல பிரச்சினைகள் தலைவிரித்தாடுகின்றன. குறிப்பாக பொருட்களின் விலைகள் நாளாந்தம் அதிகரிக்கின்றன.

அதேபோல காஸ் பிரச்சினையும் பெரும் பிரச்சினையாக உள்ளது. எந்நேரத்தில் எந்த பாகம் வெடித்து சிதறும் என தெரியவில்லை. இந்நிலைமைக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களே பொறுப்புக்கூறவேண்டும். விஞ்ஞானப்பூர்வமான நடைமுறைகளை அவர்கள் முறையாக பின்பற்றியிருந்தால் இந்நிலைமையை தவிர்த்திருக்கலாம். இது மனித உயிர்களுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். எனவே, உறுதியான தீர்வை அரசு முன்வைக்க வேண்டும்.

அதேவேளை, தமிழ் முற்போக்கு கூட்டணி அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. டோர்ச் (மின்சூளம்) சின்னம் எமக்கு வழங்கப்பட்டுள்ளது. மூன்று பெட்டரிகளும் இயங்கு நிலையில் இருந்தால்தான் மின்சூளத்தால் பிரகாசமாக ஒளியை பாய்ச்ச முடியும். அதேபோல கூட்டணியில் அங்கம் வகிக்கும் மூன்று கட்சிகளுக்குமிடையில் சிறந்த புரிந்துணர்வு உள்ளது. 6 வருடங்களாக கூட்டணியாக பயணிக்கின்றோம். இனி மின்சூளம் ஏந்தி வருவோம். மக்களை சூழ்ந்துள்ள இருளை அகற்றி, ஒளியை பாய்ச்சும் விதத்தில் எமது பயணம் தொடரும்.- என்றார்.

## சில தேவைகளுக்காக மட்டும் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க அனுமதி

நாட்டில் சில தேவைகளுக்காக மட்டும் எரிவாயு சிலிண்டர்களை விநியோகம் செய்வ தற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதன் படி கைத்தொழில் மற்றும் மயான பயன்ப ட்டு ஆகிய வற்றுக்காக மட்டுமே இந்த அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

நுகர்வோர் விவகார அதிகார சபையினால் லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் எரிவாயு நிறுவனங்களுக்க இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், வீட்டுப் பாவனைக்காக சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.லிட்ரோ கேஸ் லங் கா லிமிடெட் மற்றும் லாஃப்ஸ் கேஸ் பிஎல்சி ஆகிய நிறுவனங்களுக்கு உள்நாட்டு டுக எரிவாயு சிலிண்டர் விநியோகத்தை இடைநிறுத்துமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ண நேற்று தெரிவித்திருந்தார். நவாலட அநசஉயி வயண வாசனை அளவை 14 ஆக உயர்த்தும் வரை விநியோகத்தை நிறுத்துமாறு இரு நிறுவனங்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதாக அவர் தெரிவித்திருந்தார். இந்நிலையில், கைத் தொழில் மற்றும் மயான பயன்பாட்டிற்காக மாத்திரம் எரிவாயு சிலிண்டர்களை விநி யோகிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## இராணுவத்தளபதி வழிகாட்டலில் பசுமை விவசாயத்திற்கான செயற்பாட்டு மையம்



இலங்கையை பசுமை நாடாக உருவாக்க தேவையான முக்கிய விடயங்கள் அடையாளம் காணப்பட்டிருக்கும் நிலையில் அவ்விடயங்களை முறையாக, நிலையாக செயற் படுத்துவதற்கு 'பசுமை விவசாய செயற்பாட்டு மையம்' ஒன்றை உருவாக்க ஜனாதி பதி கோட்டபாய ராஜபக்ஸ தீர்மானித்துள்ளார்.

பாதுகாப்புப் படைகளின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் வழிகாட்டலின் கீழ், இந்த மையம் செயற்படுத்தப்படவுள்ளது. கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனம் மற்றும் இலங்கை உர நிறுவனம் ஆகியவற்றை ஒன்றி ணைத்து, தேசிய சேதனப் பசளை மற்றும் விநியோக நிறுவனமாகச் செயற்படுத்துதல், தரமான திண்ம மற்றும் திரவ சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவித்தல், உரிய நேரகாலத்துக்குள் விவசாயிகளுக்கு உரத்தை வழங்குதல், மாவட்ட ரீதியில் உரத் தேவையைப் பூர்த்தி செய்தல், நெல், சோளம் மற்றும் ஏனைய தானியங்கள், மரக்கறி மற்றும் பழ உற்பத்திகளை மேம்படுத்தல்,

பசுமை விவசாயத்துக்கு பொருத்தமானதும் தரமானதுமான விதைகள் மற்றும் கன்றுகளை உருவாக்குவதை ஊக்குவித்தல், விவசாயப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுடன் தொடர்புடைய உயர் மட்ட அதிகாரிகள் முதல் கீழ் மட்ட அதிகாரிகளை ஒன்றிணைத்தல், உணவுப் பயிர்களை விநியோகித்தல், சேதன உணவுப் பயன்பாடு தொடர்பாக சுகாதாரக் கல்வி மற்றும் தொடர்பாடல் நிகழ்ச்சித்திட்ட மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு செயற்பாடுகளுக்கு இந்த மையம் முன்னுரிமை வழங்க வேண்டுமென்று, ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார். காலநி லை மாற்றங்களுக்கு நிலையான தீர்வுகளுடன் கூடிய பசுமை சமூகப் பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்பும் இலங்கையின் நோக்க த்துக்காகப் பயணிக்கவென ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணிகள் இரண்டுடன், அவசியமான தொடர்பாடல்களை மேற்கொள்வதும் இந்நிலையத்தின் கடமை யாகும். ஜனாதிபதியுடன் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள தேசிய பசுமை பொருளாதாரச் சபையை ஏற்பாடு செய்வதற்கு அவசியமான திட்டத்தை வகுப்பதும், இந்தப் பசுமை விவசாய மையத்தின் பொறுப்பாகும்.

## கொலைகார காஸ் சிலிண்டர்களை திரும்ப பெறு; இழப்பீடு கொடு- பெண்கள் இயக்கம் போராட்டம்

நாட்டில் இடம்பெற்ற எரிவாயு சிலிண்டர் வெடிப்புக்களுக்கு எதிராகவும், பொருட்களி ன் விலை அதிகரிப்பிற்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்குமாறு கோரி, சுதந்திரத்தி ற்கான பெண்கள் இயக்கத்தினால் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன் னெடுக்கப்பட்டது. பிரச்சாரத்தின் முக்கிய கருப்பொருள் கொலைகார எரிவாயு சிலிண்டர்களை திரும்ப பெறு! இழப்பீடு கொடு! மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலையை குறை நிறுவனங் களின் நலனுக்காக இந்த நாட்டில் உள்ள சாதாரண மக்களின் உயிர்களை அரசாங்கம் பலிகொடுத்துள்ளதாக சுதந்திரத்திற்கான பெண்கள் இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஹேமமாலி அபேரத்ன தெரிவித்துள்ளார். மேலும், பொதுமக்களுக்கு பாதுகாப்பான எரிவாயுவை வழங்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கவும் அரசை கேட்டுக் கொண்டார்.

# உண்மையை மறைக்கும் வகையிலேயே சகல செயற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கின்றன

### - எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ-

நாட்டில் சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகத்தை இடை நிறுத்துவதற்கு தீர்மானி க்கப்பட்டிருக்கும் நிலையிலும், அது தொடர்பான உண்மையை மறைக்கும் வகையிலா ன அனைத்து செயற்பாடுகளும் இடம்பெறுவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கூறியிருக்கின்றார்.

மீகஹஜதுர புராதன விகாரையில் 25 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட ஞாயிறு போதனைகள் பாடசாலை கட்டிடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

உள்ளடக்கத்தில் உள்ள பிரச்சினை காரணமாக அந்த நிறுவனங்கள் விநியோகம் செய்வதை நிறுத்துவதாகக் கூறினாலும், உண்மையான கதை மக்களை ஏமாற்றுவதேயாகும். சந்தையில் 72 வீதம் எரிவாயு ஏகபோகம் லிட்ரோ எரிவாயு நிறுவனத்திற்கு சொந்தமானது. தேவைக்கு ஏற்ற விநியோகம் இல்லாததால் அவசரமாக நெருக்கடியில் விழுந்த நிறுவனம் கசிவுத் தடுப்பு தொடர்பான பரிசோதனைகள் நிறுத்தப்பட்டு, எரிவாயு சந்தைக்கு வழங்கப்பட்டுள்ளது. இது முழு நாட்டையும் பெரும் ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது.

நாடு முழுவதும் வெடிப்பு சம்பவங்கள் பதிவாகிக் கொண்டிருக்கின்றன. இந்த குற்றத்திற்கு அரசாங்கம், சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட எரிவாயு நிறுவனமே பொறுப்பு கூற வேண்டும்.

இது ஒரு தண்டனைக்குரிய குற்றச் செயலாகும். இது திட்டமிட்ட குற்றமாகும். இதனுடன் தொடர்புடையவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அரசாங்கம் உடனடியாக விளக்கமளிக்க வேண்டும்.

## கல்லுண்டாயில் விபத்து; ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்-பொன்னாலை வீதியின் கல்லுண்டாய் பகுதியில்; மோட்டார் சைக்கிளும் முச்சக்கர வண்டியும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரே காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பொன்னாலை நோக்கி பயணித்த முச்சக்கரவண்டி கல்லுண்டாய் வைரவர் கோவிலடியில் திரும்பும் போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (75)

தினக்குரல்
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்பிளிகேஷன் (பிரைவேட்) லிமிடெட்
இலக்கம் : 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
ஞாயிற்றுக்கிழமை 05 டிசம்பர் Sunday 05th December 2021

## சகல சமூகத்தவரையும் உள்ளீர்த்துக்கொள்ளுதல்

நாடுகள் பலவற்றில் பெரும்பாலான அரசியல்வாதிகளின் அரசியல்,அழகான சொல்லாடல்களுக்குள் அடக்கிவிடப்பட்டிருக்கிறதாக தோன்றுகிறது.இலங்கையை பொறுத்தவரை இது தமிழ் மக்களின் உடனடி கவலைகளை கூட கவனத்தில் கொள்ள மறுக்கிறதாகவே தோன்றுகிறது. அதே வேளை, ஆட்சியதிகாரத்தை தம்வசம் வைத்திருப்போர் பொருளாதாரத்தில் கவனம் செலுத்துங்கள் என்ற தொனியில் பேசுகிறார்களே தவிர, தமிழ் மக்களின் குறிப்பாக வடகிழக்கை வரலாற்றுபூர்வ வதிவிடமாக கொண்ட மக்களின் அரசியல் அபிலாசைகள், அடிப்படை பிரச்சினைகளுக்கு நீண்டகாலமாக நியாயபூர்வமான தீர்வு காணப்படாத நிலையில் அந்த மக்களின் கோரிக்கைகளையும் உள்வாங்கிக் கொண்டு அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்தொருமைப்பாட்டுடனான இணக்கப்பாடொன்று எட்டப்படுவதற்கான சாத்தியப்பாடு எதுவும் தென்படவில்லை .எதிர்காலத்தை கருத்திற் கொள்ளுமாறும் பங்களிப்பு செலுத்துமாறும் பிளவுபடுவதை விடுத்து ஒன்றுபட்டு நிற்குமாறும் கூறப்படுவதை அடிக்கடி கேட்க முடிகிறது.இவையெல்லாம் கேட்பதற்கு சிறப்பான பரிந்துரைகளாகவும் அவற்றில் சில பொருத்தமானவையாகவும் தென்படுகின்றன.

உண்மையில் அரசியல் என்பது சமூகங்களை ஒன்றுபடுத்துவதிலும் பார்க்க பிளவுபடுத்துவதற்கே அதிகளவுக்கு உதவுகின்றது போன்று தோன்றுகின்றது.ஒற்றுமைக்காகவே அனைவரும் பாடுபடுவதாக கூறப்படும் அந்த கற்பனையான ஒற்றுமையில், அது கடந்த காலத்தை மூடிமறைத்துவிட்டு வரலாறு, அரசியல் மற்றும் சமூகம் பற்றிய உரையாடல்களில் ஈடுபடுவதற்கு மறுப்பளிக்குமானால், அது பயனற்றதாகிவிடும்.இப்போதெல்லாம் சிவில், சமூக செயற்பாடுகளில் பெரும் மௌனம் நிலவுகிறது. தற்போதுள்ள கொரோனா வைரஸ் பெருந்தொற்று சூழ்நிலையில் அரசியலுக்கு அதிகளவுக்கு இடம் இல்லை என்பது உண்மை.புதிய அரசியல் சூழலில்,தாராளவாதத்துடன் பழைய பாணியில் பிரதான அரசியலை நடைமுறைப்படுத்துவதென்பது கடினமாகிவிட்டது.வடகிழக்கு தமிழ் மக்களை பொறுத்தவரை நாடு பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரமடைந்த காலம் முதல் தமது அடிப்படை உரிமைகள், அரசியல் அபிலாசைகளை உள்ளடக்கிய கோரிக்கைகளை யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதி உள்ளடங்கலாக நடத்தப்பட்டிருந்த தேர்தல்களில் அவர்கள் வெளிப்படுத்தியிருந்தனர்.

அத்துடன் காலத்துக்கு காலம் ஆட்சியிலிருந்துவரும் அரசாங்கங்களுக்கு தமது அரசியல் பிரதிநிதித்துவங்கள் ஊடாக தமது நிலைப்பாட்டை அவர்கள் தெளிவுபடுத்தி வருவது இப்போதும் தொடருகின்றது.அவர்கள் பேசுவதற்கு எஞ்சியிருப்பது வழக்கமான பிரச்சினைகள் மட்டுமே.நிச்சயமற்ற தன்மை என்பது விரும்பத்தகாததொன்று. இந்த தன்மை வட,கிழக்கு உட்பட நாட்டின் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அதிகளவுக்கு காணப்படுகிறது.மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகம் இல்லை.மத்தியின் பிரதிநிதியான ஆளுநர் நிர்வாகம் மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வல்ல, அந்த நிர்வாகம் என்பது தற்காலிக ஏற்பாடே தவிர, ஜனநாயக நிர்வாகத்துக்கு மாற்றாக அமையாது.மக்களால் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண நிர்வாகமே காலத்தின் தேவை. ஆனால்,மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட கடந்த 34 ஆண்டுகளில், இணைந்த வடகிழக்கு மாகாண சபையின் நிர்வாகம் மிகச்சொற்ப காலத்திலும் பின்னர் பல ஆண்டுகளின் பின்னர் கடந்த 2013 இலிருந்து 2018 வரையுமே வடக்கில் மாகாண அரசியல் நிர்வாகம் இயங்கியது.ஆயினும் அதனுடையதும் ஏனைய மாகாண சபைகளினதும் ஆயுள் காலம் முடிவடைந்தும் தேர்தல்கள் நடத்தப்படவில்லை.கடுமையான அணுகுமுறையால், பிரதேச மக்கள் அரசியல் உறுதியற்ற தன்மையையும், நிச்சயமற்ற நிலையையும் எதிர்கொள்கின்றனர்.

மக்கள் தாங்களே தெரிவு செய்யும் அரசாங்கம் நிச்சயமாக மத்தியின் ஏற்பாட்டை விட உயர்ந்தது.எனவே மாகாண மக்களின் பிரச்சினைகளை தீர்க்க ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகத்தை நிறுவுவதற்கு கொழும்பு நீண்ட காலம் காத்திருக்கக்கூடாது.உண்மையான ஜனநாயகத்தின் சகாப்தத்தை உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கடந்த பல தசாப்தங்களாக வடகிழக்கு மக்கள் பல ஏற்ற தாழ்வுகளை கண்டுள்ளனர்.மக்களின் உண்மையான பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு மக்கள் ஆட்சி அமைக்க பிராந்திய மட்டத்தில் அரசியல் செயல்முறையை தொடங்குவதற்கு மத்திய அரசுக்கு ஜனநாயக வழிமுறையில் அழுத்தம் கொடுக்க வேண்டும். இதனால் மக்கள் தங்கள் பிரச்சினைகளுக்கு பதிலளிக்கக் கூடிய ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் நிர்வாகத்தை கொண்டிருக்க முடியும்.எனவே முக்கிய அரசியல் கட்சிகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு பிராந்திய மட்டத்தில் அரசியல் செயல்முறையை விரைவில் ஆரம்பிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும்.மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்தி அவற்றுக்கான அதிகாரங்களுடன் நிர்வாகத்தை முன்னெடுக்க இடமளிக்கப்படவேண்டும்.அது அவர்களுக்கு அவர்களின் அபிலாசைகள் ,அடிப்படைப் பிரச்சினைகளில் ஒரு பகுதியையேனும் தீர்த்துவைக்கக்கூடும்.எனவே நிச்சயமற்ற தன்மையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் அந்நியப்படுத்தப்பட்ட மக்களுக்கு அவர்களின் சொந்த நிர்வாகத்தை வழங்கி,அவர்களை உள்ளீர்த்துக் கொள்வதற்கும் துரித நடவடிக்கைகள் அவசியம்.

# கோத்தாவை போத்தாவாக மாற்றுதல்

**மறுசீரமைப்புத் திட்டத்திற்கான கதவுகளைத் திறக்க முடிந்தால், அதை அமுல்படுத்த தென்னாபிரிக்காவைப் போன்று துணைச் சட்டம் ஒன்றை உள்ளீர்த்துக் கொள்ள வேண்டும். தற்போதைய சமூக நெருக்கடி நிலைமையில் கோத்தாவை போத்தாவாக மாற்றினால் மட்டுமே இவை அனைத்தும் சாத்தியமாகும்.**



● விக்டர் ஐவன்


இலங்கைக்கு மக்கள் அரசியலமைப்பு தேவைப்படுகிறது என்ற கருத்தை கடுமையாக விமர்சித்து 'மக்களின் அரசியலமைப்பு, மாயையும் உண்மையும்'என்ற தலைப்பில் கடந்த வாரம் 'அனித்தா' நாளிதழ் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. சட்டக் கல்லூரி நுழைவுத் தேர்வெழுதும் மாணவர்களுக்கு அறிவுறுத்தி, சட்டத்தரணியும், சட்டத்துறை விரிவுரையாளருமான நாளிதழின் ஆசிரியரால் கட்டுரை எழுதப்பட்டுள்ளது. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தினை வலுவாக நியாயப்படுத்தியவராக தென்பட்ட ஒருவராகவும் அவரை கருதமுடியும்.

அந்தக் கட்டுரையில், 'மக்கள் அரசியலமைப்பு' என்ற கருத்தீட்டுக்கு எதிராக எட்டு முக்கிய கேள்விகளை அவர் எழுப்பியுள்ளார். அவைவருமாறு: (1) இவர்கள் யார்? கோத்தாபய ராஜபக்சவுக்கு வாக்களித்த 6.9 மில்லியன் மக்களும் அவர்களில் அடங்குவர்களா? (2) மக்கள் அரசியலமைப்பு என்று அழைக்கப்படுவது எங்கிருந்து தொடங்குகிறது? அதற்கான முன்முயற்சியை யார் எடுப்பார்கள், அதற்கான அதிகாரத்தை எங்கிருந்து பெறுகிறார்கள்? (3) கிராமங்கள் , நகரங்கள் என அனைத்து மக்களும் அரசியலமைப்பில் சேர்க்கப்பட வேண்டிய விடயங்களை நேரடியாக அமர்ந்து பேச வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்களா? (4) அத்தகைய அரசியலமைப்பை உருவாக்குவதில் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் என்ன? (5) இந்த முறையில் மக்களால் தொகுக்கப்பட்ட அரசியலமைப்பின் வரைவு சட்டப்பூர்வ செல்லுபடியை எங்கிருந்து பெறுகிறது? மக்களால் உருவாக்கப்பட்டதால் மட்டும் அது சட்டமாகிவிடுமா? (6) இந்த அரசியலமைப்பு 1978 அரசியலமைப்பின் விதிகளுக்கு உட்பட்டு இயற்றப்படுமா? (7) தற்போதுள்ள அரசியலமைப்பிற்குப் புறம்பாக அது இயற்றப்பட வேண்டுமானால், அதற்கான அதிகாரத்தை அவர்களுக்கு வழங்கும் வகையில் சமீப காலங்களில் நாட்டில் புரட்சிகரமான மாற்றம் ஏற்பட்டுள்ளதா? (சுதந்திரத்திற்குப் பின்னரான இந்தியாவில் அல்லது சுதந்திரத்திற்குப் பின்னரான ஆபிரிக்காவில் கறுப்பின மக்கள் வெள்ளை மேலாதிக்கத்திலிருந்து மீண்டும் அதிகாரத்தைப் பெற்றனர்.அல்லது குறைந்த பட்சம், 1970 இல் இலங்கையில் இடம்பெற்றதுபோன்று டொமினியன் அந்தஸ்தில் இருந்து நாட்டை விடுவித்து குடியரசாக மாறுவதற்கான ஆணை இருந்ததா? ) (8) மக்கள் அரசியலமைப்பின் வரைவுக்கு யாராவது திருத்தங்களை முன்மொழிய விரும்பினால், பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் என்ன? செயல்முறை சவால் செய்யப்பட வேண்டும் என்றால், அதை எவ்வாறு ஆரம்பிக்க முடியும்?

கோத்தாபயவுக்கு வாக்களித்த 6.9 மில்லியன் மக்களும் 'மக்கள்' வகையைச் சேர்ந்தவர்கள் என்பதே முதல் கேள்விக்கான பதில். 2016 ஆம் ஆண்டில், அவர்களில் பெரும்பாலோர் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராகவும், நல்லாட்சி முறைமைக்காக நிற்கும் வேட்பாளருக்கு ஆதரவாகவும் வாக்களித்ததாக தெரிகிறது. 'மக்கள் அரசியலமைப்பு என்று அழைக்கப்படுவது எங்கிருந்து தொடங்குகிறது. அதற்கான முன்முயற்சியை யார் எடுப்பார்கள், அதற்கான அதிகாரத்தை எங்கிருந்து பெறுகிறார்கள்' என்றஇரண்டாவது கேள்விக்கான பதில் பின்வருமாறு:

புதிய அரசியலமைப்புக்கு நாடுகள் செல்ல வேண்டிய சூழ்நிலைகள் பல வடிவங்களில் உருவாகலாம். சர்வாதிகார அல்லது அடக்குமுறை ஆட்சியிலிருந்து விடுபட்ட அந்நிய ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் பெற்ற அல்லது நீண்ட மற்றும் நீடித்த உள்நாட்டுப் பூசல்களுக்குப் பிறகு சமாதானத்தை அடைந்த நாடுகளுக்கு புதிய அரசியலமைப்பு தேவைப்படலாம். அதுமட்டுமல்லாமல், வேறு இலகுவான காரணங்களுக்காக புதிய அரசியலமைப்பை நாடுகள் ஏற்றுக்கொள்ளலாம். புதிய அரசியலமைப்பைக் கோரும் மக்களின் பலமான அழுத்தங்களினாலும் சில நாடுகள் புதிய அரசியலமைப்பை உருவாக்கியுள்ளன.

மேலும், நாட்டின் அரசு தனது நடவடிக்கைகளைத் தக்க வைத்துக் கொள்ள முடியாத நெருக்கடியான சூழ்நிலைகளில் அல்லது கடுமையாக நலிவடைந்த நிலைக்கு அல்லது தோல்வியடைந்த அரசாக மாறிய நெருக்கடியான சூழ்நிலைகளில் புதிய அரசியலமைப்பை ஏற்றுக்கொள்வது சாத்தியமாகும்.1990 அளவில் தென்னாபிரிக்கா இதே நிலையில் இருந்தது. அன்றைய தென்னாபிரிக்காவில் இருந்த நிலைமையைப் போன்றதொரு நிலைமையே இன்று இலங்கையிலும் அதிகளவில் காணப்படுகின்றது. தற்போது கடுமையான நெருக்கடியில் இருக்கும் இலங்கையில் உள்ள நாங்கள் தென்னாபிரிக்காவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான பாடம் உள்ளது. கேள்வி எழுப்பியவரின் இரண்டாவது கேள்விக்கான பதிலையும் இது வழங்குகிறது.



> தென்னாபிரிக்காவில் இடம்பெற்றிருந்த இந்த வரலாற்று ரீதியான பரிசோதனையிலிருந்து இலங்கையில் நாங்கள் கற்றுக்கொள்ளக்கூடிய ஒரு முக்கியமான பாடம் உள்ளது. அரசியலமைப்பை உருவாக்கும் செயல் முறையில் எதிர்கொள்ளும் தடைகளை வழக்கமான மற்றும் பழக்கமான முறைகளால் கடக்க முடியாத தருணங்கள் இருக்கலாம். தென்னாப்பிரிக்காவில் மாற்றத்தை தோற்றுவிக்கும் திட்டத்திற்காக முதலில் மண்டேலா மற்றும் ஜனாதிபதி போத்தா பின்னர் ஜனாதிபதி டி கிளார்க் ஆகியோரால் தேர்ந்தெடுக்கப்பட்ட முறைமையானது வழக்கத்திற்கு மாறானதாகவிருந்தாலும், சட்டத்திற்கு அமைவாக இருந்தது.

**தென்னாப்பிரிக்காவும் இலங்கையும்**

தென்னாப்பிரிக்க அனுபவத்தை சுருக்கமாக பார்க்கலாம். சிறையில் இருந்த மண்டேலாவுக்கும் பிரதமர் போத்தாவுக்கும் இடையிலான முதல் சந்திப்பு 1989 இல் இடம்பெற்றிருந்தது . 1990 பெப்ரவரி 2 இல் . ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ANC) மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி மீது விதிக்கப்பட்டிருந்த தடையை அரசாங்கம் நீக்கியது. பத்து நாட்களுக்குப் பிறகு, மண்டேலா சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார். 1990 ஆகஸ்ட் 6, அன்று. அரசாங்கத்திற்கு எதிரான ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான தனது முடிவை ஆப்பிரிக்க காங்கிரஸ் அறிவித்தது.

அதுவரை இடம்பெற்ற இரகசியப் பேச்சுகளுக்குப் பதிலாக உத்தியோகபூர்வமான பேச்சுவார்த்தைகள் 1990இல் ஆரம்பிக்கப்பட்டன. 1991 இல் நிறவெறி இல்லாத ஜனநாயக தென்னாபிரிக்காவைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான செயல்முறை பற்றிய கலந்துரையாடல்கள் ஆரம்பமாகியது.பிரதமர் போத்தாவின் அரசாங்கத்தால் தொடரப்பட்ட சமாதான முன்னெடுப்புகளுக்கு தென்னாபிரிக்காவில் வெள்ளை சமூகத்தின் வலதுசாரி அரசியல் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியிடமிருந்து வலுவான எதிர்ப்பு ஏற்பட்டிருந்தது .

இத்தகைய சூழலில், ஆபிரிக்க தேசிய காங்கிரசுடன் பேச்சுவார்த்தைத் திட்டத்தைத் தொடர வெள்ளையர்களிடம் இருந்து ஆணையைப் பெறவில்லை என்று கன்சர்வேட் டிவ் கட்சித் தலைவர்தொடர்ந்து குற்றம் சாட்டி வந்ததால், வெள்ளையர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டிய கட்டாயம் பிரதமர் போத்தாவுக்கு ஏற்பட்டது.இதன் விளைவாக, 1992 மார்ச்சில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. மேலும் வெள்ளையின வாக்காளர்களில் பெரும்பான்மையினர் , 68.737 மானோர் நிறவெறிக் கொள்கையை முடிவுக்கு கொண்டு வருவதை அங்கீகரித்தனர்.

அதைத் தொடர்ந்து, 1993 ஏப்ரலில் . இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கும், புதிய அரசியலமைப்பை உருவாக்கும் செயல்முறைக்கு பொருந்தக் கூடிய 34 கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கும் அதிகாரம் அளிக்கும் ஒரு துணைச் சட்டத்தை நிறைவேற்ற இரு தரப்பும் கருத்தொருமைபாட்டை ஏற்படுத்திக் கொண்டன . பாராளுமன்றத்திற்கு வெளியில் வரையப்பட்ட சட்டமூலம், 1993 ஆம் ஆண்டின் 200 ஆம் இலக்க சட்டமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, 1994ஏப்ரல் 24 இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

ஐந்தாண்டு காலத்திற்கு சர்வகட்சி கட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும், புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டும் மற்றும் தேர்தல் நடத்தப்பட்டு புதிய அரசியலமைப்பு இயற்றப்படும் வரை ஏனைய மறுசீரமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று துணைச் சட்டம் கூறுகிறது. புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்படும் வரை அனைத்துக் கட்சி அரசாங்கம் இடைக்கால அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி செயற்படுவதாக அனுமானிக்கப்பட்டது.

தென்னாபிரிக்காவில் இடம்பெற்றிருந்த இந்த வரலாற்று ரீதியான பரிசோதனையில் இருந்து இலங்கையில் உள்ள நாங்கள் கற்றுக்கொள்ளக்கூடிய ஒரு முக்கியமான பாடம் உள்ளது. அரசியலமைப்பை உருவாக்கும் செயல்முறையில் எதிர்கொள்ளும் தடைகளை வழக்கமான மற்றும் பழக்கமான முறைகளால் கடக்க முடியாததருணங்கள் இருக்கலாம். தென்னாபிரிக்காவில் மாற்றத்தை ஏற்படுத்தும் திட்டத்திற்காக முதலில் மண்டேலா மற்றும் பிரதமர் போத்தா மற்றும் பின்னர் பிரதமர் டி கிளார்க் ஆகியோரால் தேர்ந்தெடுக்கப்பட்ட முறைமை வழக்கத்திற்கு மாறானது. ஆனால் சட்டத்தின் பிரகாரம் இருந்தது.

நிரந்தர புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படும் வரை நடைமுறையில் இருந்த இடைக்கால அரசியலமைப்பு, பாராளுமன்றத்தில் மன்றத்தில் அல்லாமல் அதற்கு வெளியில் உருவாக்கப்பட்டது. அதை உருவாக்க உதவிய மண்டேலாவோ அல்லது அவரது குழுவில் உள்ள எவரும் பாரா ளுமன்ற உறுப்பினர்களாக இருக்கவில்லை. பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத ஒரு சக்திவாய்ந்த மற்றும் சுறுசுறுப்பாகச் செயற்படும் மக்கள் குழு கூட, உண்மையான மாற்றத்திற்கான நிலை உருவாகும் நேரத்தில், அந்த இடத்தை நுட்பமாகவும், உகந்ததாகவும், சிலவேளை பாரிய அளவிலும் பாரம்பரிய கட்டமைப்பிற்கு வெளியேயும் மாற்றத்திற்கான வழியை தயார் ப்படுத்தி பயன்படுத்த முடியும் என்பதை இது காட்டுகிறது.

அன்றைய தென்னாபிரிக்காவில் நிலவியதைப் போன்றதொரு நிலைமையே தற்போது இலங்கையில் பெருமளவில் காணப்படுகிறது. மிகப் பெரிய ஆணையைப் பெற்று ஆட்சிக்கு வந்த போதிலும், மக்களிடையே கடும் எதிர்ப்பையும் கோபத்தையும் ஏற்படுத்திய நிலையில், அரசும் அதே அளவு மோசமான நிலையில் உள்ளது. நாடு எதிர்கொள்ளும் நெருக்கடி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. மக்கள் அரசாங்கத்தின் மீது மிகுந்த கோபத்தில் உள்ளனர், ஆனால் எதிர்க்கட்சிகளால் இந்த சூழலை பயன்படுத்தி தங்களை போதுமான அளவிற்கு வலுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

அதிகரித்துவரும் நெருக்கடியை எதிர்கொண்டு, அரசாங்கமும், தனது உத்தியோகபூர்வ பதவிக்காலம் முடியும் வரை, அதிகாரத்தை தக்கவைக்க முடியாத பலவீனமான நிலையில் உள்ளது. இந்தப் பின்னணியில், புதிய அரசியலமைப்புச் சட்டத்துடன் கூடிய உண்மையான கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புத் திட்டத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் மட்டுமே, ஓரளவு நம்பிக்கையுடன் எழுச்சி பெறவும், நாட்டில் ஏற்படக்கூடிய அழிவுகளின் சாத்தியக்கூறுகளைக் குறைக்கவும் முடியும். .

தென்னாபிரிக்காவைப் போன்று இந்த நாட்டிலும் உள்ள மக்கள் அமைப்புகள் ஒன்றிணைந்து இந்த நோக்கத்திற்காக தீவிரமாக குரல் எழுப்பினால், மறுசீரமைப்புத் திட்டத்திற்கு வழி வகுக்க முடியும். அத்தகைய வேலைத்திட்டத்திற்கு உகந்த தளத்தை உருவாக்குவதற்கான கதவுகள் திறக்கப்பட்டால், ஜனாதிபதி தனது பிரதிமையை மீட்டெடுக்க முடிவதுடன் அவரது ஏற்றுக்கொள்ளலைப் பாதுகாக்க முடியும். அரசாங்கமும் எதிரணி இயக்கங்களும் கூட, நாட்டின் போக்கை மாற்றியமைக்க உதவும் இத்தகைய செயல்திட்டத்தில் தீவிரமாக ஈடுபடுவதன் மூலம் ஒரு குறிப்பிட்ட அளவிலான அங்கீகாரத்தைப் பெற முடியும்.

இலங்கையால் இந்த இலக்கை அடைய முடிந்தால், தற்போது நம்பிக்கை இழந்துள்ள மக்களிடையே புதிய நம்பிக்கைக் கீற்றுக்களை ஏற்படுத்துவதுடன் ஒரு பெரிய பள்ளத்தை நோக்கி செல்லும் இலங்கையின்தற்போதைய பயணத்தை மாற்றியமைக்கவும் முடியும். அத்தகைய சீர்திருத்தத் திட்டத்திற்கான கதவுகளைத் திறக்க முடிந்தால், அதைச் செயற் படுத்த தென்னாபிரிக்காவைப் போன்றதொரு துணைச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். நிலவும் சமூக நெருக்கடிநிலையில் கோத்தாவை போத் தாவாக மாற்றினால் மட்டுமே இவை அனைத்தும் சாத்தியமாகும்.

# கொவிட் கால சிறந்த சேவையை வழங்கிய அதிகாரிகளை கௌரவித்த இராணுவம்

கொவிட்-19 தொற்று அதிகரித்திருந்த காலத்தில் தொற்றுப்பரவலைக்கட்டுப்படுத்த, அயராது உழைத்த வைத்திய அதிகாரிகள், பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று தல்சேவன விடுதியில் இடம்பெற்றது. யாழ். மாவட்ட கட்டளைத்தளபதியும் கொவிட்-19 கட்டுப்பாட்டு மையத்தின் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பாளருமான மேஜர் ஜெனரல் ஜெகத் கொடித்துவக்கு தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது வைத்திய அதிகாரிகள் 29 பேருக்கும், 86 பொது சுகாதார பரிசோதகர்களுக்கும்.210 குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன், யாழ் மாவட்ட தொற்று நோய் தொடர்பான வைத்திய நிபுணர் பீ. பரணிதரன், யாழ் போதனா வைத்தியசாலை முன்னாள் பதில் பணிப்பாளர் எஸ். பவானந்தராஜா, மற்றும் நிகழ்வுகளை சிறந்த முறையில் ஒழுங்கமைக்கும் எஸ் கருணாகரன் கோடைகாலத்தில் மக்களுக்கான உதவிகளை வழங்கிய தியாகி அறக்கொடை நிறுவனத்தினருக்கும் நினைவுக் கேடயங்கள் வழங்கப்பட்டன. (75)

# மீனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கோரி யாழில் கையெழுத்து வேட்டை




இழுவைமடி மீன் பிடித்தொழிலுக்கு எதிரான சட்டங்களை நடைமுறைப்படுத்தி நிலையான மீன்பிடித் தொழிலை உறுதிப்படுத்த கோரி நேற்று யாழ்ப்பாணத்தில் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்த மக்களிடம் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை நேற்றையதினம் யாழ்ப்பாண நகர பகுதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மக்களிடம் பெற்றுக் கொள்ளப்படும் கையெழுத்துகளுடனான மகஜர் ஜனாதிபதி, சட்டமா அதிபர் மற்றும் கடற்றொழில் அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கையெழுத்து சேகரிப்பு நடவடிக்கை இடம்பெற்ற நிலையில் நேற்றையதினம் யாழ் நகர பகுதியில் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (-40,56)

# வீதியைப் புனரமைக்க அமைச்சர் நடவடிக்கை எடுக்க கோரிக்கை



போக்குவரத்து சபையின் பேருந்து சேவை நிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கு வருகை தருகின்ற மாணவர்கள் ஆசிரியர்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

முக்கொம்பனுக்கு பேருந்து சேவையினை ஒழுங்கு செய்தது போல் வீதியினை புனரமைத்து அக்கராயனுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான பேருந்து சேவையினை நடாத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கராயன், கந்தபுரம், முக்கொம்பன், கண்ணகைபுரம் ஆகிய கிராமங்களின் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக கந்தபுரத்திற்கும் முக்கொம்பனுக்கும் இடையிலான மூன்று கிலோமீற்றர் வரையான வீதி சேதமடைந்த நிலையில் நடைபெற்ற இலங்கை

முக்கொம்பன் மகா வித்தியாலய ஆசிரியர்களின் போக்குவரத்து நெருக்கடியினை தாங்கள் தீர்த்து வைத்தது போல் மூன்று கிலோ மீற்றர் வீதியினை புனரமைப்பதன் மூலம் யாழ்ப்பாணத்திற்கான பேருந்து சேவையை அக்கராயன் வழியாக நடத்துவதால் ஆசிரியர்கள் மாணவர்கள் இதனால் பெரும் நன்மையடைவார்கள். கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் என்ற வகையில் இதற்கான நடவடிக்கையினை தாங்கள் எடுக்க வேண்டும் என கோருகின்றோம் என இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (27)

# பேருந்து நிலையத்திற்கான அடிக்கல் நாட்டல்



முல்லைத்தீவு பேருந்து நிலையத்திற்கான இறுதிக் கட்ட வேலைகளுக்கான அடிக்கல் நேற்று முன்தினம் நாட்டப்பட்டதாக கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, முல்லைத்தீவு பேருந்து நிலையத்தின் வேலைகள் நிறைவு பெறாமல் இருந்த நிலையில் இவ் வேலைத் திட்டத்தினை முழுமையாக நிறைவு செய்வதற்கான ரூபா.107,476,042.29 நிதி செலவில் அமைய உள்ள வேலைகளுக்கான அடிக்கல்லே நேற்று முன்தினம் நாட்டப்பட்டது.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர், வடமாகாண பிரதம செயலாளர், முல்லைத்தீவு மேலதிக மாவட்டச் செயலாளர், கரைதுறைபற்று பிரதேச செயலாளர், நகர அபிவிருத்தி சபையின் பணிப்பாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கரைதுறைபற்று பிரதேச சபையின் உறுப்பினர்கள், பொறுப்பதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர் என கரைதுறைபற்று பிரதேச சபை தவிசாளர் தெரிவித்தார்.

# பேருந்து சேவை நடாத்துவதற்கு இணக்கம்

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு மாணவர்களை பாடசாலைகளுக்கு ஏற்றி இறக்குவதற்கு தனியார் பேருந்து சங்கம் இணக்கப்பாடு தெரிவித்துள்ளதாக முல்லைத்தீவு மேலதிக மாவட்டச் செயலாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது, நேற்று முன்தினம் மாவட்டச் செயலகத்தில் போக்குவரத்து துறையினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இவ் இணக்கபாடு எட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மாந்தை கிழக்கு மாணவர்களை பாடசாலைகளுக்கு காலையில் ஏற்றுகின்ற தனியார் பேருந்து பாடசாலை முடிந்தவுடன் மாணவர்களை ஏற்றுவதில்லை என்பது தொடர்பாக மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஆராயப்பட்டது.

நேற்று முதல் மாணவர்களை வீடு திரும்பக் கூடிய வகையில் தனியார் பேருந்து சேவை நடாத்துவதற்கு இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டது. துணுக்காயில் உள்ள தனியார் பேருந்து சங்கத்தின் நபர் ஒருவரே இப் பேருந்து சேவை நடாத்துவதற்கு பொறுப்பாக இருப்பார் எனவும் மேலதிக மாவட்டச் செயலாளர் தெரிவித்தார். இதேவேளை கொரோனா தொடங்குவதற்கு முன்னர் பாடசாலை மாணவர்கள் வீடு திரும்பக் கூடிய வகையில் தனியார் பேருந்து சேவை மாந்தை கிழக்கில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (27)

# கிராம முன்னேற்றச் சங்க கட்டிடம் மீளவழங்கல்



பிரான்பற்று கிராம முன்னேற்றச் சங்க கட்டிடம் முறைப்படியாக வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளரினால் மீளவழங்கப்பட்டது.

பிரான்பற்று கலைமகள் பாடசாலையின் கல்வித்தேவைக்காக வழங்கப்பட்ட கிராம முன்னேற்ற சங்க கட்டிடம் வலிகாமம் வலய கல்விப்பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரனால் கிராம முன்னேற்றச்சங்கத்தின் தலைவர் சி.மகேந்திரனிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

முன்னாள் வலி.தென் மேற்கு பிரதேச செயலாளர் நா.வேதநாயகனின் பணிப்பின் பேரில் பிரான்பற்று கலைமகள் பாடசாலையின் கல்வித்தேவைக்காக கிராம முன்னேற்றச்சங்க கட்டிடம் வழங்கப்பட்டது.

இவ்வாறு வழங்கப்பட்ட கிராம முன்னேற்றச்சங்க கட்டிடம் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனின் வேண்டுகோளுக்கு அமைய பிரான்பற்று கிராம அதிகாரி எஸ்.சங்கரராஜ் முன்னிலையில் வழங்கப்பட்டது.

# சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் அனுஷ்டிப்பு

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் நேற்று முன்தினம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாலிநகர் பகுதியில் அமைந்துள்ள மாற்றுத் திறனாளிகள் அமைப்பினால் கொண்டாடப்பட்டது. பாலிநகர் மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் தலைவர் தம்பிமுத்து சிவனடியானின் தலைமையில் மங்கள விளக்கேற்றலுடன் இடம்பெற்ற நிகழ்வில் மாந்தை கிழக்கு உதவி பிரதேச செயலாளர்,மல்லாவி பிரதேச பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக சேவை திணைக்கள உத்தியோகத்தர், மதகுருமார், CPR திட்ட முகாமையாளர்கள், மற்றும் மாற்று வலுவுள்ள உறவுகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் ஞாபகார்த்தமாக பயன்தரு மரங்கள் நாட்டப்பட்டதுடன் மாற்று வலுவுள்ளோருக்கான விளையாட்டு நிகழ்வுகளும், உலருணவு பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டது. (15)

# மறைந்த எழுத்தாளர் கே.எஸ். ஆனந்தனுக்கான அஞ்சலி நிகழ்வு

மறைந்த எழுத்தாளர் இணுவையூர் கே.எஸ். ஆனந்தனுக்கான அஞ்சலி நிகழ்வு இன்று முற்பகல்-10 மணி முதல் இணுவில் அறிவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை முன்னாள் தலைவரும், இணுவில் வேரும் விழுதும் அமைப்பின் அமைப்பாளருமான பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், இணுவில் கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் கலாநிதி.கந்தையா ஸ்ரீகணேசன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன், கவிஞர் வீரா, ஆசிரியர் ந.தவசோதிநாதன் ஆகியோர் கருத்துரைகள் ஆற்றுவர். (18)

# கூட்டுறவுப் பெரியார்

**அமரர் வீரசிங்கம் அவர்களின் 57 வது நினைவு தினம்**

காலம்: 05.12.2021 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மு.ப. 10.00 மணி

அன்னாரின் நினைவு மண்டபமான கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் சபைத் தலைவர் திரு.தி.சுந்தரலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் நினைவுப் பேருரையை அருணோதயாக் கல்லூரியின் அதிபர் திரு.நா.கேதீஸ்வரன் அவர்கள் நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன் நீண்டகாலம் கூட்டுறவுப் பணி செய்த கூட்டுறவாளர்களும் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

அனைத்து கூட்டுறவாளர்களையும் ஆர்வலர்களையும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கொவிட்-19 தாக்கம் காரணமாக சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றிக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

-யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை.


## தினக்குரல் சிறு விளம்பரங்கள்

**தேவை**

வெள்ளவத்தையில் Pharmacy இற்கு அனுபவமுள்ள Staff (Sales Cash, Accounts) தேவை. G.C.E (A/L) படித்தவர்களுக்கும், அனுபவமுள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். T.P: 077 3013774

**தேவை**

வெள்ளவத்தையில் உள்ள பற்சிகிச்சை நிலையம் ஒன்றுக்கு முழுநேர பெண் உதவியாளர் தேவை. T.P : 077 3556574

**மணமகன் தேவை**

1986, யாழ். கத்தோலிக்க நளவர், பூசம், Teacher, திருகோணமலை, பதிவு # 5039. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

**மணமகன் தேவை**

1990, யாழ். கிறிஸ்தவம் (NRC), பள்ளர், Radiographer, யாழ்ப்பாணம், பதிவு # 5253. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

**மணமகன் தேவை**

1994, யாழ். கிறிஸ்தவம் (NRC), கோவியர், Beautician, கொழும்பு, பதிவு # 5386. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை.Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

**மணமகன் தேவை**

1991, யாழ். கத்தோலிக்க கோவியர், Software Engineer, பிரான்ஸ், பதிவு # 5738. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

**மணமகன் தேவை**

1992, யாழ்ந்து கோவியர், உத்திரட்டாதி, Program Manager, யாழ்ப்பாணம், பதிவு # 6113. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

**மணமகன் தேவை**

1994, யாழ். கிறிஸ்தவ வேளாளர், பூசம், Bank, கொழும்பு, பதிவு # 6158. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

**மணமகன் தேவை**

1990, மட்டக்களப்பு, கிறிஸ்தவ வேளாளர், Admin Officer, கொழும்பு, Divorced, பதிவு # 6348. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

**மணமகன் தேவை**

1993, யாழ்ந்து பள்ளர், ரேவதி, Development Officer, கிளிநொச்சி, பதிவு # 6423. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

**மணமகன் தேவை**

1990, யாழ்ந்து வேளாளர், உத்திரட்டாதி, Teacher, வவுனியா, Divorced, பதிவு # 6439. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

**மணமகன் தேவை**

1990, யாழ். கிறிஸ்தவ வேளாளர், மிருகசீரிடம், Bank, கொழும்பு, Divorced, பதிவு # 6484. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

**மணமகன் தேவை**

1994, யாழ். கிறிஸ்தவ நளவர், சதயம், Bank, யாழ்ப்பாணம், பதிவு # 6544. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

**மணமகன் தேவை**

1989, யாழ். கிறிஸ்தவ வேளாளர், Development Officer, யாழ்ப்பாணம், பதிவு # 6555. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

**மணமகன் தேவை**

1993, யாழ். கிறிஸ்தவ பள்ளர், Teacher, உருத்திரபுரம், பதிவு # 6647. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

**மணமகன் தேவை**

1993, யாழ்ந்து பள்ளர், பூசம், Engineer, மன்னார், பதிவு # 6740. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

**மணமகன் தேவை**

1990, யாழ்ந்து வேளாளர், சதயம், Teacher, திருநெல்வேலி, பதிவு # 6849. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

**மணமகன் தேவை**

1994, யாழ்ந்து நளவர், அஸ்வினி, Auditor, யாழ்ப்பாணம், பதிவு # 6835. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

**மணமகன் தேவை**

1985, யாழ்ந்து விஸ்வகுலம், திருவோணம், Development Officer, யாழ்ப்பாணம், பதிவு # 7016. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

**மணமகன் தேவை**

1988, யாழ்ந்து வேளாளர், கேட்டை, Doctor, கொழும்பு, பதிவு # 7029. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

**தேவை**

O+ குருதி வகையைச் சேர்ந்த 27 வயதுடைய ஆண் ஒருவருக்கு O+ குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத்தேவை. உதவுபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். ஆண், பெண் 20-45 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். தொடர்புகளுக்கு : 076 8974925, 077 1661476

**மணமகன் தேவை**

1994, யாழ்ந்து விஸ்வகுலம், அனுஷம், Teacher, யாழ்ப்பாணம், பதிவு # 6650. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

**மணமகன் தேவை**

1982, யாழ்ந்து வேளாளர், ரோகிணி, Accountant, கொக்குவில், Divorced பதிவு # 6308. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு, மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04.

# யாழ்ப்பாணத்தில் தடைப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக சம்பிக்க ரணவக்க அரசாங்கத்திடம் கோரல்



யாழ்ப்பாணத்தில் தடைப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதியை ஒதுக்கி மக்கள் சார்ந்த திட்டங்களை முன்னெடுக்குமாறு அரசாங்கத்திடம் முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை வந்திருந்த முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்று சனிக்கிழமை முற்பகல் தற்போதைய நிலைமை தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டும் வகையில் யாழ்.நகரில் துண்டுப் பிரசுர விநியோகத்தை மேற்கொண்டிருந்தார். இதன் போது; ஊடகங்களுக்கு ; கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்:

நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் கொழும்பு மற்றும் காலி போன்ற நகரங்களைப் போன்று யாழ். நகரத்தினை நவீனமயமாக மாற்றுவதற்கு பல மில்லியன் ரூபா செலவில் பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக தூர இடங்களுக்கான பேருந்து தரிப்பு நிலையம், யாழ்ப்பாண மாநகர சபைக்கான புதிய கட்டடத் தொகுதி உள்ளிட்ட பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது அவ்வாறான திட்டங்களை முன்னெடுப்பதற்கு நிதி ஒதுக்கீடுகள் அனைத்தும் இந்த அரசினால் நிறுத்தப்பட்டுள்ளன. ஏன் அவ்வாறு அரசாங்கம் செய்கின்றதென தெரியவில்லை. அரசியல் பழிவாங்கலுக்காகவே இவ்வாறு அரசாங்கம் நடந்து கொள்கின்றதென நினைக்கின்றேன். ராஜபக்ஷக்கள் தமது பெயர் குறிப்பிடப்படும் அபிவிருத்தி திட்டங்களை மாத்திரமே மேற்கொள்வார்களே தவிர மக்கள் நலன் சார்ந்து செயற்படமாட்டார்கள் என்பதே உண்மையானது. இவ்வாறான நிலையில் நான் யாழ்ப்பாணத்திலிருந்து இந்த அரசாங்கத்திற்கு ஒரு கோரிக்கையை முன் வைக்கின்றேன்.அதாவது தடைப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதியை ஒதுக்கி மக்கள் சார்ந்த திட்டங்களை முன்னெடுக்குமாறு கோருகின்றேன்.

40)

# முல்லைத்தீவில் மூன்று எரிவாயு அடுப்புகள் வெடிப்பு




முல்லைத்தீவில் சமையல் எரிவாயு அடுப்பு வெடிப்பு சம்பவங்கள் மூன்று நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளன.

கொக்கிளாய் மேற்கு கிராம சேவர் பிரிவின், புளியமுனை பகுதியிலுள்ள வீடொன்றில் சமையல் எரிவாயு அடுப்பொன்றில் மெழுகுவர்த்தியை பற்றவைக்குமுகமாக அதனை இயக்கிய போதே அடுப்பு வெடித்துள்ளது. இதனால் எவ்வித சேதங்களும் ஏற்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க புதுக்குடியிருப்பு 01 ஆம் வட்டாரத்தில் கர்ப்பிணி தாய் ஒருவரின் வீட்டில் சமையல் செய்யும் போது எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

அத்துடன் செம்மலை கிராமத்திலும்,எரிவாயு அடுப்பு வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த வெடிப்பு சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தெரிவித்துள்ளன.

இந்த சம்பவத்தையடுத்து சமையல் எரிவாயு அடுப்பில் சமைப்பதை கைவிட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (15,56)

# யாழில் எயிட்ஸினால் 10 பேர் பலி; 4 கர்ப்பவதிகளுக்கு தொற்று

**-சுகாதார பணிப்பாளர் கேதீஸ்வரன்-**

யாழ். மாவட்டத்தில் இதுவரை எயிட்ஸி னால் பாதிக்கப்பட்ட 52 பேரில் பத்து பேர் இறந்துள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆறுமுகம் கேதீஸ்வரன் குறிப்பிட்டதுடன் தொற்றுக்குள்ளானவர்களில் நான்கு கர்ப்பிணிகளும் அடங்குவதாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

யாழ். மாவட்டத்தில் இதுவரை 52பேர் எயிட்ஸினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் 10 பேர் இறந்துள்ளனர். இறந்தவர்களில் 7 பேர் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இந்நிலையில் யாழ்.மாவட்டத்தில் தற்போது எய்ட்ஸினால் பாதிக்கப்பட்ட 35 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 19 ஆண்களும் 16 பெண்களும் அடங்குகின்றனர்.

பதினாறு பெண்களில் நான்கு பெண்கள் கர்ப்பிணியாக இருப்பதாக இனம் காணப்பட்டுள்ளனர்.

கர்ப்பவதிகள் பிரசவத்துக்காக அனுமதிக்கப்படும் போது அவர்களுக்கு எய்ட்ஸ் தொற்றுத் தொடர்பில் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

தாயிடமிருந்து குழந்தைக்கு எய்ட்ஸ் தாக்கம் ஏற்படாதவாறு முற்கூட்டிய அறிவதற்காக இந்த பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது என்றார். (75)

# 16 வருடங்கள் காத்திருந்து திருடனைப் பிடித்த பொலிஸார்

16 வருடங்களுக்கு முன்னர் காவலாளியை கட்டிவைத்து திருட்டில் ஈடுபட்டவரை நெல்லியடி பொலிஸார் நேற்று சனிக்கிழமை கைது செய்துள்ளனர்.

அதாவது 2005ஆம் ஆண்டு கரணவாய் மகா வித்தியாலயத்தில் இரவு நேர காவலாளியை கட்டிவைத்து விட்டு சில பொருட்கள் திருடப்பட்டமை தொடர்பில் நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டிருந்தது. இதையடுத்து பொலிஸார் கைவிரல் அடையாளங்களை பெற்றிருந்தனர்.

இவ்வாறான நிலையில் இச்சம்பவம் குறித்தான சந்தேக நபரை நேற்று சனிக்கிழமை வல்லை பகுதியில் வைத்து பொலிஸார்; கைது செய்தனர்.

கைதானவர்; நவாலி தெற்கை சேர்ந்தவரென தெரிவிக்கப்படுகின்றது. (21)

# கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி திருட முற்பட்டவர் நையப்புடைப்பு



நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலின் அருகிலுள்ள சொக்கன் உணவகத்தில்

கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி திருட முற்பட்டவரை அப்பகுதியுள்ளவர்கள் பிடித்து நையப்புடைத்த சம்பவம் நேற்று சனிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

இதையடுத்து பிடித்தவர்கள் அந்நபரை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை இதையொத்த சம்பவமொன்று அரியாலை மாம்பழச் சந்தியில் உள்ள புத்தக கடையொன்றில் இடம் பெற்றுள்ளது.

கடைக்குள் நின்ற பெண்ணின் கழுத்தில் சந்தேகநபர் கத்தியை வைத்து திருட முற்பட்ட வேளை அப் பெண் அலறியுள்ளார்.

அலறல் சத்தம் கேட்டு அருகில் நின்றவர்கள் கடைக்கு வரவே அந்நபர் தப்பியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

# மன்னாரில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பண்டிகைக்கால வியாபாரத்துக்கு அனுமதி

மன்னார் மாவட்ட மக்களை கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்கும் வகையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான கடை தொகுதிகளுடன் கடுமையான சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்:

நத்தார் மற்றும் புது வருட பண்டிகைகளை முன்னிட்டு மன்னாரில் பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகளை கடுமையான சுகாதார நடைமுறைகளுடன் முன்னெடுக்க மன்னார் நகர சபை தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

இதனை நகர சபை வருமானத்தை ஈட்டும் நடவடிக்கையாக முன்னெடுக்கவில்லை.மாறாக மக்களை கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்கும் நோக்கோடு குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2 வருடங்களாக கொரோனா தொற்று காரணமாக மன்னார் நகர சபையினால் மன்னாரில் பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைக்கு அனுமதி வழங்கப்படவில்லை. எனினும் குறித்த காலப்பகுதியில் மக்களின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுகின்றது.

நாங்கள் மக்களுக்கு பல வழிகளிலும் அறிவுறுத்தல்கள் வழங்கிய போதும்,மக்கள் அதற்கு செவி சாய்க்கவில்லை.

ஒவ்வொரு வர்த்தக நிலையங்களிலும் அதி கூடிய மக்களே கூடி நின்றமை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதனால் கொரோனா தொற்று அதிகரிக்கும் சந்தர்ப்பம் காணப்பட்டதால் இவ்வருடம் பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கடைத் தொகுதிகளை வழங்குவதன் ஊடாக மக்களின் நெரிசலை கட்டுப்படுத்த முடியும் என எதிர்பார்த்துள்ளோம்.

இதேவேளை சுகாதார நடைமுறைகளை கடைபிடிக்காத வர்த்தகர்களுக்கு எதிராக உடனடியாக பொலிஸார் மற்றும் சுகாதார துறையினர் உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும்

எதிர்வரும் 18ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

# தென்மராட்சியின் மக்கள் மருத்துவர் கௌரவிப்பு





தென்மராட்சியில் மக்கள் மருத்துவரென அழைக்கப்படும் டாக்டர் சு.சி.அருளானந்தத்தின் அமுதவிழா நிகழ்வு நேற்று சனிக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

சாவகச்சேரி பொது அமைப்புகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வுக்கு ஓய்வுநிலை அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமை தாங்கினார்.

இதன் போது சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர்,கல்வயல் வேதவனப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர்,சாவகச்சேரி நகரசபை தவிசாளர்,உறுப்பினர்கள்,தென்மராட்சி இலக்கிய அணியினர்,சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர்,சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர்,மருத்துவர்கள்,தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தினர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு பாராட்டு உரைகளை வழங்கினர்.

நிகழ்வின் சிறப்பாக அருளானந்தம் மலர் வெளியீட்டு இடம்பெற்றது.

மலரினை யாழ்ப்பாண தமிழ் சங்கத் தலைவர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் வெளியிட்டு வைத்தார்.-

(13)

# வவுனியாவில் மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து

**-கார், மோட்டார் சைக்கிள் சேதம்-**



வவுனியா, ஹொரவப் பொத்தானை வீதியில் மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகிய சம்பவம் நேற்று சனிக்கிழமை மதியம் இடம்பெற்றுள்ள போதும் தெய்வாதீனமாக எவருக்கும் பாதிப்பு இடம்பெறவில்லை.

வவுனியா நகரில் இருந்து ஹொரவப்பொத்தானை வீதி வழியாக சென்ற கார் ராணி மில் வீதியில் திரும்பிய போது பின்னால் வந்த பாரவூர்தியுடன் மோதி அருகிலுள்ள் வர்த்தக நிலையம் ஒன்றின் முன்னால் நின்ற மோட்டர் சைக்கிளுடன் மோதியுள்ளது.

அத்துடன் நின்றுவிடாது கார் அருகில் இருந்த வர்த்தக நிலையத்திற்குள் புகுந்ததால் வர்த்தக நிலையத்தின் முன் பகுதியும் இடிந்து விழுந்து அதன் கூரைப் பகுதியும் சேதமடைந்துள்ளது.

விபத்தில் கார் மற்றும் மோட்டர் சைக்கிள் என்பன சேதமடைந்துள்ளதுடன், விபத்துக்குள்ளான வாகனங்களை பொலிஸார் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.





இந்து பௌத்த கலாசார பேரவையினால் முன்னெடுக்கப்படும் 2 ஆம் மொழி கற்கை நெறியினை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு நேற்று சனிக்கிழமை சத்திரத்துசந்திக்கு அருகில் உள்ள இந்து பௌத்த கலாசார பேரவை மண்டபத்தில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதில் வடமாகாண ஆளுநர் மாணவிக்கு சான்றிதழ் வழங்குவதையும் விசேட அதிதியாக கலந்துகொண்ட மாவட்ட அரச அதிபர் க.மகேசன், கௌரவ அதிதியாக கலந்துகொண்ட யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் கொடித்துவக்கு உள்ளிட்டவர்கள் நிகழ்வுக்கு அழைத்துவரப்படுவதையும் படத்தில் காணலாம்.

# கொரோனாவால் முதியவர் மரணம்

சாவகச்சேரி, சங்கத்தானைப் பகுதியைச் சேர்ந்த முதியவரொருவர் சனிக்கிழமை காலை கொரோனா தொற்றினால்; அவரது வீட்டில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் சாவகச்சேரி,தாமோதரம்பிள்ளை வீதியைச் சேர்ந்த 82வயதான ச.அரசரட்ணம் என தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(13)

# உக்ரைனை ஆக்கிரமிக்க முயற்சிக்கிறதா ரஷ்யா ?

## எல்லையில் படைக் குவிப்பால் பதற்றம்; அமெரிக்கா எச்சரிக்கை -

உக்ரைனை ஆக்கிரமிக்கும் நோக்கில் 175,000 துருப்புக்களைக் குவித்து பல முனைத் தாக்குதல்களை நடத்த ரஷ்யா தயாராக வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்கா உளவுத் துறையினரின் அறிக்கைகளை மேற்கோள் காட்டி இது குறித்த செய்திகள் வெளியாகியுள்ளன.


இதேவேளை, உக்ரைனை ஆக்கிரமிக்கும் ரஷ்யாவின் முயற்சிகள் தொடர்பில் அமெரிக்கா - ரஷ்யா இடையே பதற்ற நிலை அதிகரித்துள்ளது.

உக்ரைனில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள ரஷ்யா ஆயத்தமாகி வரும் நிலையில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடினுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ரஷ்ய ஆக்கிரமிப்பைத் தடுக்கும் வகையில் விரிவான முயற்சிகளை எனது நிர்வாகம் ஒருங்கிணைத்து வருகிறது. அந்த நடவடிக்கையானது ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு மிக கடினமான ஒன்றாக அமையும் என செய்தியாளர்களிடம் பைடன் தெரிவித்தார்.

அடுத்த வாரம் பைடனும் புதினும் கலந்துரையாடவுள்ளதாக கூறப்படும் நிலையில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனினும் ரஷ்யாவுக்கு எதிரான எந்த மாதிரியான நடவடிக்கை எடுக்கப்படும்? என பைடன் தெரிவிக்கவில்லை.

இந்நிலையில் ரஷ்யா மீது அமெரிக்கா புதிய தடைகளை விதிக்க திட்டமிடுகிறது. அவ்வாறு தடை விதிக்கப்பட்டால் நாங்களும் எதிர்வினை ஆற்றுவோம் என ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் தெரிவித்தார். இதற்கிடையே தங்கள் நாட்டு எல்லை அருகே ரஷ்யா 94,000 படையினரை தற்போது குவித்துள்ளதாக உக்ரைன் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஒலெக்ஸி ரெஸ்னிகோவ் வெள்ளிக்கிழமை கருத்து வெளியிட்டார்.



ரஷ்யாவால் இணைத்துக் கொள்ளப்பட்ட கிரிமியா தீபகற்பம் அருகே ஏராளமான ரஷ்ய இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். நமது உளவுத் துறை தகவலின்படி, அவர்'களின் எண்ணிக்கை 94,300 -ஆக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ரஷ்யத் தரப்பிலிருந்து மோதல் தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் மிக அதிகமாக உள்ளன. குறிப்பாக, வரும் ஜனவரி மாத இறுதியில் இந்த மோதல் நிகழலாம். எனினும், இத்தகைய மோதலைத் தவிர்க்கவே உக்ரைன் விரும்புகிறது எனவும் உக்ரைன் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஒலெக்சி ரெஸ்னிகோவ் தெரிவித்தார்.

கடந்த 2013-ஆம் ஆண்டு ரஷ்ய ஆதரவு பெற்ற அப்போதைய உக்ரைன் ஜனாதிபதி விக்டர் யானுகோவிச்சை எதிர்த்து, ஐரோப்பிய ஒன்றிய ஆதரவு பெற்ற எதிர்க்கட்சியினா' மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டனா'. அதையடுத்து அவர் ரஷ்யாவில் தஞ்சமடைந்தார். அதனைத் தொடா'ந்து அமைக்கப்பட்ட அரசை எதிர்த்து கிழக்கு மற்றும் தெற்குப் பகுதியைச் சேர்ந்த ரஷ்ய ஆதரவு கிளா'ச்சியாளா'கள் போரில் ஈடுபட்டனர். ரஷ்ய இராணுவ உதவியுடன் அவா'கள் கிழக்கு உக்ரைனின் டொனட்ஸ்க், லுஹான்ஸ்க் உள்ளிட்ட பகுதிகளைக் கைப்பற்றினா'.

இந்தச் சூழலில், உக்ரைன் எல்லையையொட்டி ரஷ்யா தனது படைகளைக் குவித்து வருவதாக அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் எச்சரித்துள்ளன. குளிர்காலத்தின்போது உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து தன்னுடன் இணைத்துக் கொள்ள வாய்ப்புள்ளதாக அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் அச்சம் தெரிவித்துள்ளன.

இது ரஷ்யா - அமெரிக்கா இடையிலான பதற்றத்தை அதிகரித்துள்ளது. எனினும் உக்ரைனை ஆக்கிரமிக்க தாங்கள் முயல்வதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை ரஷ்யா நிராகரித்துள்ளது.

# ஓமிக்ரோன் குறித்து வீண் பயம் வேண்டாம்

## -எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்கிறது உலக சுகாதார அமைப்பு-

கொவிட் -19 இன் புதிய ஒமிக்ரோன் திரிபு குறித்து அதிகம் அஞ்சத் தேவையில்லை. ஆனால் அதனை எதிர்கொண்டு முறியடிக்கத் தயாராக வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.




கொரோனா வைரஸை எதிர்கொள்ள ஒரு வருடத்திற்கு முன்பு இருந்த நிலைமை வேறு. இப்போதுள்ள நிலைமை மிகவும் வித்தியாசமானது என வெள்ளிக்கிழமை கருத்து வெளியிட்ட உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி சௌமியா சுவாமிநாதன் தெரிவித்தார். தென்னாபிரிக்காவில் முதலில் கண்டறியப்பட்ட ஒமிக்ரோன் புதிய திரிபு தற்போது 40 நாடுகளில் பரவியுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. எனினும் இந்தத் திரிபு அதி வேகமாகப் பரவக்கூடியதா? அல்லது தடுப்பூசிகளுக்கு கட்டுப்படாதா? என்பது தொடர்பில் இதுவரை அறிவியல் ரீதியாக உறுதிப்படுத்தப்படவில்லை.

ஒமிக்ரோன் அதி வேகமாகப் பரவக் கூடியது மற்றும் அல்லது தடுப்பூசிகளுக்குக் கட்டுப்படாது என்ற ஆரம்பகட்ட தகவல்களை தென்னாப்பிரிக்காவில் உள்ள சில விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர். எனினும் இந்த முடிவு உறுதியானதல்ல என சுகாதார நிபுணர்கள் பலர் தெரிவித்துள்ளனர். இவ்வாறான நிலையிலேயே கொவிட் -19 இன் புதிய ஒமிக்ரோன் திரிபு குறித்து அதிகம் அஞ்சத் தேவையில்லை. எனினும் நாம் தயாராகவும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும் என உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி சௌமியா சுவாமிநாதன் தெரிவித்தார்.

இதேவேளை, கொவிட் -19 க்கு எதிராக உலகில் தற்போது மிகவும் பயனுள்ள தடுப்பூசிகள் உள்ளன. மேலும் அவற்றை இன்னும் பரவலாக விநியோகிப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என உலக சுகாதார அமைப்பின் அவசரநிலை பணிப்பாளர் மைக் ரியான் தெரிவித்துள்ளார். தற்போதுள்ள தடுப்பூசிகள் ஒமிக்ரோன் திரிபுக்கு எதிராக செயலாற்றாது என்பதற்கான எந்த ஆதாரமும் இதுவரை இல்லை என்றும் அவர் கூறினார்.

# கனடாவில் 15 பேருக்கு ஒமிக்ரோன் தொற்று உறுதி

கனடாவில் கவலைக்குரிய புதிய ஒமிக்ரோன் உரு திரிபு கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி இதுவரை 15 பேர் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், நாடு முழுவதும் மீண்டும் தொற்று நோயாளர் தொகை அதிகரிப்புக்கு ஒமிக்ரோன் உரு திரிபு வழிவகுக்கும் என பொது சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இந்நிலையில் 50 வயதுக்கு மேற்பட்ட அனைத்து கனடியர்களும் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட ஆறு மாதங்களுக்குப் பின்னர் மூன்றாவதாக பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என நோய்த்தடுப்புக்கான தேசிய ஆலோசனைக் குழு பரிந்துரைத்துள்ளது.

ஒமிக்ரோன் தொற்று பரவல் அச்சத்தை அடுத்து அமெரிக்காவைத் தவிர அனைத்து நாடுகளிலிருந்தும் விமானம் மூலம் கனடா வரும் சர்வதேச பயணிகள் அனைவருக்கும் விமான நிலையத்தில் கொவிட் பரிசோதனை கட்டாயம் என கனடா மத்திய அரசு கடந்த வாரம் அறிவித்தது.



அத்துடன், தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து பயணிகள் கனடா வருவதற்குத் தடை விதிக்கப்பட்டது.

எந்தவொரு புதிய திரிபு புழக்கத்தில் இருந்தாலும், அதிக விழிப்புணர்வின் தேவை உள்ளது என தலைமை பொது சுகாதார அதிகாரி தெரசா டாம் நேற்று வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறினார்.

இதேவேளை, ரொரன்டோவில் முதன்முறையாக வெள்ளிக்கிழமை 3 ஒமிக்ரோன் திரிபால் பாதிக்கப்பட்ட தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டனர். அவர்களில் இருவர் சமீபத்தில் நைஜீரியாவிலிருந்து கனடா திரும்பியவர்கள் என ஒன்றாறியோ மாகாண சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். மற்றொரு நபர் சுவிட்சர்லாந்தில் இருந்து திரும்பியவர் எனவும் அவா'கள் குறிப்பிட்டனர்.

ஒமிக்ரோன் திரிபு பரவலை உடனடியாகக் கட்டுப்படுத்தாவிட்டால் கனடா முழுவதும் மீண்டும் தொற்று நோயாளர் தொகை உயரத் தொடங்கும் என கனடா தலைமை பொது சுகாதார அதிகாரி தெரசா டாம் கூறினார்.

இதேவேளை, கொவிட் தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்படும் 10 இலட்சம் பைசரின் வாய்வழித் தடுப்பு மருந்தை வாங்க பைசர் மருந்தாக்க நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் கனேடிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# நான்காவது அலையில் சிக்கியது தென்னாப்பிரிக்கா

## -ஒமிக்ரோன் புதிய திரிபு பரவல் தீவிரம் -

புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள ஒமிக்ரோன் திரிபு தொற்று காரணமாக தென்னாபிரிக்கா நான்காவது கொரோனா அலையை எதிர்கொண்டுள்ளதாக அந்நாட்டு சுகாதார அமைச்சர் ஜோ பாஹ்லா தெரிவித்துள்ளார்.

ஒமிக்ரோன் திரிபின் வேகமாகப் பரவும் தன்மை காரணமாக நாடு முழுவதும் தொற்று நோய் தீவிரமடைந்துள்ளது. நாட்டின் 9 மாகாணங்களில் புதிய ஒமிக்ரோன் திரிபு பரவியுள்ளது கண்டறியப்பட்டுள்ளது என செய்தியாளர்களிடம் பேசிய அவா' தெரிவித்தார்.

எனினும் புதிய அலையால் அதிக உயிரிழப்புகள் ஏற்படாமல் தடுக்க முடியும் என்று நம்புகிறோம் எனவும் சுகாதார அமைச்சர் ஜோ பாஹ்லா குறிப்பிட்டார். கடுமையான பொது முடக்கக் கட்டுப்பாடுகளை அறிவிக்காமலேயே ஒமிக்ரோனை நம்மால் சமாளிக்க முடியும் என்று நம்புகிறோம். எனினும் பொதுமக்களும் இந்த வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு தங்கள் பொறுப்பை உணர்ந்து ஒத்துழைக்க வேண்டும்.




கொரோனா தடுப்பூசி பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ள அனைவரும் உடனடியாக தங்களுக்குரிய தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தென்னாபிரிக்க சுகாதார அமைச்சர் ஜோ பாஹ்லா வலியுறுத்தினார்.

தென்னாப்பிரிக்காவில் கடந்த மாதம் 24-ஆம் திகதி முதல் முறையாக கண்டறியப்பட்ட புதிய வகை ஒமிக்ரோன் உருத்திரிபு கவலைக்குரியது என உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

இந்த புதிய உருத்திரிபு வைரஸ் இதுவரை 40 வரையான நாடுகளில் பரவியுள்ளது. இந்நிலையில் புதிய ஒமிக்ரோன் உருத்திரிபு காரணமாக தென்னாபிரிக்காவில் கொரோனா பரவல் இதுவரை இல்லாத அளவுக்கு வேகமாக அதிகரித்து வருவதாக அந்த நாட்டின் தேசிய தொற்றுநோயியல் நிறுவனத்தின் தலைமை விஞ்ஞானி மிஷெல் குரூம் தெரிவித்தார்.

அத்துடன், சிறுவர்கள் மத்தியிலும் இவ்வகை தொற்று வேகமாகப் பரவுகிறது. தற்போது தென்னாபிரிக்கா முழுவதும் 4 வயதுக்கும் குறைவான சிறுவர்கள் தொற்று நோயுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் போக்கு அதிகரித்து வருகிறது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# ஒமிக்ரோன் வைரசால் பாதிக்கப்பட்ட நான் நலமாகவே இருக்கிறேன்

## -பாதிக்கப்பட்ட மருத்துவர் தெரிவிப்பு -

ஒமிக்ரோன் வைரசால் பாதிக்கப்பட்டுள்ள பெங்களூரை சேர்ந்த 46 வயதான மருத்துவர் தான் முற்றிலும் நலமுடன் இருப்பதாக தெரிவித்து உள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

எனக்கு கடுமையான உடல் வலி இருக்கிறது. குளிர் மற்றும் லேசான காய்ச்சலாலும் பாதிக்கப்பட்டு உள்ளேன். ஆனால் என்னால் சுவாசிப்பதில் எந்த சிரமமும் இல்லை. ஒக்சிஜன் அளவு சாதாரணமாகவே இருக்கிறது. அதில் எந்த பிரச்சினையும் இல்லை.

நான் முற்றிலும் நலமாக இருக்கிறேன். இந்த வைரஸ் குறித்து யாரும் அச்சப்பட தேவையில்லை. அதே நேரத்தில் எனது வீட்டுக்கு சீல் வைக்கப்பட்டது மிகுந்த வேதனை அளிக்கிறது என்றார். இதேபோல அவருக்கும், அவருடன் தொடர்பில் இருந்தவர்களுக்கும் லேசான காய்ச்சல்தான் இருப்பதாக அவர்களை பரிசோதித்த மருத்துவர்கள் தெரிவித்து உள்ளனர்.

இந்தநிலையில் ஒமிக்ரோன் வைரசை எதிர்த்து போராடுவதற்கு தடுப்பூசியே சிறந்த அளவு கோல் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்து உள்ளது.

பாதிக்கப்பட்ட நாடுகள் தடுப்பூசியை முழுமையாக செலுத்துமாறும் உலக சுகாதார அமைப்பு கேட்டு உள்ளது. மேலும் எல்லைக் கட்டுப்பாட்டை வரையறுக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளது.

# கனடாவில் பாலின மாற்று அறுவை சிகிச்சையை தடை செய்ய நடவடிக்கை

## -தீர்மானத்துக்கு கனடா பாராளுமன்று ஒப்புதல்

பாலின மாற்று அறுவை சிகிச்சைக்கு தடை கோரும் சட்ட திருத்த யோசனை கனடா பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

கன்சர்வேடிவ் கட்சி முன்வைத்த இந்தத் யோசனைக்கு ஆளும் லிபரல் கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் ஆதரவு தெரிவித்ததால் இது ஏகமனதாக நிறைவேறியது. கனடா நீதி அமைச்சர் டேவிட் லாமெட்டி, இந்த பிரேரணையை முன்வைத்த கன்சர்வேடிவ் கட்சியை பாராட்டினார்.

கன்சர்வேடிவ் கட்சியில் உள்ளவர்கள் இந்த பிரச்சினையில் அதிக தலைமைத்துவத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி கூறுகிறேன் என்று அவர் கூறினார். ஆளும் லிபரல் கட்சியினர் முதன்முதலில் மார்ச் 2020 இல் இந்தச் சட்டத் திருத்த யோசனையை பாராளுமன்றில் அறிமுகப்படுத்தினர். ஆனால் அரசாங்கம் பாராளுமன்றத்தை ஒத்திவைத்ததால் அதனை நிறைவேற்ற முடியவில்லை.

ட்ரூடோவின் கட்சி இந்தச் சட்டத்திருத்த யோசனையை மீண்டும் அறிமுகப்படுத்தியது. ஆனால் செப்டம்பர் கூட்டாட்சி தேர்தலுக்கு முன்னதாக பாராளுமன்றம் கலைக்கப்பட்டதால் அந்த முயற்சியும் வெற்றிபெறவில்லை.

இந்நிலையில் பிரதான எதிர்க்கட்சி முன்வைத்த இந்த சட்டத் திருத்த யோசனை நேற்று ஆளும் லிபரல் கட்சியினர் உள்ளிட்ட கட்சியினர் ஆதரவுடன் ஏகமனதாக நிறைவேறியது. பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட இந்தப் பிரேரணை வாக்கெடுப்புக்கு செனட் சபைக்கு செல்லும். செனட்டின் அங்கீகாரம் கிடைத்தால் இது சட்டமாக மாறும்.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 05 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பாகிஸ்தான் இலங்கைத் தொழிலாளி கொலை செய்யப்பட்டமை குறித்த ஜனாதிபதி அதிர்ச்சி

பாகிஸ்தான் கைத்தொழிற்சாலையில் பணிபுரிந்த இலங்கைத் தொழிலாளரான பிரியந்த குமார என்பவர் மனிதாபிமானமற்ற முறையில் கொலை செய்யப்பட்டதை எண்ணி நான் வருந்துகிறேன்.

அந்த மனிதாபிமானமற்றச் செயல் இலங்கையர்களுக்கு மாத்திரமன்றி, மனித நேயமுள்ள உலகின் அனைவருக்கும் பாரிய அதிர்ச்சியாகும் என ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பிரதமர் இம்ரான்கான் உள்ளிட்ட பாகிஸ்தான் அரசாங்கம், இந்த மனிதாபிமானமற்ற கொலை நடைபெற்ற உடனேயே நீதியை நிலை நாட்டுவதற்காக எடுத்த நடவடிக்கைகளை, பாகிஸ்தானின் நீண்டகால நட்புறவைக் கொண்ட இலங்கை பாராட்டுவதோடு, இது தொடர்பாக பாகிஸ்தான் அரசாங்கம் எடுக்கும் எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் இலங்கை அரசாங்கமும் நாட்டு மக்களும் பாரிய நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருக்கின்றோம்.

அதேபோன்று, பாகிஸ்தானில் வசிக்கின்ற ஏனைய இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பாகிஸ்தான் அரசாங்கத்திடம் நான் கேட்டுக்கொள்கின்றேன் எனவும் ஜனாதிபதி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்செய்தியைக் கேள்விப்பட்டவுடன் உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கும் பாகிஸ்தானுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கும் நான் மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச வழங்கிய ஆலோசனைக்கமைய அவர்கள் தற்போது செயற்பட்டு வருகின்றனர்.

எந்த அடிப்படையில் வந்தாலும், அடிப்படைவாதச் செயற்பாடுகள் சமூகத்தைப் பாரியளவில் பாதிக்கின்றன. அதனால், அடிப்படைவாதத்துக்கு எதிராக முழு உலகமும் ஒரே நோக்கத்துடன் நின்று செயற்பட வேண்டுமென்பதை இவ்வாறான விடயங்கள் உறுதி செய்கின்றன.

இந்த துரதிர்ஷடவசமான செய்தியினால் பாரிய அதிர்ச்சிக்குள்ளாகியுள்ள பிரியந்த குமாரவின் குடும்பத்தினருடன் நானும் அரசாங்கமும், இலங்கை நாட்டின் அனைத்து மக்களும் இருப்பதாக நினைவூட்டுகிறேன் என்றுள்ளது.

# பாகிஸ்தானில் இலங்கையர் கொலை காட்டுமிராண்டித்தனமாக சம்பவம்

**-நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் கண்டனம் -**



பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவர் கொடூரமாக தாக்கப்பட்டு, எரியூட்டி படுகொலை செய்யப்பட்ட காட்டுமிராண்டித்தனமான சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். - என்று என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.அட்டனில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் பின் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,பாகிஸ்தானில் நேற்று துன்பகரமான சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இலங்கையர் ஒருவர் அடித்து - துன்புறுத்தப்பட்டு - எரித்து கொல்லப்பட்டுள்ளார். இந்த காட்டுமிராண்டித்தனமான செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். இது விடயத்தில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும். இதற்காக இலங்கை அரசும் முழுமையாக போராட வேண்டும். இச்சம்பவம் தொடர்பில் நூறுபேர்வரை கைது செய்யப்பட்டுள்ளனர், நீதி நிலைநாட்டப்படும் என பாகிஸ்தான் பிரதமர் அறிவித்துள்ளார். இது வரவேற்கத்தக்கது. அதேபோல இனியும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.அதே வேளை, இந்திய பிரதமரை சந்திப்பதற்கான கோரிக்கையை நாம் இன்னும் விடுக்கவில்லை. அவ்வாறு விடுத்தால் நிச்சயம் சந்திப்புக்கான வாய்ப்பு கிடைக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியா செல்லவுள்ளது. அவர்கள் முதலில் சென்று வரட்டும் என்றார்.

# பொதுவுடமை இயக்கத்தின் முன்னோடி சுப்பிரமணியத்தின் நினைவுக் கூட்டம்



பொதுவுடமை இயக்கத்தின் புரட்சிகர முன்னோடியும், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஆரம்ப காலப் பொதுச் செயலாளரும், வெகுஜனப் போராட்ட வழிகாட்டியுமான கே.ஏ.சுப்பிரமணியத்தின் 32 ஆவது ஆண்டு நினைவுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்-03.30 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் வன்னி மாவட்டங்களுக்கான செயலாளர் என்.பிரதீபன் அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கூட்டத்தில் நினைவுரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் 'இலங்கையின் இன்றைய உச்சக்கட்ட நெருக்கடிகள் அரசியல் பொருளாதாரத்தில் திருப்புமுனையை ஏற்படுத்துமா?'எனும் தலைப்பில் ஆற்றவுள்ளார். அவ் உரையினைத் தொடர்ந்து திறந்த கலந்துரையாடலும் இடம்பெறும். சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக இடம்பெறவுள்ள குறித்த நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கே.ஏ.சுப்பிரமணியம் நினைவுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

(18)

# புலிகளின் தங்கம் தேடி தோண்டும் நடவடிக்கையில் மீண்டும் இடையூறு



அமைச்சுக்களின் செயலாளர்களால் புலிகளின் தங்கம் தோண்டமுற்பட்ட இடத்தில் மீண்டும் தோண்டும் பணி முன்னெடுப்பப்பட்டது. இறுதி யுத்த காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் புதைத்து வைக்கப்பட்ட தங்கத்தை தோண்டி எடுக்க முயற்சித்ததாக இரண்டு பிரதான அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் குறித்த தங்கம் இருப்பதாக தெரிவிக்கபட்ட இடமான முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்ப்பட்ட சுதந்திரபுரம் பகுதியில் அகழ்வு நடவடிக்கை கடந்த 2ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி .சரவணராஜா முன்னிலையில் இந்த அகழ்வு நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் புதைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் தங்கத்தை நீதிமன்றின் உத்தரவிற்கு அமைய தோண்டி எடுப்பதற்கு முன்னதாக அமைச்சுக்களின் செயலாளர்கள் இருவர் இரகசியமாக தோண்டி எடுக்க முயற்சித்துள்ளதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் இந்த சம்பவம் தொடர்பில் குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையிலேயே நேற்று முன்தினம் அகழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன இருப்பினும் அன்றைய தினம் அண்மைய நாட்களாக பெய்த கனமழை காரணமாக குறித்த பகுதிக்கு கனரக இயந்திரங்களை கொண்டு செல்ல முடியாத நிலையில் ஒத்திவைக்கப்பட்டது. நேற்று முன்தினம் மாலை மீண்டும் அகழ்வுப்பணிகள் முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி ரி .சரவணராஜா முன்னிலையில் ஆரம்பமாகி இடம்பெற்றன இந்நிலையில் குறித்த குழிகளுக்குள் வெள்ளநீர் தேங்கி அதனை அகற்ற முடியாத நிலை உருவானதாலும் கனரக இயந்திரம் நிலத்தினுள் புதையுண்டதாலும் அகழ்வுப்பணிகள் பாதியில் இடைநிறுத்தப்பட்டதோடு மீண்டும் குறித்த அகழ்வுப் பணி நாளை திங்கட்கிழமை மாலை 2 மணிக்கு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதுவரை குறித்த பகுதிக்கு பாதுகாப்பு கடமையில் பொலிசார் அமர்த்தப்பட்டுள்ளனர். (71)

# எழுத்தாளர் கணேசலிங்கன் மறைவுக்கு யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் இரங்கல்

நேற்று சனிக்கிழமை காலமான ஈழத்தின் மூத்த எழுத்தாளர் செ.கணேசலிங்கன் மறைவுக்குத் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் இரங்கல் தெரிவித்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது - ஈழத்து முற்போக்கு எழுத்தாளருள் முக்கியமானவராகக் கொள்ளப்படும் செ. கணேசலிங்கன் 09.03.1923 இல் உரும்பிராயில் பிறந்தவர். சமூக விடுதலைக்காகப் பேனாவை ஆயுதமாக்கிக் குரல் கொடுத்தவர்.

இவரது புனைகதை இலக்கியங்கள் பாடசாலை மட்டத்திலும் பல்கலைக்கழக மட்டத்திலும் மாணவர்களுக்கான பாடநூலாக் கொள்ளப்படுகின்றன. ஐம்பதுக்கும் மேற்பட்ட நாவல்களை படைத்த பெருமைக்குரியவர். அதைவிட சிறுகதை மொழிபெயர்ப்பு மற்றும் கட்டுரைகள் என்ற நிலையிலும் இலக்கியங்களைப் படைத்துள்ளார். ஈழத்தமிழ் உலகில் காலத்தின் நிலை உணர்ந்து கனதியான பங்களிப்பை நல்கிய எழுத்தாளர் செ. கணேசலிங்கனுக்கு யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம் - என்று உள்ளது.








# தமிழர்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்க வேண்டுமென்பதில் சர்வதேசம் உறுதியாக இருக்கிறது

ந.லெப்ரின் ராஜ்

**தமிழ் மக்கள் மீது அமெரிக்கா தற்பொழுது கொண்டுள்ள கரிசனையை விட எதிர்காலத்தில் அதிகமாக இருக்கும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். குறிப்பாக தமிழர்கள் மீதான அக்கறை முன்னரை விட அதிகரித்திருக்கிறது. அந்த அடிப்படையில் தமிழர்கள் மீதான அமெரிக்காவின் வகிபாகம் நெருக்கமாகும் சாத்தியங்கள் அதிகமாகவே இருக்கிறது என்று தெரிவித்துள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளு மன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், அரசியல் தீர்வொன்று இல்லாமல் தொடர்ந்து பயணித்துக்கொண்டிருந்தால் வடக்கு, கிழக்கில் தமிழர்களுடைய இருப்பு இல்லாமல் போகும் நிலைமை அதிகமாக காணப்படுகிறது. நாளுக்கு நாள் தமிழர்களுடைய இருப்புக்கான அச்சுறுத்தல்கள் அதிகரித்து கொண்டிருக்கின்றன. ஆகவே அரசியல் தீர்வையும் பொறுப்புக்கூறலோடு சமாந்தரமாக எடுக்கவேண்டிய தேவையை சர்வதேசத்துக்கு தெளிவுபடுத்தியிருக்கின்றோம் என்றும் தெரிவித்தார்.**

**தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயங்கள் குறித்து பரந்த அளவிலான கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளும் நோக்கில் சுமந்திரன் தலைமையிலான சட்ட வல்லுனர்கள் குழுவொன்று அமெரிக்காவிற்கு சென்று பேச்சுக்களில் ஈடுபட்டது.மேலும் இந்த விஜயத்தில் கனடா,பிரித்தானியா ஆகிய நாடுகளுக்கும் குறித்த குழு விஜயம் செய்து பல தரப்பட்டவர்களுடன் சந்திப்புகளை நடத்திவிட்டு நாடு திரும்பியுள்ளது. இந்நிலையில்,இந்த பயணத்தில் இடம்பெற்ற பேச்சுக்கள்,சந்திப்புகள் தொடர்பாக நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஞாயிறு தினக்குரலுக்கு வழங்கிய நேர்காணலிலேயே இவ்வாறு தெரிவித்தார்.**

**? உங்களுடைய அமெரிக்க விஜயம் எவ்வாறு அமைந்தது. அங்கு பேசப்பட்ட விடயங்களில் தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வில் அமெரிக்க கொண்டுள்ள கரிசனையை நீங்கள் எவ்வாறு புரிந்து கொண்டீர்கள்?**

பதில்:ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2012 ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்கா தலைமையிலான இணை அனுசரணை குழு இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கான பொறிமுறை ஒன்றை உருவாக்கி தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது.அந்த அடிப்படையில் அமெரிக்காவின் தலைமையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதால் அந்த நாட்டுக்கு மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது. அதேபோல் பொறுப்புக்கூறல் விடயத்தில் வெவ்வேறு விசாரணைகள் நடைபெற்று தற்பொழுது சாட்சியங்களை பாதுகாப்பது என்ற பொறிமுறை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

நல்லிணக்கம் என்று வரும்பொழுது,அதில் புதிய அரசியலமைப்பு ஒன்றினூடாக அதிகாரப்பகிர்வை உறுதி செய்வது தான் மீள நிகழாமைக்கான உத்தரவாதம் என்று இலங்கை அரசாங்கம் ஏற்கனவே வாக்குறுதி கொடுத்திருக்கின்றது.

அதற்கமைய கடந்த 2016 ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் அந்த விடயம் நிறைவு பெற்றிருக்கவில்லை.2016 இல் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு நிபுணர் குழுவிடம் எங்களுடைய திட்டங்களை முன்வைத்திருந்தோம். அதேபோல்,அவர்களுடன் நாங்கள் பல தடவைகள் சந்திப்புகளை நடத்தியிருந்தோம்.அவ்வேளையில் அதிகாரப்பகிர்வின் ஊடாக ஒரு அரசியல் தீர்வு வேண்டுமென்பதை நாங்கள் வலியுத்தியிருந்தோம்.இந்நிலையில் 2019 இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துக்கு பின்னர் புதிய அரசாங்கம் நாங்கள் வலியுறுத்தி வந்த அதிகாரப்பகிர்வின் மூலமாக அரசியல் தீர்வு வேண்டும் என்ற விடயத்தை ஒதுக்கிவைத்துவிட்டு ஒரு நாடு ஒரு சட்டம் என்று ஒரு சட்டத்தை உருவாக்கி அதன் மூலம் நாடு முழுவதும் ஒரே மாதிரியான சட்டத்தை உருவாக்கவேண்டும் என்ற தவறான போக்கில் பயணிக்க ஆரம்பித்திருக்கிறது.

ஆகவே தான் அதிகாரப் பகிர்வின் மூலமாக அரசியல் தீர்வு என்ற எண்ணத்துக்கு ஆதரவான நாடுகளை ஒன்று சேர்க்கும் பணிகளை நாங்கள் முன்னெடுக்கின்றோம்.அதில் பிரதானமான நாடு அமெரிக்கா என்ற அடிப்படையில் இந்த விடயத்தில் சர்வதேச கரிசனை காட்டப்படவேண்டுமென்றும் அதற்கு அமெரிக்காதான் தலைமை வகிக்க வேண்டுமென்றும் நாங்கள் அமெரிக்காவிடம் கேட்டுக்கொண்டிருக்கின்றோம்.

**? எதிர்வரும் காலத்தில் தமிழ் மக்களுடைய விவகாரங்களில் அமெரிக்காவின் வகிபங்கு எவ்வாறு இருக்கும் என எதிர்பார்க்கிறீர்கள்?.**

பதில்:தமிழ் மக்கள் மீது அமெரிக்கா தற்பொழுது கொண்டுள்ள கரிசனையை விட எதிர்காலத்தில் அதிகமாக இருக்கும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.குறிப்பாக தமிழர்கள் மீதான அமெரிக்காவின் கரிசனை முன்னரை விட அதிகரித்திருக்கிறது. அந்த அடைப்படையில் தமிழர்கள் மீதான அமெரிக்காவின் வகிபங்கு அதிகரிக்கும் சாத்தியங்கள் அதிகமாகவே இருக்கிறது.

ஏனென்றால், அரசியல் தீர்வொன்று இல்லாமல் தொடர்ந்து பயணித்துக்கொண்டிருந்தால் வடக்கு,கிழக்கில் தமிழர்களுடைய இருப்பு இல்லாமல் போகும் நிலைமை அதிகமாக காணப்படுகிறது.நாளுக்கு நாள் தமிழர்களுடைய இருப்புக்கான அச்சுறுத்தல்கள் அதிகரித்து கொண்டிருக்கின்றன.ஆகவே அரசியல் தீர்வையும் பொறுப்புக்கூறலோடு சமாந்தரமாக எடுக்கவேண்டிய தேவை எங்களுக்கு இருக்கிறது. அந்த அடிப்படையில் இவ்விரு விடயங்களையும் அவசரமாக செய்யவேண்டியிருப்பதாக எங்களுடைய அமெரிக்க பயணத்தின் போது தெளிவாக எடுத்துக்கூறியிருக்கின்றோம்.

நாங்கள் முன்வைத்துள்ள விடயங்களை கருத்தில் எடுத்து இனிமேல் தான் அமெரிக்க பிரதிநிதிகள் ஒரு கொள்கையை வகுப்பார்கள்.அந்த கொள்கைகள் வகுத்ததன் பிற்பாடு தான் எவ்வாறான நிலைப்பாட்டை எடுத்திருக்கிறார்கள் என்பதை எங்களுக்கு அறிவிப்பார்கள்.

**? கனடாவிலும் நீங்கள் சில சந்திப்புகளை மேற்கொண்டிருந்தீர்கள். குறிப்பாக கனடாவின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சந்திப்புகள் மேற்கொண்டிருந்தீர்கள்.இந்த சந்திப்புகளில் அவர்கள் எவ்வாறான நிலைப்பாட்டை கொண்டிருந்தார்கள்?**

பதில்: ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இணை அனுசரணை நாடுகளில் கனடாவும் ஒரு உறுப்பு நாடு என்ற அடிப்படையில் அவர்களுடனும் நாங்கள் சந்திப்புகளை நடத்த வேண்டிய தேவை இருக்கிறது. அந்த அடிப்படையில்,கனடாவில் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தோம்.அதேபோல்,கனடா நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேருடனும் சந்திப்புகளை நடத்தியிருந்தோம்.அவர்களிடத்தில் நாட்டின் தற்போதைய நிலைவரம் மற்றும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் சம்பந்தமாக தெளிவாக எடுத்துக்கூறியிருந்தோம். முக்கியமாக கனடா அரசாங்கத்தின் ஆதரவும் அந்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவும் எங்களுடைய இந்த பயணத்துக்கு மிகவும் அத்தியாவசியமாக தேவைப்படுகிறது.எனவே, அமெரிக்காவின் கூடுதலான ஆதரவுடன் தமிழ் மக்கள் தொடர்பான ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டால் அதற்கு ஆதரவாக பல நாடுகள் ஒத்துழைக்கவேண்டியது அவசியம்.அந்த அடிப்படையில் கனடா அதில் முக்கியமான நாடு என்ற அடிப்படையில் எங்களுடைய பேச்சுக்களை நடத்தியிருக்கின்றோம்.

**? உங்களுடைய இந்த விஜயத்தில் புலம்பெயர் சமூகத்தினருடனும் உங்களுடைய சந்திப்புகள் அமைந்திருந்தன. அவர்களுடைய நிலைப்பாடு என்னவாக இருக்கிறது.**

பதில்:நாங்கள் தற்சமயம் எடுத்துக்கொண்ட விடயம் சம்பந்தமாக புலம்பெயர் சமூகத்தினரிடையில் பெரும் ஆதரவு இருக்கிறது என்பதை நாங்கள் சந்தித்த சந்திப்புகளின் மூலம் வெளிப்பட்டிருந்தது.அரசியல் தீர்வு சம்பந்தமாக இந்தியாவை முன்னிலைப்படுத்தி தான் நாங்கள் எங்களுடைய பயணத்தை ஆரம்பித்திருக்கின்றோம்.அந்த விடயத்தில் இந்தியாவுக்கு பக்கபலமாக அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் ஆதரவை வழங்குவது மிக அத்தியாவசியமாகும்.அதற்கு புலம்பெயர் சமூகம் தங்களுடைய ஒத்துழைப்புக்களை வழங்குவதாக எங்களுக்கு வாக்குறுதியளித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நாங்கள் சென்ற நாடுகளில் புலம்பெயர் சமூகத்தினர் தங்களுடைய பூரணமான ஆதரவை வழங்கியிருந்தார்கள்.

**? அரசியல் தீர்வு விடயத்தை தாண்டி சமகாலத்தில் வடக்கு,கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்கொண்டு வரும் பிரச்சனைகள் சம்பந்தமாக இந்த சந்திப்புகளில் கரிசனை கொள்ளப்பட்டதா?**

பதில்:தமிழ் மக்கள் வடக்கு,கிழக்கில் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவே அரசியல் தீர்வு விரைவில் கிடைக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறும் சம்பவங்களை நிறுத்த வேண்டுமாகவிருந்தால் அதற்கு அரசியல் தீர்வு அவசியமானதாகும்.வடக்கு,கிழக்கில் இடம்பெறும் நில அபகரிப்புகள் ,பயங்கரவாத தடுப்பு சட்டத்தை மீண்டும் அமுல்படுத்துவது சம்பந்தமாகவும் நாங்கள் இந்த சந்திப்புகளில் எடுத்து கூறியிருக்கின்றோம்.

அரசியல் தீர்வு ஒன்று ஏற்படாமல் இருக்கும்வரை மேற்படி பிரச்சனைகள் தொடர்ந்தும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கப்போகிறது.

**? பிரித்தானியாவில் மாநில வெளிவிவகார பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி விவகார அமைச்சர் லோர்ட் தாரிக்கை, சந்தித்திருந்தீர்கள்.அந்த சந்திப்பில் தமிழர் விடயத்தில் பிரித்தானியாவின் நிலைப்பாடு என்னவாக இருந்தது?**

பதில்:அமெரிக்காவுடன் நாங்கள்(தமிழர்கள்) இணைந்து செயற்படுவது சம்பந்தமாகவும் அரசியல் தீர்வு சம்பந்தமாக இந்தியாவுடன் நாங்கள் பேசி செயற்படும் விடயத்தில் அனைவரினதும் பங்களிப்பு இருக்கவேண்டுமென பிரித்தானியாவின் மாநில வெளிவிவகார பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி விவகார அமைச்சரிடம் கேட்டிருந்தோம். அமெரிக்கா ஒரு குறித்த பாத்திரத்தை ஏற்றுக்கொள்ளுமாகவிருந்தால், பிரித்தானியா ஏனைய அனைத்து நாடுகளையும் குறிப்பாக இணை அனுசரணை நாடுகள் மற்றும் இலங்கையில் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கவேண்டுமென்பதில் ஆர்வமாக இருக்கின்ற நாடுகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து இந்த முயற்சிக்கு பிரித்தானியா ஒரு பலமாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றோம். அதற்கு அவர் சாதகமாக பரிசீலிப்பதாக எமக்கு வாக்குறுதியளித்திருந்தார்.

**? தமிழர் விடயத்தில் இந்தியாவுடன் இணைந்துகொள்ளுமாறு அமெரிக்காவுக்கு நீங்கள் ஒரு ஊடக அறிக்கை மூலம் அழைப்பு விடுத்திருந்தீர்கள்?அந்த அழைப்புக்கு சாதகமான பதில் கிடைத்ததா?**

பதில்:அமெரிக்காவில் இடம்பெற்ற பேச்சுகளிலும் இந்த விடயத்தை வலியுறுத்தியிருந்தோம்.அமெரிக்க அரசாங்கம் இந்திய அரசுடன் நேரடி தொடர்பில் இருக்கின்றது என்ற அடிப்படையிலும், தமிழருடைய விவகாரத்திலும் இரு நாடுகளும் நேரடியாக தொடர்பில் இருப்பதாலும் இரு நாடுகளும் இணைந்து பயணிக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.நாங்கள் இந்த விடயத்தை வலியுறுத்துவதற்கு முன்பாகவே இந்தியாவுடன் இணைந்து செயற்படவேண்டுமென்பதை அமெரிக்க பிரதிநிதிகள் எங்களிடத்தில் தெரிவித்திருந்தார்கள்.

**? நீங்கள் நீண்டகாலமாக தமிழர் விவகாரங்களை கையாண்டு வரும் ஒருவர் என்ற அடிப்படையில்,பூகோள அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்குள் தற்பொழுது தமிழர் விவகாரம் எவ்வாறு நகர்த்தப்படுவதாக உணர்கிறீர்கள்.**

பதில்:இன்றைய பூகோள அரசியலில் சீனாவினுடைய வளர்ச்சி பெரிய விடயமாக பேசப்படுகிறது.அத்துடன் சீனா இலங்கையிலும் காலடி வைத்துக்கொண்டிருக்கும் ஒரு சூழலில் பிராந்திய வல்லரசான இந்தியாவும் உலக வல்லரசான அமெரிக்காவும் நியாயமான பல கருத்துக்களை கொண்டிருக்கிறார்கள்.அவ்வாறானதொரு சூழ்நிலையில் தான் நாங்கள் (தமிழர்கள்)இந்தியா,அமெரிக்கா போன்ற நாடுகளுடன் எங்களுடைய உறவுகளை வலுப்படுத்தி வருகின்றோம். அந்த அடிப்படையில் பூகோள அரசியலில் ஏற்படுகின்ற மாற்றங்களை அனுசரித்து .ஏனைய நாடுகளுடனும் எங்களுடைய உறவுகளை வலுப்படுத்துவதனூடாக எங்களுக்கு (தமிழர்களுக்கு)ஒரு தீர்வு கிடைக்கும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

**? உங்களுடைய குறித்த விஜயம் சம்பந்தமாக இந்தியாவுடன் கலந்துரையாடும் திட்டங்கள் உள்ளனவா?**

பதில்:அவர்களுக்கு ஏற்கனவே இந்த விடயங்கள் முழுமையாக தெரியும்.நாங்களும் எடுத்து கூறியிருக்கின்றோம்.

**தமிழ் மக்கள் வடக்கு,கிழக்கில் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவே அரசியல் தீர்வு விரைவில் கிடைக்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறும் சம்பவங்களை நிறுத்தவேண்டுமாகவிருந்தால் அதற்கு அரசியல் தீர்வு அவசியமானதாகும். வடக்கு,கிழக்கில் இடம்பெறும் நில அபகரிப்புகள், பயங்கரவாத தடுப்பு சட்டத்தை மீண்டும் அமுல்படுத்துவது சம்பந்தமாகவும் நாங்கள் இந்த சந்திப்புகளில் எடுத்து கூறியிருக்கின்றோம்.**

## கோத்தாவை போத்தாவாக...

04 ஆம் பக்கத் தொடர்ச்சி..

### சர்வதேச உதாரணங்கள்

தற்போதைய நெருக்கடியின் கீழ், மறுசீரமைப்பு த் திட்டத்திற்கு வழி வகுக்கும் இந்த முயற்சி தோல்வியடைந்தாலும், அது வீண் போகாது. அதனை அடைவதற்கான பொது மக்களின் முயற்சி எவ்வளவுக்கு வலுவாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு சீர்திருத்தங்கள் மக்களின் இதயங்களைத் தொடும். மேலும், அரசாங்கத்தின் அடுத்த மாற்றத்தைப் பாதிக்கும் முக்கிய காரணியாகவும், அதனுடன் தொடர்புடைய மறுசீரமைப்புத் திட்டத்தின் முக்கியத்துவத்தை அதிகரிக்கவும் இது உதவும்.

கேள்வி எழுப்பியவரின் மூன்றாம் மற்றும் நான்காம் கேள்விகள் வருமாறு: கிராமங்கள் , நகரங்களென அனைவரும் அமர்ந்து அரசியலமைப்பில் இடம்பெற வேண்டிய விடயங்களை நேரடியாகப் பேசுகிறார்களா? அத்தகைய அரசியலமைப்பை உருவாக்குவதில் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் என்ன? இந்த இரண்டு கேள்விகளும் கேள்வி கேட்பவர் மக்கள் அரசியலமைப்பு அல்லது 'பங்கேற்பு அரசியலமைப்பு' பற்றி கேள்விப்பட்டதே இல்லை என்பதைப் பிரதிபலிக்கிறது. இது முதன்முறையாக முயற்சிக்கப்பட்ட ஒரு முறை அல்ல, ஆனால் கடந்த 40 ஆண்டுகளில் பெரும்பாலான நாடுகளில் முயற்சி செய்து பரி சோதிக்கப்பட்டது.

இது ஐக்கிய நாடுகள் சபையாலும் அங்கீகரிக்கப்பட்ட முறைமையாகும். இது 21 ஆம் நூற்றாண்டின் அரசியலமைப்பு உருவாக்கத்தின் மாதிரியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பு தயாரிப்பில் இந்த முறைமையை நடைமுறைப்படுத்திய சில நாடுகள் பின்வருமாறு. நேபாளம் (2015), கென்யா (2010), ருவாண்டா (2002), தாய்லாந்து (1997), எரித்திரியா மற்றும் வெனிசுலா (1999), தென்னாபிரிக்கா (1994), உகாண்டா மற்றும் பிரேசில் (1988), நிகரகுவா (1986) மற்றும் நமீபியா (1985) இந்த முறை. தற்போது சிலியில் குறிப்பிடத்தக்க பரிசோதனைகள் இடம்பெறு கின்றன

மேலே விப ரிக்கப்பட்ட நிகழ்வுகளின் தொடர், அனிட்டா பத்திரிகை ஆசிரியர் எழுப்பிய பல வாதங்களுக்கு மறைமுகமான பதிலை வழங்குகிறது. இதிலிருந்து இலங்கையில் நாம் கற்றுக்கொள்ளக்கூடிய பல முக்கியமான பாடங்கள் உள்ளன. சிலியின் முதல் சோசலிச ஜனாதிபதி அலெண்டே மற்றும்1971 இல் இலக்கியத்துக்கான நோபல் பரிசை வென்ற சிலிக் கவிஞரும் இராஜதந்திரியும் அரசியல்வாதியுமான ்ப ப்லோ நெருடாவின் ஆளுமைகள் காரணமாக இலங்கை மக்களின் ஆர்வத்தை தூண்டிய நாடாக சிலி கருதப்படலாம். . சிலி 1980 இல் பினோசே யின் ஆட்சியின் கீழ் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பையும் கொண்டுள்ளது. இது ஜே.ஆர்.ஜெயவர்தனா வின் இலங்கையின் அரசியலமைப்பைப் போன்று 15 முறை திருத்தப்பட்டுள்ளது.

2019 அக்டோபர்25 அன்று, சிலி மக்கள் சந்தி யாகோ நகரில் அணிவகுத்து, நாட்டின் ஒட்டுமொத்த ஆட்சி முறைமையில் அடிப்படை மாற்றத்தைக் கொண்டுவரும் அரசியலமைப்பைக் கோரி கடுமையான போராட்டத்தைத் தொடங்கினர். இந்த நிகழ்வில் ஏறக்குறைய 1.2 மில்லியன் மக்கள் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்போதிருந்து, சிலி வீதி ஆர்ப்பாட்டங்களின் நாடாக மாறியது. புதிய அரசியலமைப்பை உருவாக்குவது தொடர்பில் மக்கள் முன்வைக்கும் மற்றுமொரு முக்கியமான கோரிக்கை, மக்கள் எத்தகைய மாற்றத்தை கோருகின்றார்கள் என்பதைக் கண்டறிய அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்பதேயாகும்.

அதைத் தொடர்ந்து, 2020 அக்டோபரில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. புதிய அரசியலமைப்பின் தேவைப் பாடு தொடர்பாக 78% பேர்.அங்கீகாரம் அளித்துள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதித்துவத்திற்கு முன்னுரிமை அளிக்கும் ஒரு அரசியலமைப்பு பேரவைக்கு பதிலாக, மக்கள் பிரதிநிதிகளை மட்டுமே கொண்ட அரசியலமைப்பு நிர்ணய சபையை அமைப்பதற்கு 79%பேர் அளித்துள்ளனர். 2021ஆம் ஆண்டு மே 15, 16ஆம் திகதி களில் அரசியலமைப்புநிர்ணயசபை மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்பட்ட தேர்தல் முடிவுகள் குறிப்பிடத்தக்கவை. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் 49.5% பெண்கள் என்பது இந்தத் தேர்தலின் மிக முக்கியமான சிறப்பம்சமாகும்.

50% பெண் பிரதிநிதிகளைக் கொண்ட உலகின் முதல் அரசியலமைப்புநிர்ணயசபை இதுவாகும். அடுத்ததொரு முக்கியமான விடயம், தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளில் 66% பேர் சுயேச்சைப் பிரதிநிதிகள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் வெற்றி இல்லாவிட்டாலும் கூட ஒரு சக்திவாய்ந்த வெகுஜன பிரசாரத்தின் மூலம் அரசியலமைப்பின் உருவாக்கம் வெற்றிபெற முடியும் என்பதை சிலி அனுபவம் தெளிவாக பிரதிபலிக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்பு இல்லாமலேயே அரசியலமைப்பை உருவாக்க முடியும் என்பதையும் இது காட்டுகிறது.

தற்போது அரசியலமைப்பை உருவாக்கும் நாடுகளில் 'மக்கள்' அல்லது 'பங்கேற்பு' அரசியலமைப்பு உருவாக்கம் மிகவும் பிரபலமான முன்மாதிரியாக விளங்கினாலும் , அது புதிய பங்கேற்பு கட்டமைப்புகள் மற்றும் மாதிரிகள் தொடர்பாக மேலும் பரி சோதிக்கப்படும் செயற் பாட்டில் உள்ளது. பேராசிரியர் விவியன் ஹார்ட் கூறியது போல,'பங்கேற்பு கட்டமைப்புகளை பரிசோதித்து, பிரஜைகள் இந்த செயற் பாட்டில் முன்முயற்சி எடுப்பதற்கான வாய்ப்பை வழங்குவதன் மூலம், பங்கேற்பு அரசியலமைப்பை உருவாக்குவது குறித்த திறந்த உரையாடலை உருவாக்க முயற்சி செய்யப்படுகிறது. இதனால் நிகழ்ச்சி நிரல், உள்ளடக்கம் மற்றும் இறுதி அங்கீகாரம் ஆகியவற்றை தொகுக்கும் அரங்குகளில் பொதுமக்களின் பங்கேற்பு நீடிக்கப்படுகிறது

அரசியலமைப்பை உருவாக்கும் செயற்பாட்டில் பங்கேற்கும் மக்களின் உரிமையும் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த உரிமையைப் பயன்படுத்துவதற்கு பொதுமக்களுக்குக் கிடைக்கும் ஏற்பாடுகள், இன்றைய அரசியலமைப்பை உருவாக்கும் செயல்முறையின் நியாயத்தன்மையின் அளவை நிர்ணயிக்கும் ஒரு குறியீடாகச் செயற்படுகிறது. இறுதியாக, இந்த அணுகுமுறையானது, தொடர்ச்சியாகவும், வெளிப்படையாகவும், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய ஒரு பொது உரையாடலைப் பின்பற்றி, ஜனநாயக முறையில், அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும், அவர்களின் மரியாதையைப் வென்றெடுப்பதற்கும் நாடிநிற்கிறது .

பினான்சியல் டைம்ஸ்



# சுபீட்சம் நிறைந்த இலங்கையா என்ன நடைபெறுகிறது?

● குருபரன்

பொது ஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கோட்டபாய ராஜபக்ச களமிறங்கி வெற்றிவாகை சூடி இரண்டு வருடங்கள் நிறைவு பெற்றுள்ளது. சுபீட்சமான இலங்கையை கட்டியெழுப்புவோம் என்பதே ஜனாதிபதியின் இலக்காக அமைந்திருந்தது. எனவே இந்த லட்சியத்தில் ஈடுபடுவதற்காக இலங்கை அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தில் இடம்பெற்றிருந்த நிறைவேற்று அதிகார முறைமைக்கு ஏற்படுத்தப்பட்டிருந்த மட்டுப்பாடுகள் , கட்டுப்பாடுகள் யாவும் நீக்கப்பட்டு 20வது திருத்தத்தின் ஊடாக உலகிலேயே அதிகம் அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இன்றைய ஜனாதிபதி தன்னை மாற்றியிருந்தார். இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தலைமையிலான விசேட செயலணி ஒன்று பாராளுமன்ற அதிகாரத்தை சவாலுக்கு உட்படுத்தும் விதத்தில் அமைக்கப்பட்டது. மேலும் தனிச்சிங்கள அமைச்சரவை உருவாக்கம் ஒப்பாசாரத்திற்காக ஒரு சில தமிழ் முஸ்லிம் அமைச்சர்கள் இடம்பெற்றிருந்தாலும் நோக்கம் தனிச்சிங்கள அமைச்சரவை என்பதில் பிசகு இருக்கவில்லை. தனி சிங்கள ஆதிக்கம் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் என பேரினவாத தளத்தில் உள்ளவர்களை குளிரச் செய்யும் பல முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. நல்லாட்சி காலப்பகுதியில் தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு சற்று முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது. இம் மக்களின் அடிப்படை பிரச்சனைகள் தீர்க்கப்படாருந்தாலும் ஒரு விதத்தில் தேசிய இனங்களின் உணர்வுகள் மதிக்கப்படும் சூழ்நிலை உருவாகியிருந்தது. இந்த மேல் வருகை பேரினவாத தளத்தில் பெரும் அதிர்ச்சியை கோபத்தைக் கிளறி இருந்தது. எனவே நல்லாட்சி அரசுக்கு எதிராக இனவாத பிரசாரங்கள் மேல் வந்த நிலையில் புதிய அரசியல் யாப்புக்கான செயற்பாடுகளில் இலங்கை வரலாற்றில் முதல் முறையாக தமிழ் பிரதிநிதித்துவம் முக்கியத்துவம் பெற்றதாக காணப்பட்டது. எனவே தேசிய இனங்களில் ஒன்றிணைந்த செயற்பாடுகள் இனவாத முறையில் திசை திருப்பப்பட்டு நாட்டைப் பிரிக்கப் போகின்றார்கள் என்ற பிரச்சாரம் முன்னிலை பெற்றது. அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு சாதகமாகவே தென்னிலங்கை மக்கள் ஜனாதிபதி தேர்தலில் அமோக ஆதரவை வழங்கியிருந்தனர்.

சுபிட்சமான இலங்கை கட்டி எழுப்பப்பட போகிறது என்ற மகிழ்ச்சி பிரவாகத்தில் வீதிகள் எங்கும் ஓவியங்கள் வரைய இளைஞர்கள் உணர்வு மேலிட்டால் முனைந்தனர். ஆனால் காலம் செல்லச் செல்ல தென்னிலங்கை மக்கள் அரசாங்கத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கைகள் தளர்வடைய தொடங்கின . புதிய ஆட்சியாளர்களால் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது என்பதையும் மக்கள் புரிந்து கொள்ளத் தொடங்கினார். ஊழல்கள் மலிந்தன. அரச உத்தரவுகள் மதிக்கப்படாத நிலை மேல் நிலைக்கு வந்தது. இவை பற்றி கவலைப்படாத அரசாங்கம் இறுதி முயற்சியாக பசுமைப் புரட்சியை ஏற்படுத்தப் போகிறோம் என கூறி ரசாயன உர பாவனையை கடந்த ஏப்ரல் மாதம் தடை செய்தனர். இதனால் விவசாயத்தை நம்பி வாழ்ந்த விவசாய குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வந்தன. இந்த காலகட்டத்தில் இந்தியாவில் பிரதமர் மோடி அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட மூன்று சட்டமூலங்கள் வாபஸ் பெறப்பட்டுள்ளது. இந்நிலை விவசாயிகளின் கடுமையான எதிர்ப்பும் 700 விவசாயிகள் இப் போராட்டத்தில் மரணித்த நிலையும் உத்தரப்பிரதேசம் பஞ்சாப் சட்டசபைத் தேர்தல்களை கருத்தில் கொண்டு பிரதமர் மோடி சட்டமூலங்களை வாபஸ் பெற்று இருந்தார். இதன் தாக்கமோ என்னமோ இலங்கையும் சேதனப் பசளை என்ற இறுக்கமான நிலைப்பாடு தளர்த்தப்பட்டு இரசாயன உரங்களை இறக்குமதி செய்ய தனியாருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய ஆட்சியாளர்கள் சர்வதேச அரசியலில் யதார்த்த நிலையை புரிந்து கொள்ளாது தனது பயணத்தை தொடர்ந்ததால் இன்று முட்டுச் சந்தியில் எங்கே போவதென்று தெரியாமல் விழிபிதுங்கும் நிலையை தோற்றுவித்துள்ளது. அமெரிக்க தேசம் ஜனநாயகத்துக்கான ஒன்றுகூடல் என்ற மாநாடு ஒன்றை டிசம்பர் மாதம் 9ஆம் 10ஆம் திகதிகளில் ஏற்பாடு செய்திருக்கிறது. அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தலைமையில் நடைபெறும் இருக்கும் இந்த மாநாடு உலகில் உள்ள 110 நாடுகளின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இம்மாநாட்டுக்கு சீனா, ரஷ்ய மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் மட்டும் அழைக்கப்படவில்லை. இலங்கையில் மனித உரிமை தொடர்பான விடயங்களில் தாம் திருப்தி கொள்ளவில்லையென பிரித்தானிய அரசாங்கம் அறிவித்துள்ளது. இதேநேரம் அமெரிக்க நிர்வாகம் தமிழ் மக்களுடன் இணைந்து சமாதானத்தை ஏற்படுத்த ஆய்வுகளை நடத்தி வருகிறது. இதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பினரை அமெரிக்க நிர்வாகம் அழைத்திருந்தது. மேலும் உலகத் தமிழர் பேரவையும் அழைக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையில் மனித உரிமை என்ற விடயம் பிரதான பாத்திரத்தை வகிக்கும் என அமெரிக்கா அறிவித்தும் உள்ளது. தற்போதும் கூட அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் இலங்கை நம்பாத நிலை தொடர்கிறது. என்னதான் இலங்கைத் தந்திர ரீதியான செயல்பாடுகளை முன்னெடுத்தாலும் உலகின் நம்பகத்தன்மையை பெறாத நிலை தொடர்கிறது.

இலங்கை வரலாற்றில் 1970 ஆம் ஆண்டுக்கு பின்னர் பாராளுமன்றத்தில் மக்களுக்கு வழங்கப்படுகின்ற வாக்குறுதிகள் ஒரு பக்கத்தில் இருக்க பின்னைய நாட்களில் அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தல் மூலம் தமக்குத் தேவையானதை நாசூக்காக செய்து வந்தமை சகலரும் அறிந்ததே. ஆனால் இன்றைய ஆட்சியாளர்கள் வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடுவதும் தமது நிலைப்பாடுகளில் தாம் நிமிர்ந்து நிற்கிறோம் என மார்தட்டுவதும் பின்னைய காலப்பகுதியில் வர்த்தமானி அறிவித்தல்களை வலிதற்ற தாக்குவதும் நாளாந்த விடயமாக மாறி வருகிறது. 'எண்ணித்துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவோம் என்பது இழுக்காகும்' இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு தீர்மானங்களை எடுப்பது தொடர்பாக வள்ளுவர் கூறியிருப்பது இன்றும் உயிரோட்டமாக உள்ளது.

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகு அனர்த்தத்தில் 6 பேரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளது. நான்கு பாடசாலைச் சிறார்கள் இதில் மரணித்துள்ள நிலை இந்தநாட்டில் மனிதாபிமானமுடைய அனைவரினது இதயங்களையும் கசக்கி பிழிந்த சம்பவமாக காணப்படுகிறது. ஆனாலும் அரசாங்கத் தரப்பில் குறிப்பாக அமைச்சர்கள் விதண்டா வாதங்களை முன்வைத்து உண்மைகளை குழி தோண்டி புதைக்கும் ஈனமான போக்கினை நேரடியாக காணொளி மூலம் பார்க்கக் கூடியதாக இருந்தது. நாகரீக உலகில் இந்த சம்பவத்திற்கு பொறுப்பேற்று ராஜினாமா செய்ய வேண்டியவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் குதர்க்கமாக பேசி தப்பித்துக் கொள்வதை இலங்கையில் தான் பார்க்க முடியும். சுபீட்சமான இலங்கையை கட்டியெழுப்புதல் என்ற பயணத்தில் கிண்ணியா சம்பவம் கருப்பு புள்ளியாக வரலாற்றில் இடம்பெறும்.

ஒரு நாடு ஒரு சட்டம் என்ற செயலணிக்கு ஞானசார தேரரை தலைவராக நியமித்திருப்பது இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை எதிர்பார்த்திருக்கும் அமைதியை விரும்பும் மக்களுக்கு முகத்தில் அறைந்த நிலையை உருவாக்கியுள்ளது. என்னவிதமான அளவுகோலின் அடிப்படையில் இந்த தேர்வு இடம்பெற்றிருக்கிறது என்பது புரியாத புதிராக அமைந்துள்ளது. மீண்டும் ஏன் நீராகரிக்கப்பட்டவர்களை தெரிவு செய்கிறீர்கள் என கௌரவ ஜனாதிபதி விழித்திருப்பது அவரின் மிகுந்த எதிர்பார்ப்புடன் தொடங்கப்பட்ட பயணத்தில் அவருக்கு நம்பிக்கையீனம் ஏற்பட்டுள்ளது என்பதை தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

2022ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் செலவுகளுக்கான விளக்கங்களை ஒரு புறத்தில் வைத்துவிட்டு வருமானத்திற்கான யோசனைகள் கற்பனை கோட்டைகளாகவே அமைந்துள்ளது. மேற்படி நிறைவேற்ற முடியாத வருமான ஈட்டம் காரணமாகவே காலாண்டுக்கான தீர்மானங்களும் அங்கே முன்மொழியப்பட்டுள்ளன.

ஏகாதிபத்திய சக்திகளிடம் மன்றியிடமாட்டோம் அவர்களுடன் ஒப்பந்தங்களுக்கு செல்ல மாட்டோம் எந்தச் சூழ்நிலையிலும் சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடைய மாட்டோம் என்ற கர்ஜிப்புக்கள் காற்றில் கரைந்துள்ள நிலையில் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை தொடர்பாக அண்மைய அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இத்தகைய நிலையில் சுபீட்சமான இலங்கையைக் கட்டியெழுப்பும் கனவு கலைகின்றதா அல்லது நிஜமாகவே போகின்றதா என்பது வரவிருக்கும் நாட்களில் தெளிவாகவே தெரிந்துகொள்ள முடியும்.

> 2022ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் செலவுகளுக்கான விளக்கங்களை ஒரு புறத்தில் வைத்து விட்டு வருமானத்திற்கான யோசனைகள் கற்பனை கோட்டைகளாகவே அமைந்துள்ளது. மேற்படி நிறைவேற்ற முடியாத வருமான ஈட்டம் காரணமாகவே காலாண்டுக்கான தீர்மானங்களும் அங்கே முன்மொழியப்பட்டுள்ளன. ஏகாதிபத்திய சக்திகளிடம் மண்டியிடமாட்டோம், அவர்களுடன் ஒப்பந்தங்களுக்கு செல்ல மாட்டோம், எந்தச் சூழ்நிலையிலும் சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடைய மாட்டோம் என்ற கர்ஜிப்புக்கள் காற்றில் கரைந்துள்ள நிலையில் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை தொடர்பாக அண்மைய அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

# மறுபக்கம்

–கோகர்ணன்

சமையல் வாயு சிலிண்டர்கள் வெடிப்பது இப்போது மிகவும் பேசப்படுகிறது. எனினும் வெடிப்பன சிலிண்டர்களல்ல. வெடிப்புக்குக் காரணம் வாயுக் கசிவு. கசிவு புதிய விடயமல்ல. அதன் பலனான தீ விபத்தே, மூடிய அறைகளிற் பெரு வெடிப்புடன் நிகழ்கிறது.

சிலிண்டரில் ஒரே ஒரு இடத்திற்தான் கசிவு நிகழ முடியும். அது சிலிண்டர் உச்சியில் உள்ள வால்வில் நிகழலாம். சிலிண்டருள் உள்ள வாயுவின் அழுக்கம் கூடினால் கசிவுக்கு வாய்ப்புண்டு. ஆனால் நல்ல நிலையிலுள்ள வால்வு எளிதிற் கசிய இடமளியாது.

சில காணொளிகளில் சிலிண்டரின் வாயிலிருந்து வாயு கசிவதைக் காட்டினர். இது வால்வு பழுதாயிருந்தால் மட்டுமே நிகழும். எந்த வால்வுமே அதற்கு நியமித்த வாயு அழுத்தத்திலும் அதிக அழுத்தத்தைத் தாங்கும். வால்வின் தடுப்பு சரியாகப் பொருந்தாவிடின் கசிவுக்கு இடமுண்டு. எனவே சிலிண்டர்கள் காலாகாலம் சோதிப்புக்கு உட்பட வேண்டும்.

சிலிண்டருடன் அடுப்பை இணைக்கும் குழாய் சரியாகப் பொருத்தியிராவிடினும் கசிவு நிகழலாம்.; அடுப்புடனான இணைப்பிலும் கசிவு ஏற்படலாம். அடுப்புச் செவ்வையாக மூடியிராவிடினும் வாயு கசியலாம். எவ்வாறாயினும் முன் நிகழ்ந்திராதளவுக்கு இப்போது நிகழ்வதற்குத் தக்க காரணம் இருக்க வேண்டும். சமையல்வாயு எல்.பி.ஜி. (திரவமான பெற்றோலிய வாயு) பொதுவாக புரோப்பேன், பியூட்டேன் எனும் இரு வாயுக்களின் கலவை புரோப்பேன் அறை வெப்ப நிலையிற் திரவமாகக் கூடிய அழுக்கம் தேவை. பியூட்டேனுக்கு அதினுங் குறைந்த அழுக்கமே தேவை.

இரு பதார்த்தங்களதும் விகிதாசாரத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அறை வெப்பநிலையில் சிலிண்டரில் உள்ள அழுக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.; அறை வெப்பநிலை கூடும் போது சிலிண்டர் அழுக்கம் வளரும். எனவே கசிவுக்கு வாய்ப்பும் பகலில் அதிகம். பரவலாக வெடிப்புகள் இரவிலேயே நிகழ்ந்துள்ளன. இது விசாரிக்கத்தக்கது.

புரோப்பேன் - பியூட்டேன் கலவைகளில் புரோப்பேனின் விகிதாசாரத்தைக் குளிர்வலய நாடுகளிற் கொஞ்சம் அதிகமாக வைப்பர். ஏனெனின் குளிர்ந்த சிலிண்டரிலிருந்து எரிபொருள் வாயுவாகி வெளியேற எரிபொருட் கலவை எளிதில் வாயுவாகக் கூடியதாயிருக்க வேண்டும். வெப்ப வலய நாடுகளில் மிகையான வாயு அழுக்கத்தைத் தவிர்க்க பியூட்டேனின் விகிதாசாரத்தை உயர்த்துவர். எவ்வாறோ புரோப்பேன் விகிதம் அதிகமான எல்.பி.ஜி. லிற்றோ கம்பனிக்குக் கிடைத்துள்ளது. இது ஏன் நடந்தது என யாருக்கும் இதுவரை தெரியாது.

பொதுவாக எந்த எரிபொருளை வாங்கும் உடன்படிக்கைகளில் எரிபொருளின் இயல்புகள் கூடினுங் குறையினும் அது உடன்படிக்கை மீறலாகும். எனவே லிற்றோ கம்பனி அவ்விடயத்திற் தவறியிருப்பின அது பாரிய நிர்வாகத் தவறாகும். எவ்வாறாயினும் இப்போதைய விபத்துகள் லிற்றோ நிறுவனத்தின் மீது பொது மக்களின் நம்பிக்கைக்கு ஒரு பெரிய இடியாகும். அது குறுகிய காலத்திற் கூடக் கம்பனிக்கு நட்டத்தை விளைவிக்கக்கூடும். அதைவிட உள்நாட்டுப் பண்டங்கள் மீதும் நிர்வாகத்தின் மீதும் மக்களிடையே அண்மைக்காலங்களில் மட்டுமன்றி நீண்டகாலமாகவே கொஞ்சம் அவநம்பிக்கை இருந்து வருவதை அறிவோம். அந்நியக் கம்பனி மேற்குலக இறக்குமதி என்பன பற்றி ஏலவே உள்ள மோகத்துக்கு இது வலுச்சேர்க்கும்.

எனவே அரசாங்கம் இவ்விடயத்திற் துரிதமாக முறையாக விசாரித்துத் திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். எடுப்பதிற் சிக்கல்கள் சில உண்டு. தவறுக்குப் பொறுப்பான உயரதிகாரிகளில் எவரும் அரசாங்கத்துக்கு நெருக்கமானவராயிருக்கும் வாய்ப்பு பெரிது. எனவே விசாரணையின் முடிவு கெக்குனே ராசன் தீர்ப்பு மாதிரித் தவற்றுடன் தொடர்பேயற்ற எவரையாவது தண்டிப்பதோடு முடியலாம்.

சமையல் வாயுக் கசிவால் விபத்து ஏற்படுவது தவிர்க்கக் கூடியது. காற்றோட்டமான ஒரு சமையலறையில் இவ்வாறான விபத்து நிகழ்வது மிக அரிது. பெரும்பாலும் இராப்போதில் குறிப்பாக அதிகாலையில் நிகழக் காரணம் சமையலறைகளை முற்றாக அடைத்து வைப்பதாகும். அப்போது நெடு நேரம் கசிந்த வாயு, அறை முழுதும் பரவிச் செறிவாக இருக்கும். அடுப்பை மூட்டத் தீப்பெட்டியையோ பொறியையோ பாவிக்கும் போது வாயுவும் காற்றும் சேர்ந்த கலவை சட்டெனப் பற்றி அறை முழுதும் பரவி வெடிப்பொலியை எழுப்பும் சில சமயம் மின்விளக்கு ஆளி (சுவிச்) இடப்படும் போதும் தீப்பற்றலாம்.

இவ்வாறான விபத்துகள் முன்னேறிய நாடுகளிலும் நிழ்ந்துள்ளன. எனவே சமையலறைக் கதவுகளின் அடியில் ஒரு நீக்கல் இருப்பதும் முடிந்தால் யன்னல் சற்றுத் திறந்திருப்பதும் பாதுகாப்பானது. சமையலறைக் கதவு யன்னல்களை இறுக அடைக்க ஒரு காரணம் களவுக்கு அச்சம் அதைவிட எலிகள் வீட்டுக்குள் நுழைவதும் ஒரு கவலை. எவ்வாறோ சமையலறை இரவில் முற்றாக அடையுண்டிருப்பது நல்லதல்ல.

அப்படியே அடையுண்டிருந்தாலும் மின்விளக்கை ஏற்று முன்னரோ அடுப்பைப் பற்றவைக்கு முன்னரோ சமையலறையில் சமையல் வாயு மணம் வருகிறதா என்று கவனிப்பது முக்கியம்.

ஒரு சமூகமாக நாம் நுகர்வுக்குட் துரிதமாக நுழைகிறோம். அந்த நுகர்வுடன் தொடர்புடைய தொழில்நுட்பம் பற்றி நம் அறிவு குறைவு. பண்டங்களின் பாவனை பற்றி நாம் துரிதமாகக் கற்கிறோம். சில சமயம் ஒரு கருவியாற் செய்யக்கூடியது என்று சொன்னதற்கு மேலாகவும் நம்மாற் செய்ய இயலுகிறது. ஆனாற் பாதுகாப்பு என்ற விடயத்தில் நாம் இன்னமும் மிக அசட்டையாகவே இருக்கிறோம்.

கைத்தொலைபேசிகள் தீப்பற்றி வெடிப்பது பற்றி அடிக்கடி கேள்விப்படுகிறோம். அவ்வாறு நிகழக் காரணங்களையும் நாம் அறிவோம். ஆயினும் அறிந்துகொண்டே அதை அனுமதிக்கிறோம்.

சரியான மின்சாரப் பிளக்கு கைக்குக் கிடையாவிட்டாற் கம்பிகளை முறுக்கிச் சொக்கற்றிற் செருகிக் கருவிகளை இயக்குவது அவசரத்துக்கு நடப்பதைவிட ஒழுங்காக நடப்பது அதிகம் என்றே நினைக்கிறேன் உருக்கொட்டலுக்கு (வெல்டிங்) பாதுகாப்புக் கண்ணாடியும் உடம்பைக் கவனமாக மூடுதலும் இல்லாமலே பலர் செயற்படுவதை தொழிற்சாலைகளிற் காணலாம். பாதுகாப்பான காலணிகள் இல்லாமல் தொழிற்சாலைகளிற் பணியாற்றுவது மட்டுமன்றி நுழைவதே பல நாடுகளில் இயலாது. எனினும் இந்த நாட்டிலும் தென்னாசியாவின் பிற பகுதிகளிலும் பாதுகாப்புப் பற்றிய அசட்டை அதிகம்.

ஒரு சமூகத்தின் பொருளாதார உயர்வுக்கு கடும் உழைப்பு தேவை. ஆனால் உழைப்பின் கடுமையை விட ஒவ்வொருத்தருடைய பாதுகாப்பும் பற்றிய கவனம் முக்கியம்.

எந்த உபகரணமும் ஒரு குழந்தை தற்செயலாக அணைந்தாற் கூடப் பாதிப்பேற்படாதவாறு கையாளப்பட வேண்டும்.

சமையல்வாயு சிலிண்டர்களின் வெடிப்புப் பற்றிய பரபரப்புத் தலையங்கள் ஏற்படுத்திய சலசலப்பை விட முக்கியமானது மனிதரின் பாதுகாப்பு விபத்துகள் நேர்வதைத் தவிர்ப்பது முக்கியம். விபத்துச் செய்திகளைத் தவறாக சிலிண்டர் வெடிப்பு சிலிண்டர்களைக் குண்டுகளுடன் ஒப்பிடுவது போன்ற கதைகள் பொறுப்பற்றவை. அவை பீதியைக் கிளப்புவன.

இந்த விபத்துகளினின்று பாதுகாப்புப் பற்றிய பாடங்களை நமது சமுதாயம் கற்குமெனின் அது விபத்துகளால் விளைந்த நன்மையாகும். அதேவேளை அரசாங்கம் கற்க வேண்டிய தொழில்நுட்பமும் விஞ்ஞானமும் வேண்டும் என்றால் விடயம் தெரிந்தவர்கள் பொறுப்புகளில் அமர்வது அனைவருக்கும் நன்மையாகும்.




# பிரதமர் வேட்பாளருக்கு புது வியூகம் மம்தா விரிக்கும் வலையில் சிக்குமா எதிர்க்கட்சிகள்

• பாபு லக்ஷ்மன்

காங்கிரஸ் தலைவர்கள் சோனியா, ராகுல் இருவரும் அதிர்ச்சி மேல் அதிர்ச்சி அடையும் விதமாக அரசியலில் சில நிகழ்வுகள் அண்மைக்காலமாக நடந்து வருகிறது. அது காங்கிரஸ் கட்சியின் அஸ்திவாரத்தையே ஆட்டம் காண வைப்பதாகவும் அமைந்துள்ளது.

6 மாதங்களுக்கு முன்பு நடந்த மேற்கு வங்க சட்டப் பேரவைத் தேர்தலில் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் அபார வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றிய பின்பு, அந்த வெற்றி பாஜகவுக்கு ஏற்படுத்திய நெருக்கடியை விட 136 ஆண்டுகள் பழமையான காங்கிரசுக்கு பெரும் தலைவலியாக அமைந்துவிட்டது.

சட்டப்பேரவை தேர்தலுக்கு பின்பு, கடந்த ஜூலை மாதம் டெல்லி வந்த மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, அப்போது காங்கிரஸ் தலைவர் சோனியாவை சந்தித்துப் பேசினார். ஆனால் அண்மையில் மூன்று நாள் பயணமாக டெல்லி வந்தபோது, சோனியாவை சந்திப்பதை தவிர்த்தார்.

டெல்லிக்கு கிளம்பு முன் கொல்கத்தாவில் அவரிடம் செய்தியாளர்கள் சோனியாவை சந்திப்பீர்களா? என்று கேள்வி எழுப்பியபோது, அதற்கு மம்தா, அடுத்து வரும் பஞ்சாப் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து அவர் தீவிர ஆலோசனையில் இருப்பார். அதனால் அவரை சந்திக்க வாய்ப்பில்லை என்று ஒரு சப்பை காரணத்தை சொன்னார். அதோடு அவர் நிறுத்திக் கொண்டிருந்தால் கூட பரவாயில்லை.

ஒவ்வொரு முறையும் டெல்லி வரும்போது அவரை சந்தித்தே ஆகவேண்டும் என்று ஏதாவது கட்டாயம் இருக்கிறதா? என்று எழுப்பிய எதிர் கேள்விதான் காங்கிரசை, பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது.

அதாவது, தான் டெல்லி சென்ற பிறகு சோனியாவை சந்திக்கவில்லை என்றால், அது தேசிய அளவில் ஒரு பெரிய விஷயமாக பேசப்படும் என்பதை தவிர்ப்பதற்காகவே, டெல்லிக்கு புறப்படும் முன்பாகவே மம்தா பானர்ஜி அதை பகிரங்கமாக இப்படி கூறிவிட்டார். அதுமட்டுமின்றி, பாஜகவை எதிர்க்கும் துணிச்சல், தைரியம் காங்கிரசுக்கு கிடையாது. எனது கட்சி பாஜகவுக்கு மாற்றாக இருக்கும் என்று நம்புவதால் காங்கிரஸ் தலைவர்கள் திரிணாமுல் காங்கிரசில் ஆர்வத்தோடு சேர்கிறார்கள். காங்கிரசின் இயலாமைக்கு நாங்கள் என்ன செய்ய முடியும்? என்றும் ஒரு போடு போட்டார்.

**நிராகரிப்பு**

இதற்கு முன்பாக கடந்த ஆகஸ்ட் மாதம் தனது அரசியல் ஆலோசகர் பிரசாந்த் கிஷோர் மூலம் எதிர்க் கட்சிகளை ஒருங்கிணைக்க மம்தா ஒரு பகீரத முயற்சி மேற்கொண்டார். அதைத் தொடர்ந்து காங்கிரஸ் தலைவர் சோனியா, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார் ஆகியோரை தனிப்பட்ட முறையில் பிரசாந்த் கிஷோர் சந்தித்தும் பேசினார். ராஷ்ட்ரிய ஜனதா தளத்தின் தலைவர் லாலு பிரசாத்தையும் அவர் போன் மூலம் பேசி ஆதரவு திரட்டினார். அப்போது பிரதமர் வேட்பாளருக்கு மம்தாவை நிறுத்தலாம் என்று அவர் கூறியதாக தகவல் வெளியானது. இந்த யோசனையை காங்கிரஸ் உள்பட சில கட்சிகள் ஒப்புக் கொள்ளவில்லை.

இதையடுத்தே மம்தா பானர்ஜி காங்கிரஸ் கட்சியை கொஞ்சம் கொஞ்சமாக காலி பண்ணும் முயற்சியில், தீவிரமாக இறங்கியிருக்கிறார்.

**மேகாலயாவில் அவுட்**

இம்முறை மம்தாவின் டெல்லி பயணத்தின்போது, மேகாலயா காங்கிரசில் திடீர் பிளவு ஏற்பட்டது. அந்த மாநில சட்டப்பேரவையில் காங்கிரஸுக்கு 17 எம்எல்ஏக்கள் உள்ளனர். இவர்களில் 12 பேர், திடீரென தாங்கள் காங்கிரசிலிருந்து விலகி திரிணாமுல் காங்கிரஸில் சேர்ந்து இருப்பதாகவும், எனவே எங்களை திரிணாமுல் காங்கிரஸ் எம்எல்ஏக்களாக அங்கீகரிக்க வேண்டுமென்றும் சபாநாயகரிடம் கடிதம் கொடுத்துள்ளனர். இப்படி கட்சி தாவிய தலைவர்களில் மிக முக்கியமானவர், மேகாலயா முன்னாள் முதலமைச்சர் முகுல் சங்மா. இதனால் காங்கிரஸ் தலைமை அதிர்ந்து போயுள்ளது.

உட்கட்சிப் பூசல் காரணமாக, காங்கிரஸ் எம்எல்ஏக்கள் இப்படி கட்சி தாவி இருப்பதாக தெரியவந்துள்ளது.

**நிலைகுலைந்த சோனியா**

மேலும் கடந்த நான்கு மாதங்களாக, காங்கிரஸ் தலைவர்களை மம்தாவின் கட்சி, வலை வீசிப் பிடித்து வருகிறது. இதில் முதன்முதலாக சிக்கியவர், காங்கிரஸ் மகளிர் அணி தலைவி சுஷ்மிதாதேவ். இவர் அசாம், திரிபுரா மாநிலங்களில் தனி செல்வாக்கு கொண்டவராக கூறப்படுகிறார். அதைத்தொடர்ந்து கோவா மாநில முன்னாள் முதலமைச்சர் லூசின்ஹோ திரிணாமுல் காங்கிரசுக்கு தாவினார்.

மிக அண்மையில் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த பிரபல முன்னாள் கிரிக்கெட் வீரர் கீர்த்தி ஆசாத், பவன் வர்மா, அரியானா மாநில காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான அசோக் தன்வர் ஆகியோர் டெல்லியில் மம்தாவை சந்தித்து, திரிணாமுல் காங்கிரசில் சேர்ந்து சோனியாவை நிலைகுலைய வைத்தனர்.

அது மட்டுமின்றி பிரதமர் மோடியின் சொந்தத் தொகுதியான வாரணாசியில், உத்தரப்பிரதேச முன்னாள் முதலமைச்சர் கமலாபதி திரிபாதியின் பேரன்களான ராஜேஷ் திரிபாதி, லலிதேஷ் திரிபாதி இருவரையும் காங்கிரசிலிருந்து விலக வைத்து தனது கட்சியில் சேர்த்துக் கொண்டார், மம்தா.

விரைவில் வாரணாசிக்கு சென்று நகர மக்களை சந்திப்பேன் என்றும் மம்தா கூறியிருக்கிறார். இதன்மூலம் பிரதமர் மோடி வாரணாசி தொகுதியில் மீண்டும் போட்டியிட்டால் அவரை எதிர்த்து தனது கட்சி சார்பில் கமலாபதி திரிபாதியின் பேரன்களில் யாராவது ஒருவரை நிறுத்துவேன் என்பதை மறைமுகமாக மம்தா கூறியிருக்கிறார்.

மம்தா இப்படி திரிணாமுல் காங்கிரசின் எல்லையை பல மாநிலங்களில் விரித்து, காங்கிரஸ் தலைவர்களை வளைத்துப் போடுவதற்கு, பல காரணங்கள் உண்டு, என டெல்லி அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

**காங்.,க்கு மாற்று டிஎம்சி**

அவர்கள் கூறும்போது, மோடியை வீழ்த்துவதற்கு காங்கிரசால் முடியாது என்று தொடர்ந்து மம்தா கூறிவருவதை காங்கிரஸ் தலைமை ஏற்கவில்லை. அதேநேரம் சோனியாவும் ராகுலும், மத்திய பாஜக அரசை வீழ்த்துவதற்கு எந்தவித திட்டமும் இல்லாமல் செயல்பட்டு வருகின்றனர்.

அவர்களுக்கு உட்கட்சி பிரச்சனையை சமாளிப்பதிலேயே நேரம் போய்விடுகிறது என மம்தா நினைக்கிறார். 2024 நாடாளுமன்றத் தேர்தலிலும் காங்கிரஸ் தோற்கும். அக் கட்சிக்கு 30 எம்பிக்கள் கிடைத்தாலே பெரிய விஷயம் என்றும் பேசப்படுகிறது.

அதனால்தான் அகில இந்திய அரசியலில்,மம்தா தீவிரம் காட்டி வருகிறார். தனது மாநிலம் தவிர வடகிழக்கு மாநிலங்களான அசாம், அருணாசலப் பிரதேசம் மணிப்பூர், மேகாலயா, நாகாலாந்து, மிசோரம், திரிபுரா, சிக்கிம் ஆகிய 8 மாநிலங்களில் 25 நாடாளுமன்ற தொகுதிகள் இருக்கின்றன.

கோவாவில் நாடாளுமன்ற இரண்டு தொகுதிகள் உள்ளன. இந்த மாநிலங்களிலெல்லாம் காங்கிரசுக்கு மாற்றாக திரிணாமுல் காங்கிரஸ் வலுவடையவேண்டும் என்பதுதான் மம்தாவின் எண்ணம். அப்படிச் செய்தால், வடகிழக்கு மாநிலங்களில் பாஜக கூட்டணியின் செல்வாக்கை கட்டுப்படுத்தி குறைந்தபட்சம் 15 தொகுதிகளை கைப்பற்றி விடலாம் என்றும் அவர் கணக்குப் போடுகிறார்.

இதேபோல், பக்கத்து மாநிலமான பீகாரில், லாலு பிரசாத் கட்சியுடன் காங்கிரசை கூட்டு சேர விடாமல் தடுக்கும் முயற்சியிலும் திரிணாமுல் காங்கிரஸ் ஈடுபட்டு வருகிறது. அங்கு ராஷ்டீரிய ஜனதா தளத்துடன் கூட்டணி வைக்கவே மம்தா விரும்புகிறார். இதன் மூலம் அந்த மாநிலத்திலும், குறைந்தபட்சம் 10 தொகுதிகளை கைப்பற்ற திட்டமிட்டு, அந்த மாநில காங்கிரஸ் தலைவர்களை தன் கட்சிக்குள் இழுத்துப் போட்டு வருகிறார்.

மேற்கு வங்காளத்தில் உள்ள 42 தொகுதிகளையும் கைப்பற்றி விட முடியும் என்கிற அசைக்க முடியாத நம்பிக்கையும் அவரிடம் உள்ளது.

**தி.மு.கவுக்கு வலை**

70 முதல் 80 தொகுதிகளில் வெற்றி பெற வாய்ப்பு இருக்கும்போது, எதிர்க்கட்சிகள் தன்னை பிரதமர் வேட்பாளராக ஒருமனதாக ஏற்றுக் கொள்ளும் என்பது மம்தாவின் கணக்கு. அதற்காகத்தான் காங்கிரஸ் இரண்டாம் இடத்திலுள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் திரிணாமுல் காங்கிரசின் கை ஓங்க வேண்டும் என்று அவர் நினைக்கிறார். அரசியல் ஆலோசகர் பிரசாந்த் கிஷோரும் அதற்கு செயல் வடிவம் கொடுத்து வருகிறார். தமிழகத்தை பொறுத்தவரை இந்த முறை, பிரதமர் வேட்பாளராக ராகுலை திமுக ஏற்காது என்றும் அதிக தொகுதிகளில் திமுக வெற்றிபெறும் பட்சத்தில், அக்கட்சி தன்னை ஆதரிக்கும் என்றும் மம்தா கருதுகிறார்.

இதனால் 2024 நாடாளுமன்ற தேர்தலில் பிரதமர் வேட்பாளராக ராகுலை ஏற்பதா அல்லது மம்தாவை ஏற்றுக்கொள்வதா? என்ற இக்கட்டான சூழல் திமுகவுக்கு உருவாகலாம்.

எது எப்படி இருந்தாலும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் 70 தொகுதிகளுக்கும் குறையாமல் கைப்பற்றி விட வேண்டும் என்ற திட்டத்துடன் மம்தா தேசிய அரசியலில் களமிறங்கி இருக்கிறார் என்று அரசியல் பார்வையாளர்கள் தெரிவித்தனர்.

பிரதமர் பதவியை பிடிக்க மம்தா பானர்ஜி இப்போதே போடும் கணக்கு வியக்கத்தான் வைக்கிறது!

இந்நிலையில்,எதிர்கட்சிகளின் கூட்டணிக்கு யார் தலைமை வகிப்பது என்ற மோதல் எழுந்த நிலையில், அரசியல் ஆலோசகர் பிரசாந்த் கிஷோர் நழுவிக் கொண்டார்.

2025ம் ஆண்டு நடைபெறும் நாடாளுமன்ற தேர்தலில் பாஜகவுக்கு எதிரான வலுவான எதிர்கட்சிகளின் கூட்டணியை உருவாக்க பெரும்பாலான கட்சிகள் விரும்புகின்றன. இந்தக் கட்சிகளை ஒன்று திரட்டும் பணியில் காங்கிரஸ் மற்றும் திரிணாமுல் காங்., கட்சிகள் முயன்று வருகின்றன. ஆனால், பிரதமர் வேட்பாளர் விவகாரத்தில் இரு கட்சிகளிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

கூட்டணி கட்சிகளை நம்பினால் வேலைக்காகாது என்பதை உணர்ந்த சோனியா மற்றும் ராகுல் காந்தி, பல கட்சிகளுக்கு தேர்தலில் வெற்றி பெற வியூகம் வகுத்துக் கொடுத்த பிரசாந்த் கிஷோரை, பல கோடி ரூபாய் செலவில் தங்களின் கட்சி ஆலோசகராக நியமனம் செய்தது. ஆனால், கட்சியின் செயல்பாடுகளை ஆய்வு செய்த அவரோ, மோடியை வேண்டுமானால் தடுக்கலாம். ஆனால், பாஜகவை தடுக்க முடியாது. அடுத்த 10 ஆண்டுகளுக்கு பாஜகவின் ஆட்சி தான், என்று அதிரடியாக பேசி, காங்கிரஸ் கட்சியினர் மீது இடியை இறக்கினார்.

அதுமட்டுமில்லாமல், ராகுல் காந்தி பிரதமர் வேட்பாளருக்கு தகுதியானவர் இல்லை என்பதையும் அவர் மறைமுகமாக சொல்லிவிட்டார். இதனால், என்ன செய்வது என்று புரியாமல் சோனியா, ராகுல் ஆகியோர் புலம்பி வருகின்றனர். இந்த நிலையில், காங்., கட்சியின் அரசியல் ஆலோசகர் பிரசாந்த் கிஷோர் மேலும் ஒரு குண்டை வீசியுள்ளார். அதாவது, காங்கிரஸ் பிரதிநிதித்துவப்படுத்தும் யோசனையும், இடமும் ஒரு வலுவான எதிர்க்கட்சிக்கு இன்றியமையாதது. ஆனால் காங்கிரஸின் தலைமை என்பது ஒரு தனிநபரின் தெய்வீக உரிமை அல்ல. குறிப்பாக கடந்த 10 ஆண்டுகளில் கட்சி 90% க்கும் அதிகமான தேர்தல்களில் தோல்வியடைந்து விட்டது. எதிர்க்கட்சித் தலைமை ஜனநாயக முறையில் முடிவு செய்யப்பட வேண்டும், எனக் குறிப்பிட்டுள்ளார்.

பாஜகவை எதிர்க்க எதிர்கட்சிகள் ஒன்றிணைந்தால்தான் முடியும் எனக் கூறப்பட்டு வரும் நிலையில், பிரதமரை தேர்வு செய்வதில் நிலவும் போட்டியால், பிரசாந்த் கிஷோர் தடுமாறி கிடக்கிறார். எனவே, தலைமை யார் வகிக்கப் போகிறார் என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள் எனக் கூறிவிட்டு அவர் ஒரங்கட்டிக் கொண்டார். எதிர்கட்சிகளுக்கு தலைமை வகிப்பது காங்கிரஸா இல்ல திரிணாமுல் காங்கிரஸா என்பது இன்னும் சில நாட்களில் தெரிய வந்துவிடும்.



# தமிழ் தலைமைகள் தமது இயலாமையை ஒப்புக் கோள்கின்றனரா ?

• நடராஜா ஜனகன்

அண்மைய நிகழ்வொன்றில் கலந்துகொண்ட தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தமது பேச்சின் போது அவர்களை அறியாமலேயே அவர்களது போதாமை , இயலாமை என்பவற்றை வெளிப்படுத்தியுள்ளனரா என்ற சந்தேகம் அவதானித்த அனைவருக்கும் வருவது தவிர்க்க முடியாத நிலையாகும்.

தமிழ் தலைமைகளிடம் காணப்படும் ஒற்றுமையின்மை காரணமாக பாரிய பின்னடைவுகளை தமிழ் சமூகம் சந்திக்க நேர்ந்துள்ளது என்றும் சில தமிழ் அமைப்புகளின் தலைவர்களிடம் காணப்படும் அகந்தை காரணமாக ஒற்றுமையாக பயணிக்க முடியாமல் போயுள்ளது என்றும் தமது மனக்குறைகளை கொட்டி தீர்த்துள்ளனர். அண்மையில் தமிழரசு கட்சியின் பிரதான தலைவர்கள் அமெரிக்காவுக்கு சென்றிருந்த சமயம் கனடாவில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றிலும் கலந்து கொள்வதற்காக கனடாவுக்கு சென்றிருந்தனர். மேற்படி நிகழ்வில் இவர்கள் உரையாற்ற முற்பட்டபோது சபையில் இருந்தவர்களால் குறுக்கீடு செய்யப்பட்டு இவர்களால் ஒரு வார்த்தையைக் கூட தெரிவிக்க முடியாமல் கூட்டம் குழப்பத்தில் முடிந்து அரங்கை விட்டு பின் கதவால் வெளியேறும் நிலை உருவாகியிருந்தது. தமிழரசு கட்சியின் தலைமைகளின் இயலாமைக்கு இந்த சம்பவம் சிறந்த உதாரணமாக அமைந்துள்ளது.

இன்றுள்ள மோசமான சூழ்நிலையிலும் வடக்கு, கிழக்கு மக்கள் தமது அடிப்படை பிரச்சினைகள் தொடர்பாக தொடர்ந்தும் போராடிக் கொண்டே இருக்கின்றனர். அதிகரித்த இராணுவ பிரசன்னம், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை , நிலங்களை மீளப் பெறல் , காணாமல் போன உறவுகளுக்கான பதில் , அரசியல் தீர்வு என்ற பிரதான கோரிக்கைகளை முன்னிறுத்தி போராடியே வருகின்றனர். தென் இலங்கையில் காணாமல் போனவர்கள் தொடர்பான அமைப்பினர் அங்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈட்டை கோரி நிற்கும் நிலையில் வடக்கு, கிழக்கில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் உண்மையைக் கூறுங்கள் எமக்கு , நஷ்ட ஈடுகள் தேவையில்லை உங்களிடம் கையளிக்கப்பட்டவர்களுக்கு பதிலை கூறுங்கள் என்ற நிலையில் தமது போராட்டத்தை நெறிப்படுத்தி வருகின்றனர் .

மேற்படி போராட்ட நிலைமைகள் தொடர்பான விடயங்களில் தமது கவனத்தை குவிக்காது தேர்தல் அரசியலில் காலத்தை வீணடித்து வரும் இன்றைய தமிழ் தலைமைகள் விரக்தி நிலைக்கு செல்வதைத் தவிர வேறு தெரிவு இருப்பதாக தெரியவில்லை. தமிழ் மக்களின் விடுதலைக்காக களமிறங்கிய ஒவ்வொரு அரசியல் இயக்கமும் தமிழ் மக்களின் விடுதலை பெற முதலில் தமது போராட்டம் நிகழ்ச்சி நிரலை முதல் நிலைப்படுத்தி போராட்டக் களத்தில் இறங்க வேண்டும். இவர்களின் போராட்டம் உண்மையில் யதார்த்த நிலையை பிரதிபலித்தால் மக்கள் நிச்சயம் இவர்களுடன் இணைந்து கொள்வார்கள். மக்கள் இணைந்து கொள்வது மாத்திரமல்லாது ஏனைய தமிழ் அமைப்புகளையும் களத்தில் இறங்க அழுத்தத்தை வழங்குவார்கள். எனவே மற்றவர்களை குறை கூறி தமது இயலாமையை மறைக்க முயலாமல் இனி என்றாலும் காலம் தாழ்த்தாமல் மக்களை வெகுஜன எழுச்சிக்கு வழிநடத்தக் கூடிய வேலைத் திட்டங்களை முதன்மைப்படுத்தி போராட்ட காலத்தில் நிரந்தரமாக பயணிக்க தயாராக வேண்டும்.

இன்று இயற்கை அனர்த்தமென்பது தமிழ் தேச எங்கும் நிரந்தரமாக நிலையெடுத்து நிற்கும் நிகழ்வாக மாறியுள்ளது. இந்த மோசமான நிலையால் பொருளாதார ரீதியில் பின்தங்கியிருக்கும் சமூகப் பிரிவினர் வெளியில் சொல்ல முடியாத அளவுக்கு வேதனைகளை சுமந்து வாழ்கின்றனர். பாராளுமன்றத்தில் மட்டும் சில விமர்சனங்களை முன்வைப்பதால் பாதிப்புக்குள்ளான மக்களின் துயரங்கள் குறைந்துவிடாது. துயரத்தில் தவிக்கும் மக்களின் நிலையை மாற்ற உரிய செயற்பாடுகளை இவர்கள் முன்னின்று செயல்படுத்த முன்வர வேண்டும். ஒரு இனத்தின் விடுதலை என்பது நீண்ட நாட்களைக் கொண்டதாக அமையலாம். எனவே விடுதலை மாத்திரம் பேசிக்கொண்டு மக்களின் அன்றாட வாழ்வியல் துயரங்களை அரச ஆதரவு பிரிவினருக்கு குத்தகைக்கு வழங்க முடியாது.

வடக்கு கிழக்கு தெற்கு அரசியல் உறவு நிலை தற்போது பூச்சிய நிலையில் காணப்படுகிறது. தமிழ் தேச விடுதலைக்காக குரல் கொடுக்கும் போராட்டங்களை நடத்தும் பல முற்போக்கு அமைப்புகள் இன்றும் தென்னிலங்கையில் செயற் பட்டுக்கொண்டே இருக்கின்றன. மோசமான பேரினவாத சூழ்நிலை அவர்களின் செயற்பாடுகளுக்கு பாரிய தடைகளை ஏற்படுத்தி வந்தாலும் தமிழ் மக்களின் விடுதலைக்கான அர்ப்பணிப்பின் அவர்கள் தயார் நிலையிலேயே உள்ளனர். இன்றைய நிலையில் மாத்திரமல்ல என்றுமே வடக்கு கிழக்கு தெற்கு என்ற ஒன்றிணைந்த போராட்டச் செயற்பாடுகள் தமிழ் தேச விடுதலைக்கான பிரதான அம்சமாக அமைகின்றது.

சர்வதேச ரீதியாக தமிழ் மக்களின் நியாயப்பாடுகள் மேல்நிலைக்கு வர குறிப்பாக இந்திய உப கண்டத்தில் தமிழ் மக்களின் நியாய பாடுகள் ஏற்றுக்கொள்ளும் நிலை உருவாக இந்த இணைந்த போராட்ட உறவு அவசியமான ஒன்றாக காணப்படுகிறது.

தற்போதைய பூகோள அரசியல் சூழ்நிலை முன்பிருந்ததை விட மோசமான கட்டத்தில் உள்ளது. உலகப் பொருளாதார நிலை சரிந்து கொண்டே போகின்றது. இலங்கை அரசாங்கத்தின் காய்நகர்த்தல்கள் தேக்க நிலையில் காணப்படுவதுடன் மீள முடியாத சகதிக்குள் சிக்கியுள்ளது. இத்தகைய சூழ்நிலையில் தமிழ் தலைமைகள் தமிழ் மக்களின் நிரந்தர விடுதலைக்காக ஒன்றிணைந்த போராட்டச் செயற்பாடுகளை மேல் நிலைக்குக் கொண்டுவருவது காலத்தின் கட்டாயமாகும். வெறும் தேர்தல் அரசியல் நிகழ்ச்சி நிரலை விட்டு வெளியேறி உண்மையான தமிழ் தேச விடுதலைக்கான நகர்வுகளை மேற்கொள்ள முன்வர வேண்டும்.

அதற்கான விட்டுக் கொடுப்புக்கள், அர்ப்பணிப்புகள் , தியாகங்கள் நிறையவே செய்ய தயாராக வேண்டும். மற்றவர்கள் இணைகிறார்கள் என்ற நொண்டிச் சாட்டுகள் இன்றைய சூழ்நிலையில் வலுவிழந்தாகவே காணப்படுகிறது. என்றெல்லாம் இணக்க அரசியலின் நிழலில் தமிழ் தலைமைகள் பயணிக்க முயல்கின்றனரோ அந்தப் பயணத்தை தமிழ் மக்கள் ஏற்காத நிலை தொடர்கிறது. போராட்ட அரசியல் பாதையின் தெரிவையே தமிழ் தேசம் என்றுமே வரவேற்று வருகின்றது.




# பல்பக்கத் தாக்குதல்களால் திணறும் அரசாங்கம்!

**நஜீப் பின் கபூர்**

தொடக்கத்திலேயே நெருக்கடியின் பாரதூரத்தை சொல்லிவிட்டு கதைக்கு வருவோம்.இந்த பாரதூரமான கதை கூட எமது கண்டுபிடிப்பல்ல. பீ.பி. ஜயசுந்தர என்பவரை நாடு நன்றாகவே தெரிந்து வைத்திருக்கின்றது. ஒரு காலத்தில் பொருளாதார படுகொலையாளி என்றும் இந்த மனிதனை விமல் வீரவன்ச விமர்சித்திருந்தார். இந்த பீ.பி. நாடு என்னதான் பொருளாதார ரீதியில் பாதாளத்துக்கு போய்க் கொண்டிருந்தாலும் அவர் ராஜபக்ஸாக்களின் தேவைக்கு எங்கிருந்தாலும் பணத்தை தேடிக் கண்டு பிடித்துக் கொடுப்பது அவரது வழக்கமான திறமையாக இருந்தது. இந்த பணக் கொடுக்கல் விவகாரம் மூத்த ராஜபக்ஸாக்களுக்கு மட்டுமல்ல அவர்களது குஞ்சுகளுக்கு கூட அள்ளிக் கொடுப்பதில் இந்த மனிதன் ஒரு போதும் பின் வாங்கியது கிடையாது. இல்லை என்று சொல்லியதும் கிடையாது.

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு கிங்ஸ் பெரி ஹோட்டலில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் பீ.பி.ஜயசுந்தர சொன்ன கருத்துக்களை அப்படியே இங்கு தருகின்றோம். இப்படி ஒரு நிலைமை நாட்டுக்கு வரும் என்று நான் ஒரு போதும் எதிர்பார்க்கவில்லை. நாட்டில் என்னதான் நடக்கின்றது என்று எனக்கு புரியவில்லை.நிலைமை எனது கட்டுப்பாட்டையும் மீறிச் சென்று விட்டது. இதன் பின்னர் என்னால் ஒன்றும் பண்ண முடியாது என்று அவர் பகிரங்கமாக பேசி இருக்கின்றார். ராஜபக்ஸாக்களின் பொருளாதார விற்பன்னராக இதுவரை பார்க்கப்பட்ட பீ.பி. கையை விரித்து விட்டார். இதிலிருந்து நாட்டு நிலைமையை மக்கள் புரிந்து கொள்ள முடியும்.அவரது இந்தச் செய்தி கேட்டு ராஜபக்ஸாக்கள் அதிர்ந்து போய் இருக்கின்றார்கள். கடைசி நேரத்தில் தானா உமக்கு இது புரிந்தது என்று வேறு இப்போது மூத்த ராஜபக்ஸ இவரை போட்டுத் திட்டித் தீர்த்ததாகவும் ஒரு தகவல் நமக்கு கிடைத்திருக்கின்றது.

நாமும் நெடுநாளாக நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடி ஒன்று வருகின்றது என்று சொல்லி வருகின்றோம்.அத்துடன் இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு கொவிட்டை முழுக்க முழுக்க குற்றம் சாட்ட முடியாது.இதற்கான நியாயங்களை நாம் முன்பே சொல்லி இருந்தோம். இப்போது மீண்டும் கொவிட் புது வேடம் தரித்து நாட்டுக்குள் பிரவேசிக்க இருக்கின்றது என்று பரவலாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இதனை மூத்த சுகாதார அதிகாரிகளும் வைத்தியர்களும் உறுதிப்படுத்திக் கொண்டு வருகின்றார்கள்.அப்படி அது உள்ளே நுழைந்து விட்டால் அதற்கு மாற்று வழி கண்டறிய வேண்டி இருக்கின்றது. ஆனால் அரசு வங்குரோத்து நிலையில் இருக்கின்றது.அதனை பீ.பி.யின் வார்த்தைகள் உலகிற்கே அம்பலப்படுத்தி இருக்கின்றது.

பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம் ராஜபக்ஸாக்கள் ஹம்பாந்தோட்டை மற்றும் கொழும்பிலும் மேற்கொண்ட பாரிய அபிவிருத்தி திட்டங்களாகும்.இந்த திட்டங்கள் நிறைவு பெற்றவுடன் நாடு டுபாய், கட்டார் மற்றும் சிங்கப்பூராக மாறிவிடும்.மக்கள் செல்வத்தில் கொழிப்பார்கள் என்றுதான் நமக்கு கதைகள் சொல்லப்பட்டிருந்தன. மேலும் இளைஞர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு.கொழுத்த சம்பளம் என்றெல்லாம் இந்த ஆசை வார்த்தைகளை நமது தலைவர்கள் நாட்டு மக்களுக்கு சொல்லிக் கொண்டிருந்தனர். இப்போது கொவிட் எல்லாம் கெடுத்துப் போட்டது என்ற தோரணையில் கதைகள் சொல்லப்பட்டு வருகின்றது.இது முற்றிலும் பிழையான ஒரு தகவல் என்பது எமது வலுவான வாதம். இதற்கான நியாயங்களை நாம் இங்கு பேச வரவில்லை. கடந்த கட்டுரைகளில் அது பற்றி நிறையவே பேசி இருக்கின்றோம்.

பொருளாதார அல்லது டொலர் நெருக்கடியால் நாட்டில் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு.எரிபொருளை கொள்வனவு செய்ய பணத் தட்டுப்பாடு.சீனாவை நம்பி அனைத்து நாடுகளையும் தற்போது அரசு எதிரியாக வைத்திருக்கின்றது.கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் போல இப்போது இந்திய மற்றும் மேற்கு நாடுகளின் கால்களில் நமது தலைவர்கள் போய் மன்றாடுகின்ற அவலம். தற்போது நமது நிதி அமைச்சர் பசில் இந்தியாவின் கால்களில் விழுந்து மன்றாடுகின்றார்.இது சீனாவுக்கு வலியைக் கொடுக்கக் கூடும். எனவே அது இலங்கை அரசாங்கத்தை ஒரு சந்தர்ப்பவாதியாக பார்க்க இடமிருக்கின்றது. இன்னும் மலக் கழிவுகளுடன் சீன கப்பல் நாட்டை சுற்றி வலம் வந்து கொண்டிருக்கின்றது. இதனால் இன்று சீனாவை நாம் பகைத்துக் கொண்டிருக்கின்றோம் என்று இராஜாங்க அமைச்சர் சசிந்திர ராஜபக்ஸ கவலை தெரிவித்திருக்கின்றார்.

இந்தப் பின்னணியில் முழு நாடுமே சமயல் எரிவாயு ஆபத்தை எதிர்நோக்கி இருக்கின்றது.இதனைத் தயாரித்த லாப், லிட்ரோ நிறுவனம் தாம் கலவையில் ஜூலை மாதமளவில் மாற்றங்கள் செய்ததை ஏற்றுக் கொண்டிருக்கின்றது. இப்போது அவைதான் சந்தைக்கு வந்திருக்கின்றது.இது பற்றி ஜனாதிபதி அமைத்திருக்கின்ற குழுவிடம் ஊடகவியலாளர்கள் கேள்விகளை எழுப்பிய போது அவர்கள் அதற்குப் பதில் கொடுக்க முடியாமல் திண்டாடியதை நாம் பார்க்க முடிந்தது. இது விடயத்தில் சொல்லப்படுகின்ற மாற்றுமொரு கதை. இதனை வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு விற்பதற்காக அரங்கேறும் ஒரு நாடகம் என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த வருடங்களில் நாடு பூராவில் ஒரு வருடத்துக்கு நூறு இருநூறு வரையிலான வெடிப்பு சம்பவங்கள் நடந்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இன்று ஒரு நாளைக்கு பத்து இருபது சம்பவங்கள் என்று இது நடந்து கொண்டிருக்கின்றது. ஜனாதிபதி நியமித்திருக்கின்ற குழு வீடு வீடாக போய் வெடிப்புக்கள் பற்றி தற்போது கேட்டறிந்து வருகின்றது.

வைத்தியசாலைகளில் மருந்துகளின் தட்டுப்பாடுகளுக்கும் இடமிருக்கின்றது என்று எச்சரிக்கப்பட்டிருக்கின்றது. டொலர் பற்றாக்குறையால் எல்லாத் துறைகளும் தற்போது ஸ்தம்பித்துப் போய் இருக்கின்றது.சின்னச் சின்ன கைத்தொழில்களை செய்து கொண்டிருந்தவர்கள் இன்று அவற்றைக் கைவிட்டு கூலித் தொழில்களில் பரவலாக ஈடுபட்டு வருகின்றனர். அல்லது வெளிநாடுகளுக்கு போகும் முயற்சியில் இறங்கி இருக்கின்றார்கள்.சௌபாக்கியமான வாழ்வைக் கொடுப்போம் என்று பதவிக்கு வந்தவர்கள் இன்று மக்களுக்கு வாழ வழியில்லாமல் பண்ணி விட்டிருக்கின்றனர்.இதன் பின்னர் யார் பதவிக்கு வந்தாலும் மீட்சிக்கு வழி கிடையாது.மக்கள் ஒட்டாண்டியாக தெருக்களில் இன்னும் சில மாதங்களில் அலைகின்ற காட்சிகள்தான் கண்ணுக்குத் தெரிகின்றது. இதனால் பிச்சை போடுவதற்கு கூட அப்போது ஆளில்லா நிலை வரும்.

இந்தப் பின்னணியில் இனப் பிரச்சினைக்கு தீர்வு என்றெல்லாம் எவராவது பேச முடியுமா? புதிய அரசியல் யாப்பின் கதையும் இதே விதமாகத் தன் அமையப் போகின்றது.எமக்கு மெதமுலானையில் இருந்து வருகின்ற ஒரு அந்தரங்கத் தகவலின்படி ஜனாதிபதியை அவர் சம்மதத்துடன் பேசி ஆளை அரசியலில் இருந்து ஓரம் கட்டி விட்டு மீண்டும் மஹிந்த ராஜபக்ஸவை அதிகாரத்துக்கு கொண்டு வந்து நடந்த தவறுகளுக்கு மக்களிடம் மன்னிப்புக் கேட்டு மீண்டும் ஒரு நம்பிக்கையை ராஜபக்ஸக்கள் மீது உண்டு பண்ணி அரசியலை முன்னெடுக்கின்ற திட்டமும் இருப்பதாக தெரிகின்றது.

நம்பியவர்கள் தம்பியை பிழையான வழியில் கொண்டு போய் விட்டார்கள். இதன் பின்னர் அப்படியான விடயங்கள் இடம் பெற நாம் இடமளிக்கமாட்டோம் என்று கதைகள் சொல்லப்பட அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன. ஆனால் ஜனாதிபதி ஜீ.ஆர். கடும் பிடிவாதக் காரராக இருப்பதால் இந்த முயற்சியும் வெற்றியளிக்க வாய்ப்புக் கிடையாது என்பது எமது கருத்து.முட்டிக் குனிவதுதான் அவரது இராஜதந்திரம் என்பது போலதான் அவர் செயல்பட்டுக் கொண்டு வருகின்றார்.இதனால் பிரதமர் மிகுந்த விரக்தியில் இருப்பதாகத் தெரிகின்றது.பிரதமர் பதவியை தவிர்ந்த அனைத்துப் பதவிகளையும் அவர் தூக்கி வீசப் போவதாக நெருங்கியவர்களிடத்தில் கதையாம். நாம் இங்கு சுட்டிக் காட்டிய விவகாரத்தில் ராஜபக்ஸாக்களின் முழுக் கவனமும் இப்போது இருப்பதாக தெரிகின்றது. ஆனால் பூனைக்கு மணி சூடுவது யார்? எப்படி என்ற விடயத்தில் தான் பெரும் சிக்கல்.

நாட்டை ஒரு வழிக்குக் கொண்டு வருவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் கம்மியாக இருந்தாலும், மேற்கு மற்றும் இந்தியாவின் துணையுடன் ஏதாவது பண்ணலாம் என்று பசில் போன்றவர்கள் கருதினாலும் இனவாதிகள் அதற்கு இடம் கொடுப்பார்களா என்று தெரியவில்லை.இந்த அரசாங்கத்தை பதவிக்குக் கொண்டு வந்த இனவாதிகள் தற்போது பலயீனப்பட்டிருந்தாலும் அவர்களது இனவாதக் கருத்துக்கள் எடுபடாமல் இருந்தாலும், இப்படியான ஒரு நகர்வை முன்னெடுக்கின்ற போது நிச்சயம் அவர்கள் ஏதோ ஒரு வழியில் வம்பு பண்ணத்தான் செய்வார்கள்.

எனது வார்த்தைகளை இதன் பின்னர் சற்று நிருபங்களாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அதிகாரிகளுக்கு கட்டளையிட்ட ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தல்களே தற்போது செல்லாக்காசாக மாறி இருக்கின்றது.இதுவும் நமது நாட்டு வரலாற்றில் என்றும் கேள்விப்படாத, பார்க்காத விவகாரம்.வர்த்தமானிகள் என்பது ஒரு நகைச்சுவை போல் இன்று நாட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.நிலைமை இப்படி மிக மோசமாக இருந்தாலும் இந்த அரசுக்கு நல்ல வாய்ப்பாக இருப்பது மிகவும் பலயீனப்பட்டிருக்கின்ற எதிரணியாகும். அவர்களினால் இந்த அரசுக்கு எந்த அச்சுறுத்தல்களும் கிடையாது என்பதால் அவர்கள் என்னதான் செய்தாலும் மக்கள் அந்த அட்டகாசங்களுக்கு அடிமையாக நின்று வாழ வேண்டிய ஒரு நிலை தான் நாட்டில் இருந்து வருகின்றது.

ராஜபக்ஸாக்களின் அரசியல் இருப்பை ஜனாதிபதி ஜீ.ஆர். செயல்பாடுகள் கேள்விக்குறியாக்கி இருக்கின்றது என்று மெதமுலான வட்டாரங்களில் கவலையாக இருக்கின்றது. ஏதாவது புரட்சிகரமான மாற்றங்களை செய்து நிலமையை சமாளிக்க பெரும்பாலான ராஜபக்ஸாக்களும் அவர்களுக்கு நெருக்கமானவர்களும் ஆர்வமாக இருந்தாலும் அது இலகுவான காரியமாக இருக்க மாட்டாது என நாம் கருதுன்றோம்.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நிதி அமைச்சர் பசில் இதுவரை அந்தப் பயணத்தில் சாதித்ததாக தெரியவில்லை.எரிபொருள் கொள்வனவுக்கு அவர் இந்தியாவிடம் இருந்து நீண்ட காலக் கடனை எதிர்பார்க்கின்றார். ஆனால் தொடக்க பேச்சுக்களில் அதற்கான இணக்கப்பாடுகள் எட்டவில்லை. ஒரு வேளை பிரதமர் மோடியுடனான சந்திப்பில் இது சாத்தியமானாலும் ஆகலாம். இந்தியாவுக்குப் போன பசில் அங்கு ஒரு சமயல் செய்து பார்த்திருக்கின்றார்.உயிர் வாயுவில் சமயல் செய்த அந்த முயற்சிகளை அவர் இலங்கையில் அறிமுகம் செய்ய முயன்றாலும் ஆச்சர்யப்படுவற்கில்லை.எனவே சிலிண்டர் வெப்புக்கு பின்னால் ஒரு வியாபாரம் இருக்கின்றதோ தெரியாது.

தற்போது இந்தியாவுக்கு போய் இருக்கின்ற நிதி அமைச்சர் மீது தமிழ் தரப்புக்கள் இந்தமுறை ஏதும் அழுத்தங்கள் கொடுக்காமல் இருந்தது ஏனோ தெரியவில்லை.இந்தியா அவர்களைப் பெரிதாக மதிப்பதில்லை என்றதாலோ என்னவோ தெரியாது.

இந்தியா ஈழத் தமிழர் விவகாரங்களில் தற்போது தள்ளி நின்று வேடிக்கை பார்ப்பதால் தமிழ் தரப்புக்கள் மேற்கத்திய, குறிப்பாக அமெரிக்காவுடன் இந்தியாவையும் இணைத்து ஏதும் பண்ணலாம் என்று யோசிப்பது போல் தெரிகின்றது.ஆனால் தற்போது நாட்டில் இருக்கின்ற அரசியல், பொருளாதார சூழ்நிலைகள் எதுக்கும் இடம் கொடுக்கின்ற நிலையில் இல்லை என்றுதான் நாம் கருதுகின்றோம்.

மேற்கு நாடுகளுக்குப் போன தமிழ் அரசியல்வாதிகள் எதனைச் சாதித்திருக்கின்றார்கள் என்று இதுவரை தெரியவில்லை.இவ்வாறான விஜயங்களை மேற்கொள்ளும் போது கட்சி வட்டாரத்தில் கலந்து பேசிவிட்டு போவதுதான் சிறப்பாக இருக்கும்.ஆனால் இந்த விஜயம் அடுத்த தலைமைத்துவத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு இராஜதந்திர பயணம் என்ற கருத்தும் தமிழ் வட்டாரங்களில் தற்போது பேசப்பட்டு வருகின்றது.





## வாராந்த அரசியல்



### பீடாதிபதியின் தகைமை!

அண்மையில் கொழும்பு பல்கலைக் கழகத்துக்கு ஜனாதிபதி ஆனந்த முறுத்தெட்டுவே தேரரை பீடாதிபதியாக நியமனம் செய்தார்.இது பற்றி விமர்சனங்கள் வந்த போது அவர் எனக்கு வேண்டியவர்.எனது வெற்றிக்கு பங்களிப்புச் செய்தவர். அவரை பீடாதிபதியாக்கினால் என்ன என்றும் ஜனாதிபதி விமர்சிப்பவர்களை கேட்டிருந்தார். இந்த தேரரை ஒரு தொலைக்காட்சி பேட்டி கண்டது.இப்படி ஒரு உயர் பதவியை வகிக்க உங்கள் கல்வித் தகைமை என்ன என்று அங்கு கேள்வி எழுப்பப்பட்ட போது.அதுதானே எனக்குப் பெரிய கல்வித் தகைமைகள் கிடையாது.இந்தப் பதவிக்கு நியமனம் செய்த ஜனாதிபதியிடம்தான் நீங்கள் இது பற்றி கேள்வி கேட்க வேண்டும் என அவர் கூறி இருந்தார்.மக்களுக்கான எதிர் கட்சி என்ற பதாகையின் கீழ் இது பற்றி கருத்துக் கூறிய ஆனந்த வெனரோல் க.பொ.த.(சாதாரணம்) கூட சித்தியடையாத ஒருவர் என்று தேரர் கதையைச் சொன்னார்.

### சமையலறையில் சஹ்ரான்!



வெடிகுண்டு என்றால் இந்த நாட்டு மக்களுக்கு சஹ்ரானைத்தான் நினைவுக்கு வரும். இந்த மனித வேட்டைக்காரன் செய்த அக்கிரமம் இன்று நமது அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி வருவதுடன், அவன் ஒரு கைக்கூலி என்றுதான் புதிய தகவல்கள் தெரிவிக்கின்றன. யாருடைய தேவைக்காகவே அவனும் அவனது கையாட்களும் காரியம் பார்த்திருக்கின்றார்கள்.இதில் சமய சித்தாந்தங்களை விட அரசியல் நோக்கங்கள் தான் இருந்திருக்கின்றன என்று பரவலாக கதைகள் உலவருகின்றன. ஆனால் இன்று மக்கள் பணம் கொடுத்து தமது வீடுகளின் சமயல் அறைகளில் ஒவ்வொரு சஹ்ரான்களை வைத்திருப்பது போல் ஒரு நிலை நாடு பூராவிலும் இருந்து வருகின்றது.அவன் கூலிக்கு மார் அடித்திருக்கின்றான்.மக்களோ விரும்பியே வெடி குண்டுகளைத் தமது வீடுகளில் பணம் கொடுத்து வாங்கி நிம்மதியின்றி தவிக்கின்றார்கள்.என்ன அநியாயம் இந்த காட்சிகளை இந்த நாட்டில் மட்டுமே பார்க்க முடியும்.



### ஜீ.ஆர்-மைத்திரி லடாய்!

புதிய களனிப் பாலத்தை திறந்து வைத்து உரையாற்றிய ஜனாதிபதி ஜீ.ஆர்.தான் விரைவில் தராதரம் பாராது ஈஸ்டர் தாக்குதல் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இருப்பதாக தெரிவித்திருக்கின்றார். இது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிக்கு எதிராக தற்போதய ஜனாதிபதியின் அச்சுறுத்தலாகத்தான் பார்க்கப்படுகின்றது.முன்னாள் ஜனாதிபதி மைத்திரியும் மூன்றில் இரண்டு தனது கைகளில்தான் இருக்கின்றது என்று ஜீ.ஆருக்கு எச்சரிக்கை விடுத்துக் கொண்டிருக்கின்றார்.நாட்டில் சட்டம் என்று ஒன்று இருக்கும் போது ஜனாதிபதி நேரடியாக ஆளைப் பிடித்து உள்ளே போடுவேன் என்பதும் குற்றவாளிகள் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் அவன் தனக்கு வேண்டியவனாக இருந்தால் அவனை நான் வெளியே எடுப்பது மட்டுமல்ல, அதி உயர் பதவிகளும் கொடுப்பேன் என்று இதே ஜனாதிபதி செய்து காட்டி இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### ஒமிக்ரோனுக்கு பூட்டாம்!



தென்னாபிரிக்காவில் தொடங்கிய கொரோனாவின் புதிய வடிவம் ஒமிக்ரோன்.இது உலகில் இதுவரை இருபத்தி நான்கு நாடுகளுக்கு பரவி இருக்கின்றது.மிகப் பிந்திய தகவல்களின் படி இந்தியாவுக்கு கூட அது நுழைந்து விட்டது என்று தெரிய வருகின்றது.ஆனால் நமது உல்லாசப் பிரயாணத்துறை அமைச்சர் பிரசன்னாவும் விளையாட்டுத் துறை அமைச்சர் நாமலும் நாங்கள் இங்கு ஒமிக்ரோனை நுழைய விட மாட்டோம் என்று சூளுரைத்து வருகின்றார்கள்.வைத்திய வசதிகள் உச்சத்தில் இருக்கும் மேற்கத்திய நாடுகளே அச்சத்தில் உறைந்து போய் இருக்கின்ற இந்த ஒமிக்ரோன் விடயத்தில் நமது அமைச்சர்கள் கதவைப் பூட்டி விட்டது போல அதனை உள்ளே நுழைய விடமாட்டோம் என்பது எந்தளவுக்கு மடமைத்தனமானது என்று கேட்கத் தோன்றுகின்றது. வைத்தியர்களே அஞ்சுகின்றார்கள்.அமைச்சர்கள் அதற்கு பூட்டு போட்டு விட்டதாக மார்தட்டுகின்றார்கள்.



### வெடிப்பதுதான் கேஷ்!

சிலிண்டர்-கேஷ் என்றால் வெடிக்கத்தானே செய்யும்.அதனைப் பெரிதாக எடுத்துக் கொண்டு பேசுவதில் அர்த்தம் இல்லை என்று சமயலறை கேஷ் வெடிப்புக்களை நமது சபாநாயகர் மஹிந்த யாப்பா நியாயப்படுத்திய நிகழ்வொன்று அண்மையில் நாடாளுமன்றத்தில் நடந்தது.எதிரணியினர் தாறுமாறாக சமயலறை எரிவாயு நாடு பூராவிலும் வெடிப்பதை நாடாளுமன்றத்தில் பேசிக் கொண்டிருந்ததால் அதனைத் தாங்கிக் கொள்ள முடியாத நமது சபாநாயகர் சமயலறை எரிவாயு விபத்துக்கள் இயல்பானது.அது வெடிக்கத்தான் செய்யும் என்று கூறி ஆளும் தரப்புக்கு ஆதரவாக செயல்பட்டு அண்மையில் மூக்குடைபட்டிருக்கின்றார்.இதற்கு முன்னரும் அவர் இப்படி பல சந்தர்ப்பங்களில் நடந்திருக்கின்றார். சபாநாயகர் தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டிருப்பது கூட ஆளும் தரப்புக்கு இசைவாக உடலை வைத்துக் கொண்டுதான் என்று ஒரு முறை ஜே.வி.பி தலைவர் அனுர சபாநாயகர் செயல்பாடுகளை கிண்டலடித்திருந்தார்.

**நஜீப்**

செங்கேணி போன்ற பாத்திரங்களில் இனி நடிக்கமாட்டேன்...

26



ஞாயிறு தினக்குரல்
மஞ்சரி
ஞாயிறு, டிசம்பர் 05 , 2021



## ஓமென்னும் பேராசை உள்ளாடும் ஒரு கூத்தன்

மு.பொ

ஓமென்னும் பேராசைப்
பேர் ஞான அடைகாப்பில்
பேரண்டம் இன்னுயிர்த்துத்
தன்னிருப்பில் பெருமையுறும்

பேரண்டக் கோளமதோ
கூத்தன் கை மத்தளமாம்
உடுக்கடித்தே ஆடுமவன்
ஒவ்வொரு பேர் அடிபெயர்ப்பும்
அண்டத்தின் நரம்புகளை
தொட்டதிரும் பேர் மீட்டல்
பேரண்டக் கானம் இப்போ
பிரளயங்கள் இசைத்தாடும்!

பிரளயங்கள் இசை வார்ப்போ
யுகமாற்றத் திசை காட்டல்
அண்டங்கள் அனைத்தையுந் தன்
சுண்டுவிரல் மீதேற்றி
சுழற்றுகையில் இங்கனைத்தும்
தரித்தனபோல் தோற்றி நிற்கும்
தரியாத பேரசைவே
தரியாத ஓமிசையே!

போராட்டம் தொடர்கிறது!
அவன் மத்தளத்தில் புகுத்துகின்ற
நுட்பங்கள் அறிந்தவர்க்கே
ஆச்சரியங்கள் எத்தனையோ
இழையோடும் அவன் கூத்தில்!
தட்சணையே பிய்த்தெறிந்த
ருத்திரப் போர் நர்த்தனமா?
அல்ல அவன் சரி பாதிப்
பத்தினியை மகிழ்விக்க
ஒற்றைக்கால் தூக்கி நின்ற
இன்னளிக்கைப் பேர்நடமா?
எது வேண்டும்?
எத்தனையோ அற்புதங்கள்
இழையோடும் அவன் கூத்தில்!

ஆழ்ந்த உள்ளுணர்வின்
அகவிழிப்பின் வெளிப்பாடே
கற்றைச் சடை முடியில்
காலிக்கும் பிறை நிலவு!
உச்சந் தலை முடியில்
ஊற்றெடுத்துப் பிரவகிக்கும்
வெள்ளிச் சிரிப்போடு
வீழ்கின்ற கங்கையோ நம்
ஆதிப் பிதுரர்களின்
கர்மவினைச் சேகரிப்பின்
பாரத்தை நீக்கிவிட
பாதாளம் செல்பவளாம்!

பாதாளம், பரலோகம்
பாழ்வெளியோ நீள்விசும்போ
எல்லாத் திசைகளிலும்
காலெறிந்து நிற்குமவன்
தன் நேசத்துக்குரியவர் முன்
பாசக்கயிற்றுக்கும்
மார்க்கண்டனாகின்ற
காலனுக்கே காலனப்பா!

தொடரும்...

# பரதக் கலையின் மகத்துவத்தையும் தெய்வீகத் தொடர்பையும் சிதைவுறாமல் காக்க வேண்டும்

பாக்கியராஜா மோகனதாஸ்

**நாட்டிய நாடகமோ நடன நிகழ்வோ எதுவாகினும் அந்நிகழ்வானது ஒரு கூட்டு முயற்சிச் செயற்பாடாகும். கூட்டு முயற்சி வெற்றியடைய குழுவில் பங்குபற்றும் அனைத்துத் தரப்பினரும் தத்தம் பணியை ஒன்றித்து கூட்டிணைந்து செயற்படுதல் அவசியமாகும் என நாட்டிய கலா கேத்திரா இயக்குனரும் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலையின் முன்னாள் நடனத்துறைத் தலைவரும் வாழ்நாள் சாதனையாளருமான கலாபூஷணம் கலாநிதி கிருஷாந்தி இரவீந்திரா, ஞாயிறு தினக்குரலுக்குஅளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.**

**கேள்வி : பரதக் கலை மீதான ஆர்வ ஈடுபாட்டினையும் குருவாக அமைந்தவரையும் கூற முடியுமா ?**

பதில் : குழந்தைப் பருவத்திலேயே பரதக் கலை ஆர்வம் இயல்பாக வெளிப்பட்டதனை பெற்றோர்கள் கூறிப் பெருமைப்படுவதனையும், திருமண மற்றும் நாதஸ்வர தவில் கச்சேரிகள் நடைபெறும் வேளைகளில் எனை மறந்து இயல்பாகவே நடனம் புரிவதாக உறவினர்கள் சொல்லவும் கேட்டிருக்கிறேன். இத்தகைய அதீத நடன ஆர்வ வெளிப்பாட்டை உணர்ந்த தந்தையார் சேனாதிராஜா, எனக்கு ஆரம்ப குருவாக நடனம் பயிற்றுவிக்க ஆரம்பித்தார்.

தந்தையார் இராஜா சேனாதிராஜா, கணக்கியல் துறை சார்ந்தவராக இருந்தாலும் ஆடற்கலை நுட்பத் திறனில் நாட்டம் மிகுந்தவர். நல்லை ஆதீன ஸ்தாபகர் முதற் குருமணி தம்பிரான் சுவாமிகள் என்ற மணிஐயரிடம் நடனம் பயின்றவர். இவ்வாறு ஐந்து வயதினிலேயே தந்தையிடம் ஆரம்பித்த ஆடற்கலைப் பயில்வு, தொடர்ந்து வந்த வளர்ச்சிக்கும் ஈடுபாட்டிற்கும் வித்திட்டது.

பரதக்கலையை முறையாகப் பயிற்றுவிக்க பிரசித்தி பெற்ற கொக்குவில் கலாபவனம் நாட்டியக் குரு கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையாவிடம் நடனம் பயில ஏற்பாடு செய்தார். அன்றிலிருந்து ஏரம்பு சுப்பையாவின் மாணவியாக இலங்கையின் பல பாகங்களிலும் கலாபவனம் ஆற்றுகை செய்த நாட்டிய நிகழ்வுகளில் பங்குபற்றி குருவின் நாட்டிய வழிகாட்டல் பயிற்றுவிப்புத் திறன், கண்டிப்பு, தொடர்பயிற்சி மற்றும் ஒரு தந்தை போன்ற அக்கறையுடனான ஆதரவு என்பவற்றினால் புடம்போடப்பெற்று 1970 களில் எனது பரதநாட்டிய அரங்கேற்றம் மிக விமரிசையாக இடம்பெற்றது. நாட்டியத்தில் மேலும் தகைமைகள் பெற்று என்னை பரதநாட்டிய வல்லுனராக்க வேண்டும் என்ற பெற்றோரின் தாகமும், பரதக்கலையின்பால் கொண்டிருந்த நாட்டமும் தமிழ்நாட்டின் அன்றைய பிரபல நாட்டிய ஆசான்களிடம் பயின்று மேலும் நாட்டிய நுணுக்கங்களை கற்றிட தூண்டியது. எனவே, 1970 – 1972 காலப்பகுதியில் இந்தியா சென்று பத்மஸ்ரீ அடையாறு லக்ஷ்மணனுடைய நாட்டிய நிறுவனமான 'பரதசூடாமணி'யில் பரத நாட்டியம், நட்டுவாங்கம் என்பவற்றில் டிப்ளோமா பயில்வையும், குரு இராமநாதனிடம் மோகினியாட்டத்தையும் 'பரத கலாஞ்சலி' பத்மபூஷண் தனஞ்சயன் சாந்தா தம்பதியர்களிடம் 1975ல் நாட்டியத்தில் சிறப்புப் பயில்வுகளையும் பூர்த்தி செய்தேன்.

இந்தியாவில் பயின்ற காலப்பகுதியில் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் தமிழ்நாட்டின் வேறு பல இடங்களில் 'பரதசூடாமணி' மற்றும் 'பரத கலாஞ்சலி' நடாத்திய பரதநாட்டிய நிகழ்வுகளில் ஆற்றுகைகள் செய்து அனுபவம் பெற்ற நர்த்தகியாக இலங்கை திரும்பினேன். எனக்குக் குருமாராக அமைந்த அத்தனை நாட்டிய ஆசான்களின் நாட்டியப் பயிற்றுவிப்பு வழிகாட்டலும், ஆசீர்வாதமுமே என்னை இன்றைய நிலைக்கு உயர்த்தியது. அத்தகைய சிறந்த குருமாரிடம் பயின்றமை இறைவன் எனக்களித்த பேறெனலாம்.

**கேள்வி : யாழ். இராமநாதன் நுண்கலைக் கழக நடனத்துறை வளர்ச்சியின் முக்கிய காலகட்டங்களில் பணியாற்றியிருக்கிறீர்கள். அவ்வகையில் பங்களிப்பு தொடர்பாக கூற விழைவது ?**

பதில் : சேர்.பொன். இராமநாதனின் மருகனாகிய கலாநிதி சு.நடேசபிள்ளை, தன் மாமனாரின் நினைவாக இராமநாதன் கல்லூரியின் ஒரு பகுதியில் தமிழர் செந்நெறிக்கலைகளான கர்நாடக சங்கீதம், மிருதங்கம், நடனம் மற்றும் இதர வாத்திய இசைகளை பயிற்றுவித்து வளர்க்கும் நோக்கில் 1960ம் ஆண்டு ஐப்பசி விஜயதசமியில் ஆரம்பித்த நிறுவனமே இராமநாதன் இசைக்கல்லூரியாகும். இந் நிறுவனத்தில் பணியாற்ற தமிழ்நாட்டின் பிரபல இசைமேதைகளை வரவழைத்து இக்கல்லூரி இயங்க வழிவகுத்தார். இக்கல்லூரியில் இசையும் இசை சார்ந்த பாடவிதானங்களுமே ஆரம்பத்தில் கற்பிக்கப்பட்டது. இராமநாதன் இசைக்கல்லூரியில் நடனக்கலையையும் கற்பிக்க வேண்டும் என்ற வேண்டுகோளின் நிமித்தம் பரதநாட்டியம் பயிற்றுவிப்பதற்கான தகுந்த ஒருவரின் தேவைப்பாடு ஏற்பட்டது. அக்காலப் பகுதியில்தான் இந்தியாவில் பரதசூடாமணியில் பயின்று நாடு திரும்பியிருந்தேன். எனது தகைமையை நன்கறிந்த மாணிப்பாய் ஐயாக்கண்ணு தேசிகர், நவாலியூர், கலையரசு சொர்ணலிங்கம் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர் ஏ.அம்பிகைபாகன் போன்றோர் இராமநாதன் இசைக்கல்லூரியில் நடனக்கலையை பயிற்றுவிப்பதற்காகத் என்னைத் தேர்ந்தெடுத்தார்கள். 1973ம் ஆண்டு பங்குனி 1ம் திகதி இராமநாதன் இசைக்கல்லூரியில் நடன போதனாசிரியராக நியமிக்கப்பட்டு பரதநாட்டியப் பயில்வை முதன் முதலாக ஆரம்பித்து வைத்தேன். 1974 சித்திரை காலப்பகுதியில் அரசாங்கத்தினர் கலைகளை வளர்க்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் கலைப்பணியாற்றி வந்த பிரசித்தமான இந்நிறுவனத்தைப் பொறுப்பேற்று யாழ் மாவட்ட கல்வித் திணைக்களத்திடம் கையளித்தனர். அப்போது நடனக் கற்கை நெறிக்கு மேலும் ஒரு பிரசித்தமான நடனக்கலைஞரான கலாஷேத்திரா பட்டதாரி செல்வி சாந்தா பொன்னுத்துரையினைத் தேர்வு செய்து நடாத்திடும் பொறுப்பாக நியமித்தனர். அன்றிலிருந்து செல்வி. சாந்தாவும் நானும் பரதக்கலையை பயிற்றுவிப்பதில் இணைந்து செயற்பட்டோம்.

இராமநாதன் அரசினர் நுண்கலைக்கல்லூரி என்ற பெயர் மாற்றத்துடன் இராமநாதன் கல்லூரி முதல்வர் திருமதி அருணாசலத்தின் நிர்வாகித்தில் இயங்கத் தொடங்கியது. 1975.12.1, இல் இந்நிறுவனம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ் வளாகத்தினால் உள்வாங்கப்பட்டு இராமநாதன் நுண்கலைக்கழகம் என்ற பெயரில் இயங்கத் தொடங்கியது. ஏற்கனவே இந்நிறுவனத்தில் கடமையாற்றியவர்களுடன் நானும் பல்கலைக்கழகத்துள் உள்வாங்கப்பட்டேன். ஆரம்ப காலங்களில் நான்கு வருட டிப்ளோமா கற்கைநெறி நடைமுறைப்படுத்தப்பட்டது. 1978 இல் நடைபெற்ற இறுதிப்பரீட்சையில் நடனப் பகுதியில் முதலாம் பிரிவில் சித்தியடைந்து, நாட்டியக் கலைமணி பட்டம் பெற்ற செல்வி பத்மரஞ்சினியும் திருமதி உமாசங்கரும் நடனத்துறைக்கு நிரந்தர போதனாசிரியராக நியமிக்கப்பட்டனர்.

1.01.1979, இல் இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாகம் தரமுயர்த்தப்பட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் தன்னாதிக்கமுள்ள பல்கலைக்கழகமாக இயங்க ஆரம்பித்தது. அக்காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலால் 1990 இல் செல்வி சாந்தா பொன்னுத்துரையும் 1993 இல் திருமதி பத்மரஞ்சினி உமாசங்கரும் விலகி வெளிநாடு செல்ல நடனத்துறைக்கு ஒரேயொரு நிரந்தர விரிவுரையாளராக நான் கடமையாற்ற வேண்டிய நிலையேற்பட்டது. இக்காலப்பகுதியில் தான் இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் பட்டதாரிக் கற்கை நெறிகளை ஆரம்பிக்கும் வழிமுறைகளை பல்கலைக்கழக நிர்வாகத்தினர் முன்னெடுத்தனர். இதன் தொடர்ச்சியில் 1996, இல் முதற்தொகுதி பட்டதாரிகள் வெளிவந்தனர். 1999, இல் இராமநாதன் கல்லூரி தற்போதுள்ள புதிய கட்டடத்தில் இயங்க ஆரம்பித்தது. யாழ்ப்பாணத்து நாட்டிய மரபு எனும் தலைப்பினில் ஆய்வினை மேற்கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடனத்தில் முதுதத்துவமாணி பட்டம் பெற்ற முதல் நடனக் கலைஞர் என்ற சிரேஷ்ட விரிவுரையாளராகப் பதவியுயர்வு பெற்று, பின் நடனத்துறைத் தலைவராக பதவியேற்று 2006 ஆம் ஆண்டு வரை பணியாற்றினேன்.

முன்னோடி நிறுவனமான இராமநாதன் இசைக் கல்லூரியில் பரதநாட்டியப் பயில்வை முதன் முதலாக ஆரம்பித்து வைத்தமை, குரு – சிஷ்ய பயில்வு முறைமையில் பயிலப்பட்டு வந்த பரதநாட்டியம் பல்கலைக்கழக உயர்கல்வி பட்டக் கற்கைநெறியாக வளர்ச்சியடைந்த மிக முக்கிய காலப்பகுதியில் பல்கலைக்கழக நிர்வாகத்தினருடன் இணைந்து முக்கிய பங்களித்தமை, சோதனைகள், சவால்கள் இடப்பெயர்வுகள் என கலைப்பயில்வுக்கு மிக வசதிகள் குறைந்த பாதகமான காலப்பகுதியில் நடனத்துறையை வழிநடாத்துவதற்கு முக்கிய பங்காற்றியமை, இக்காலப் பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழா மற்றும் முக்கிய நிகழ்வுகளுக்காக நடனத்துறையினூடாக நாட்டிய நாடக நிகழ்வுகள் தயாரித்தளித்தமை, பல நடன உருப்படிகளுக்கும் நாட்டிய நாடகங்களுக்கும் நாட்டிய அமைப்பு செய்தமை, நடனத்துறை மாணவர்கள் பட்டப்பின் கற்கை நெறிகளிலும் ஆய்வுகளிலும் ஈடுபட முன் உதாரணமாக நானே நடனத்தில் முதுதத்துவமாணி பெற்றமை, ஏறக்குறைய 9 தொகுதி நடனத்துறை மாணவர்கள் என்னுடைய காலப்பகுதியில் கலைமாணிப்பட்டம் பெற்றமை போன்றவற்றை எனது முக்கிய பங்களிப்பாக குறிப்பிட முடியும்.

**கேள்வி : ஆரம்ப காலங்களில் பரதக்குருவும் இசையாசிரியர்களும் ஆண்களாகவே திகழ்ந்து கலைஞர்களை உருவாக்கினார்கள். அவ்வகையில் இன்று அவ்வாறான நிலை தென்படுவதாக தெரியவில்லையே ?**

பதில் : 1950 களின் 70களும் இடைப்பட்ட காலப்பகுதியில் சமூக பண்பாட்டு அரசியல் நிலைப்பாடுகள், நடனக்கலை பற்றிய சமூகப்பார்வை, பொதுவெளியில் பெண்கள் எதிர்நோக்கிய மட்டுப்பாடுகள் என்பன இன்றைய காலத்துடன் ஒப்பிடும்போது மிக வேறுபட்டது. அன்றைய காலப்பகுதியில் பரதக்கலை குரு சிஷ்ய பயில்வு முறைமையிலேயே கற்பிக்கப்பட்டது. பெண்களின் ஆடற்கலை ஈடுபாடு சமூகத்தில் பெரிதும் வரவேற்கப்படவில்லை. சுமார் 450 வருட தொடர் காலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதி. சுதேச கலை பண்பாட்டு விழுமியங்களை மீட்டெடுக்க சமூகப் பெரியோர்கள் முயற்சியெடுத்த காலம். பரதக்கலையின் மேன்மையை உணர்ந்து அதனைப் பயின்றாட வேண்டும் என்ற அளவற்ற ஆர்வம் கொண்ட பெண்களும் அவர்தம் குடும்பத்தினருமே பரதக்கலையில் ஈடுபாடு கொண்டனர். அதனாற் போலும் ஆண்கள் அம்முயற்சிக்கு வலுச்சேர்த்தல் சாதகமாய் அமைந்தது. அந்த வகையில் யாழ். கலாஷேத்திரம் நடன ஆசிரியமணி கீதாஞ்சலி வி.கே.நல்லையா, கொக்குவில் கலாபவனம் கலைச் செல்வன் ஏரம்பு சுப்பையா, சிலம்பம் நர்த்தனாலய நாட்டிய கலாரத்தினம் வி. இராஜரத்தினம், தொம்புக்குட்டி ஆசிரியர், கொழும்பிலும் கிழக்கிலங்கையிலும் சேவையாற்றிய ம.கைலாசபிள்ளை மற்றும் சாகித்திய கர்த்தா வீரமணி ஐயர் போன்ற ஆண் கலைஞர்கள் நாட்டியக்கலைப்பணியே தமது இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்து காட்டினார்கள். எனினும் அக்காலப்பகுதியில் பெண்களும் கலைப்பணியை சிறப்புற ஆற்றியிருக்கிறார்கள். திருமதி ரஞ்சனா தங்கராஜா, திருமதி நீலா சத்தியலிங்கம், திருமதி திரிபுரசுந்தரி யோகானந்தம், திருமதி ஞானமணி செல்லையா, திருமதி லீலாம்பிகை செல்வராஜா போன்றோரைக் குறிப்பிடலாம்.

இசைக்கலைமன்றம், சைவ மங்கையர் கழகம், கொழும்பு மாதர் சங்க கலாலயா நிறுவனம், கொழும்பு விவேகானந்த சபை போன்ற நிறுவனங்களினூடாக கொழும்பில் பெண்களின் பங்களிப்பு சிறப்பாகக் காணப்பட்டது. இவற்றுள் குறிப்பிடத்தக்க நாட்டிய வல்லுனர்களான திருமதி விஜயலட்சுமி சண்முகம் பிள்ளை, திருமதி கமலா ஜோன்பிள்ளை, பாலசுந்தரி கனகசபை, திலகவதி கனகசபை, சாந்தா ரமணி மகேந்திரா, கௌரி முத்துக்குமாரசுவாமி, லிங்கா சச்சிதானந்தன், ஆனந்தவல்லி சச்சிதானந்தன், ஜெயலஷ்மி கந்தையா, பத்மினி தஹநாயக்கா, திருமதி கார்த்திகா கணேசர் போன்றோரைக் குறிப்பிடலாம். இன்றைய அகப்புறச்சூழல் பெரிதும் வேறுபட்டது.

பரதக்கலை நிறுவனமயப்படுத்தப்பட்ட பல்கலைக்கழக பட்டக்கற்கை நெறியாகி கலாநிதிப் பட்டம் வரை கற்பிக்கப்படும் ஒரு துறையாக மாற்றமடைந்துள்ளது. முன்பு போலன்றி இன்றைய நடனத்துறை பட்டதாரிகள் நடனத்தின்பால் உள்ள ஈர்ப்பினால் மட்டுமல்லாது பல வாய்ப்புகளுடன் கூடிய உயர்கல்வி அங்கீகாரம் பெற்ற துறை என்ற நோக்கிலும் பயிலும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றவர்கள். அதாவது குருகுலக் கலைப்பயில்வு நிறுவனமயப்பட்ட பல்கலைக்கழக கற்கையாக மாற்றமடைந்தமை முன்னைய தேவைப்பாட்டை மாற்றமடைய வைத்துள்ளது. எனினும் இன்றும் பல ஆண் பரதக்கலைஞர்கள் பரதக்கலைப் பயில்வினை அடுத்த சந்ததிக்கு கையளிக்கும் கைங்கரியத்தை சிறப்பாக ஆற்றி வருகிறார்கள்.

**கேள்வி : அனைத்தும் அறிந்த பரதக் கலை ஆசான்கள் இன்றுள்ள இளஞ்சந்ததிகளுக்கு கிடைக்கிறார்களா ?**

பதில் : அனைத்தும் அறிந்தவர் இறைவனைத் தவிர எவருமிலர். பரதக்கலையில் பாண்டித்தியம் பெற்ற குருமார்களை தேடி நாடிச் சென்று பக்குவத்துடன் பயின்றோம். இன்றும் அத்தகைய பாண்டித்தியம் பெற்றவர்கள் பரந்திருக்கிறார்கள். நாட்டமும் ஆர்வமும் மிக்க இளஞ் சந்ததியினர் நாடித் தம் பரதக் கலை ஆளுமையை விருத்தி செய்து கொள்ளலாம். இன்றைய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி நிலையில் தேடல் மிக இலகுவானது. அதற்கான ஆர்வமும் நேரமும் ஈடுபாடும் போதாமையே பலரது குறைபாடாகும்.

**கேள்வி : பரதக் கலையினை தாங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள் ?**

பதில் : பாவம், இரசம், ஆனந்தம் இணைந்த பக்தி, இயல், இசை, நாடகம் என முத்தமிழும் இணைந்த கலையே பரதம். குரலிசை, முழவிசை, நரம்பிசை, வாத்திய இசை, தாள ஓசை, ஜதியோசை என அனைத்தும் ஒன்றித்து சங்கமிக்கும் அற்புதக்கலை பரதநாட்டியமே. சிருங்காரம், பீபட்சம், பயானகம், ஆச்சர்யம், ஹாஸ்யம், வீரம் கோபம், சாந்தம், கருணா என நவரச பாவங்கள் ததும்ப நிகழ்வது பரதக்கலையே.

பன்முக பரிமாணம் கொண்ட பரதக் கலை சார்ந்த அறிவுத்தேடல் வேகங்கொள்ள அநுபவ பாடமும் இணைந்து கொள்ள அறிவாற்றல் ஆழம் கொள்ளும். ஆழம் கொண்ட அறிவாற்றல் ஆன்மீகத்துடன் இணைந்து அர்ப்பணிப்புடன் கூடிய ஆடல் ஆற்றுகையாய் அற்புதமாய் வெளிப்படுத்துதல் அளவற்ற ஆனந்தத்தை அள்ளித்தரும்.

தெய்வீக பரதக்கலையை பார்த்தல், இரசித்தல், இலயித்தல், பயில்தல், பயின்றாடுதல், பயிற்றுவித்தல், பங்களிப்பு செய்தல், பாண்டித்தியம் பெறல் எனும் பேறுகள் எல்லாம் நாம் செய்த முன் நல்வினைப்பயன் எனில் அது மிகையாகாது.

**கேள்வி : பெண்கள் திருமணமாகி ஆற்றுகை செய்வதை அங்கீகரிப்பவர்கள் குறைவு என்று கூறப்படுகிறதே ?**

பதில் : நான் பரதம் பயிலும் காலப்பகுதியில் பெண்கள் நடனம் பயில்வதனை பெரிதும் வரவேற்கின்ற ஊக்கப்படுத்துகின்ற சமூகசூழல் காணப்படவில்லை. ஆனால் இன்றைய சூழலோ உயர்கல்வி கற்கை நெறியாக பரதநாட்டியப் பயில்வு பயிற்றுவிக்கப்படும் காலப்பகுதி. பெண்கள் ஆற்றுகை செய்வதனை பெருமையாக கூறும் சமூக மாற்றம் ஏற்பட்டுள்ளது. எனினும் பரதக்கலையின் பெருமையறியாது மேலோட்டமாகப் பார்த்து அதனை ஒரு கவர்ச்சிமிகு உடற்பயற்சி நடனம் என்று தவறாக எடை போடுபவர்கள் இன்றும் உள்ளார்கள். எனினும் அத்தகையோர் முன்னைய காலங்கள் போல் அல்லாது மிகமிகக் குறைவாகவே உள்ளனர்.

என்னைப் பொறுத்தவரை எனது தந்தை, கணவர், மகன், மருமகன் என அனைத்துக் குடும்ப உறுப்பினர்களும் இன்றும் ஆற்றுகை செய்வதனை ஊக்கப்படுத்திய வண்ணமே உள்ளார்கள். பரதநாட்டியத்தில் இறையியல் எனும் ஆய்வினை மேற்கொண்டு பரதநாட்டியத்தில் கலாநிதிப் பட்டம் பெற எனக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கி ஊக்கப்படுத்தியது எனது கணவரே. புலம்பெயர்ந்து வாழும் எம் நடனக் கலைஞர்களுக்கு பெரும்பாலும் அவர்களது கணவன்மாரே உறுதுணையாய் இருப்பதனை அவதானித்துள்ளேன். தற்காலத்தில் பெண்கள் திருமணமாகி ஆற்றுகை செய்வதை அங்கீகரிக்காதவர்களே மிக மிகக் குறைவு என்பேன்.

**கேள்வி : நாட்டிய நாடகம் மற்றும் நடன நிகழ்ச்சியின் வெற்றியில் முக்கிய பங்கெடுப்பது ?**

பதில் : நாட்டிய நாடகமோ நடன நிகழ்வோ எதுவாகினும் அந்நிகழ்வானது ஒரு கூட்டுமுயற்சிச் செயற்பாடாகும். கூட்டு முயற்சி வெற்றியடைய குழுவில் பங்குபற்றும் அனைத்துத் தரப்பினரும் தத்தம் பணியை ஒன்றித்து கூட்டிணைந்து செயற்படுதல் அவசியம். நாட்டிய குருவானவரின் நட்டுவாங்க வழிகாட்டலில், நிகழ்வில் பங்குபற்றும் நடனக் கலைஞர்கள் தத்தம் பங்கினை பாங்குற வெளிப்படுத்த, கவி வரிகள் வெளிப்படுத்தும் கருத்தினையும் உணர்வுகளையும் பாடகர் இசை மூலம் மெருகேற்ற, மிருதங்க கலைஞர் முறைப்படி பொருத்தமாய் தாளக்கதிக்கமைய வாசிக்க மற்றும் குழிலுவக் கலைஞர்கள் சிறப்புற அணிசெய்ய, ஒளி ஒலி கலைஞர்களும் தத்தம் திறமை மூலம் சிறப்பிக்க நிகழும் நிகழ்ச்சி வெற்றியளிக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே நிகழ்வின் சிறப்பே எமது இலக்கு என அனைத்து பங்குபற்றுனரும் கண்ணும் கருத்துமாக செயற்படுகின்ற குழு எண்ணப்பாங்கே வெற்றிக்கு முக்கிய பங்கெடுக்கும் செயற்பாடாகும்.

**கேள்வி : பரதக் கலைஞர் என்ற வகையில் சமூகத்திற்கு கூற விழைவது ?**

பதில் : பரதநாட்டியம் தமிழ் மக்களின் கலைப் பொக்கிஷமாகவே கருதப்பட்டு வந்துள்ளது. அந்த வகையிலேயே தமிழர்களின் மரபுவழி செவ்வியல் ஆடற்கலையாக பரதநாட்டியம் பயிலப்பட்டு வருகிறது. தமிழர் தம் கலை பண்பாட்டுப் பெருமைகளை பறைசாற்றும் உயர் தெய்வீகக் கலையாக பரதக்கலை இன்று பாரெங்கும் போற்றப்படுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கலையின் மகத்துவத்தையும் தெய்வீகத் தொடர்பையும் சிதைவுறாமல் காக்க வேண்டியது சமூகப் பெரியார்களின் கடமை. பெருமைக்காக அரங்கேற்றங்கள் செய்யாது தரமான தகுதி வாய்ந்த நர்த்தகிகளின் பரத நடன அரங்கேற்றங்களை செய்வதற்கான பொறிமுறைகளை வகுத்து எழுந்து வருங்கால சந்ததியினரின் பரத நடன ஈடுபாட்டை மேம்படுத்த ஆக்கபூர்வ பங்களிப்பினை நல்க வேண்டும்.

**கேள்வி : பரதக்கலை பயில்வோருக்கு மற்றும் பயிலவுள்ளோருக்கு கூற விழைவது ?**

பதில் : பரதக்கலை தமிழர் கலை பண்பாட்டு விழுமியங்களின் பெருமையை பறைசாற்றும் தெய்வீகக்கலை. முன்னைய குருகுலக்கல்விப் பயில்வு முறைமையில் நாட்டிய குருவானவர் மிக உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து மதிக்கப்படுவார். நாட்டியத்தில் குரு வணக்கம் மிக உயர்வாகக் கருதப்படுகிறது. எனவே தகுந்த நற்குரு அமைதல் பரதக்கலை பயிலவுள்ளோருக்கு சிறப்பாகும். கலையைப் பொறுத்தவரை பயிற்றுவித்த குருமாரை கனம் பண்ணுவதும் ஆசீர்வாதம் கிடைக்கப்பெறுவதும் ஒரு பேறாகும். தற்கால சூழ்நிலைகள், நடனப்பயில்வு முறைமைகள், தொழில்நுட்ப வசதிகள் என்பன குரு சிஷ்ய தொடர்புகளில் பாரிய மாற்றங்களை கொண்டு வந்திருப்பினும் பரதக்கலை பயில்வில் குரு சிஷ்ய ஆன்மீகத் தொடர்புகள் நடனம் பயில்வோரின் நர்த்தனச் சிறப்புக்கு உயிரோட்டம் தருபவை.

பரதக்கலை மீதான ஈர்ப்பும், பயில வேண்டும் என்ற அதீத ஆர்வமும் இன்றி பரதம் பயில்வதில் பலனில்லை என்பதனை பரதம் பயில்பவர்களும் பயில விரும்புவோரும் மனதில் இருத்திக்கொள்ளல் வேண்டும். மேலும் பரதக்கலை அரங்கேற்றம் செய்ய விரும்புவோர் அதனை ஒரு பெருமைக்காக அல்லாது கலையின் உயர் விழுமியங்களை உணர்ந்து அனுபவித்து பார்வையாளர்களையும் அவ் உணர்வினில் ஆட்கொள்ள வைக்கும் உயர்நோக்கிலே செயற்பட வேண்டும். மூத்த நடனக்கலைஞர் என்ற வகையில் வளர்ந்து வரும் நடனக்கலைஞர்களுக்கும் அவர்களின் ஆக்கபூர்வமான அருஞ்செயற்பாடுகளுக்கும்; எனது ஆதரவும் ஊக்குவிப்பும் பாராட்டுகளும் எப்போதும் உண்டு.

சாளரம்
ஞாயிறு, டிசம்பர் 05, 2021



# எரிவாயுவினால் எரியும் வயிறுகள்

க.பிரசன்னா

இலங்கையில் நலிவடைந்துள்ள பொருளாதாரத்தினால் பொது மக்கள் பாரிய பிரச்சினைகளை சமீபத்தில் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்தியாவசிய பொருட்கள் உட்பட வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் மக்கள் அதிக நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். தற்போது எரிவாயு சிலிண்டர்களின் பற்றாக்குறை, விலை அதிகரிப்பு மற்றும் எரிவாயுக் கலவை மாற்றத்தினால் ஏற்பட்டுள்ள வெடிப்புச் சம்பவங்களினால் மக்கள் பீதியடைந்துள்ளனர். சர்வதேச சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளமையினால் இலங்கையில் எரிவாயு சிலிண்டர்களின் விலையினை அதிகரிப்பதற்கு விடுக்கப்பட்ட அழுத்தத்தின் காரணமாக உள்ளூர் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் அண்மையில் அதிகரிக்கப்பட்டன.

இந்நிலையில் மீண்டும் எரிவாயு சிலிண்டர்களுக்கான கலவையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினால் எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்கும் நிலை காணப்படுவதாக முன்வைக்கப்படும் கூற்றுக்களால் மக்கள் பீதியடைந்துள்ள அதேவேளை, லிட்ரோ மற்றும் லாஃப் எரிவாயு நிறுவனங்கள் குறித்த குற்றச்சாட்டை முற்றாக மறுத்துள்ளன. நாட்டில் எரிவாயுவுக்கான தட்டுப்பாடு நிலவியது முதல் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டும் பாவனையாளர்களுக்கும் எரிவாயுவுக்குமான பிரச்சினை இன்னும் நீங்கவில்லை.

இதேவேளை நாட்டில் எரிவாயுவின் நுகர்வு, இறக்குமதி மற்றும் விலை தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக சில தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் எரிவாயுவின் அளவு மற்றும் லிட்ரோ நிறுவனம் இறக்குமதி செய்யும் எரிவாயுவின் அளவு போன்ற தகவல்கள் மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப்படமாட்டாது என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை சுங்கத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படுவதால் மூன்றாம் தரப்பினருக்கு வழங்க முடியாதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ நிறுவனம் விற்பனை செய்யும் எரிவாயுவின் அளவு மற்றும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் எரிவாயு சிலிண்டர்களின் எண்ணிக்கை போன்ற தகவல்கள் 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் 57 ஆம் பிரிவின் கீழ் தரவுகள் திரட்டப்படுவதனால் மூன்றாம் தரப்பினருக்கு வழங்க முடியாதென தெரிவிக்கப்பட்டுள்ளது. லாஃப் எரிவாயு தொடர்பான எவ்விதத் தகவல்களும் இல்லை என பாவனையாளர் அலுவலகள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

| விலை அனுமதிக்கப்பட்ட திகதி | 12.5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை (ரூபாவில்) | |
|---|---|---|
| | லிட்ரோ | லாஃப் |
| 30.01.2015 | 1,596.00 | 1,596.00 |
| 15.07.2015 | 1,496.00 | 1,496.00 |
| 23.11.2015 | 1,346.00 | 1,346.00 |
| 29.11.2016 | 1,321.00 | 1,321.00 |
| 26.09.2017 | 1,431.00 | 1,431.00 |
| 28.04.2018 | 1,676.00 | 1,676.00 |
| 29.06.2018 | 1,538.00 | 1,538.00 |
| 27.09.2018 | 1,733.00 | 1,733.00 |
| 04.10.2019 | 1,493.00 | - |
| 12.08.2021 | - | 1,856.00 |
| 10.10.2021 | 2,675.00 | 2,840.00 |

தகவல் : பாவனையாளர்கள் அதிகாரசபை

### விலை அதிகரிப்பு

சர்வதேச சந்தையில் ஏற்படுகின்ற விலை மாற்றத்தினை அடிப்படையாகக் கொண்டும் தேர்தல் காலத்தினை இலக்காகக் கொண்டும் நாட்டில் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் கடந்த காலங்களில் அதிகரித்து குறைக்கப்பட்டுள்ளன. நாட்டில் 2015 - 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 11 தடவைகள் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 2021 ஆம் ஆண்டு இரு முறை விலை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் 2015 - 2018 ஆம் ஆண்டு வரை லிட்ரோ மற்றும் லாஃப் எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் ஒரேயளவாகவே பேணப்பட்டுள்ளன. (மேலதிக விபரங்கள் அட்டவணையில்) இவ்வருடம் ஜூலை மாதம் எரிவாயு சிலிண்டர்களுக்கு மாவட்ட அடிப்படையில் விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன.

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட 9.6 கிலோகிராம் எடை கொண்ட எரிவாயு சிலிண்டருக்கு கம்பஹா மற்றும் கொழும்பு மாவட்டத்துக்கு குறைந்தபட்ச விலையும் அதிகபட்சமாக யாழ். மாவட்டத்துக்கும் விலை நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டது. எனினும் தற்போது 18 லீற்றர் (9.6 கிலோகிராம்) எரிவாயு சிலிண்டர் விற்பனையானது தடைசெய்யப்பட்டுள்ளது.

இறுதியாக பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் லாஃப் மற்றும் லிட்ரோ எரிவாயு சிலிண்டர்களின் விலைகள் அக்டோபர் 10 ஆம் திகதி அதிகரிக்கப்பட்டன. 12.5 கிலோ லாஃப் சிலிண்டரின் விலை 1856 ரூபாவிலிருந்து 2840 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. 5 கிலோ சிலிண்டர் 743 ரூபாவிலிருந்து 1136 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. எனினும் தற்போது நாடு முழுவதும் லாஃப் எரிவாயுவுக்கான தடுப்பாடு நிலவுகின்றது. லிட்ரோ நிறுவனமானது, 12.5 கிலோ சிலிண்டரின் விலையானது 2675 ரூபாவாகவும் 5 கிலோ சிலிண்டரானது, 598 ரூபாவிலிருந்து 1101 ரூபாவாகவும் 2.5 கிலோ சிலிண்டரானது 289 ரூபாவிலிருந்து 520 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டது.

### எரிவாயு கலவை சர்ச்சை

நாடு முழுவதும் எரிவாயு கசிவினால் ஏற்படும் வெடிப்புச் சம்பவங்களுக்கு எரிவாயு கலவையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றமே பிரதான காரணமென குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இதன்படி எரிவாயு சிலிண்டர்கள் கலவையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களே அவை வெடித்துச் சிதறக் காரணம் என நுகர்வோர் விவகார அதிகார சபையின் முன்னாள் நிறைவேற்றுப் பணிப்பாளர் துசான் குணவர்த்தன தெரிவித்தமை சர்ச்சையை ஏற்படுத்தியது.

லிட்ரோ நிறுவனமும் லாஃப் நிறுவனமும் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் அனுமதியின்றி இந்த மாற்றங்களை மேற்கொண்டுள்ளன. கடந்த ஏப்ரலில் இருந்து லிட்ரோ மற்றும் லாஃப் சிலிண்டரின் வாயுக் கலவையை பியூட்டன் 80 : புரொபேன் 20 என்ற நிலையிலிருந்து முறையே பியூட்டன் : புரொபேன் 50 : 50 என மாற்றியுள்ளன. வால்வுகளில் கசிவுகள் ஏற்படுகின்றன என வெளியான முறைப்பாடுகளுக்கு இதுவே காரணம் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கை ஒரு வெப்பமண்டல நாடு என்பதால் எல்பி வாயுவில் குறைந்தளவு புரொபேனும் அதிகளவு பியூட்டனும் காணப்பட வேண்டும். இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அறிவித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாராளுமன்றத்தில் எரிவாயுக் கலவை மாற்றம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பாராளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான் மற்றும் கிங்ஸ் நெல்சன் ஆகியோர் கேள்வி எழுப்பியிருந்தனர். எனினும் எரிவாயு சிலிண்டர்களில் வெடிப்பு ஏற்படவில்லையெனவும் எரிவாயுக் கசிவினால் விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை எரிவாயுவின் தரம் தொடர்பிலான பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு இலங்கையில் வசதிகள் இல்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த சர்ச்சை நீடிக்கும் நிலையில், இவ்விடயம் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

### நாடு முழுவதும் பதிவான வெடிப்புச் சம்பவங்கள்

தற்போது சந்தையில் கிடைக்கும் எரிவாயு சிலிண்டர்களில் எத்தில் மெர்கேப்டன் எனும் வேதிப்பொருள் உரிய அளவு சேர்க்கப்படும் வரை எரிவாயு விநியோகத்தை நிறுத்துமாறு எரிவாயு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

எரிவாயுவில் நிர்ணயிக்கப்பட்ட தரநிலையின்படி எத்தில் மெர்காப்டன் என்ற வேதிப்பொருள் 14 அலகுகளில் இருக்க வேண்டும். ஆனால், சமீபத்தில் விநியோகிக்கப்பட்ட எரிவாயு சிலிண்டர்களில் குறைந்த அளவே இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் 2021 ஜனவரி 1 முதல் 2021 டிசம்பர் 1 வரை இதுபோன்ற 131 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக திரவ பெட்ரோலிய எரிவாயு வாயு வெடிப்புகளை விசாரிப்பதற்கான இலங்கைக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. இக்குழுவினால் பிரச்சினைகள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டு தொடர்ந்தும் வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்வதை தடுப்பதற்காக பொதுமக்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்களை வெளியிட்டுள்ளது.

பொதுமக்கள் கொள்வனவு செய்கின்ற எரிவாயு சிலிண்டர் வாங்கும் இடத்தில் கசிவு உள்ளதா என்பதை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சமையல் எரிவாயு சிலிண்டரில் சந்தேகத்துக்குரிய கசிவு இருந்தால் எரிவாயு சிலிண்டரை காற்றோட்டமிக்க வெளிப்பகுதியில் வைக்க வேண்டும். அதன்பிறகு, 011 5 811 927 அல்லது 011 5 811 929 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு விற்பனை முகவர், பொலிஸ் மற்றும் விசாரணைக் குழுவுக்கு உடனடியாக அறிவிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

எரிவாயு கசிவுகளை பரிசோதிக்க, அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்படாத பல்வேறு முறைகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு பொதுமக்கள் எச்சரிக்கப்படுகிறார்கள்.கசிவுகள் நிபுணர்களால் மட்டுமே சோதிக்கப்பட வேண்டும்.

சமீபத்திய நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு, எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்கும் சம்பவங்கள் எதுவும் நிகழவில்லை. இருப்பினும், ரெகுலேட்டர், எரிவாயு குழாய் மற்றும் எரிவாயு அடுப்பு ஆகியவை தரம் குறைந்தவை அல்ல என்பதை உறுதி செய்யுமாறு பொதுமக்கள் கடுமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் ரெகுலேட்டர்களுக்கு SLS - 1180 மற்றும் குழல்களுக்கு SLS - 1172 தரச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. ரெகுலேட்டருக்கான பரிந்துரைக்கப்பட்ட பயன்பாட்டு காலம் 5 ஆண்டுகளும் குழாய்களுக்கு 2 ஆண்டுகளும் வழங்கப்பட்டுள்ளன. எரிவாயு சிலிண்டர்களின் தனித்துவமான வாசனைக்கு நுகர்வோர் சிறப்பு கவனம் செலுத்த அறிவுறுத்தப்படுகிறார்கள். சிலிண்டரிலிருந்து ரெகுலேட்டரை அகற்ற வேண்டாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள், ஆனால் எரிவாயு விநியோகத்தை நிறுத்தவேண்டும்.

குறைந்த காற்றோட்டம் உள்ள வீடுகளில் வசிக்கும் பொதுமக்கள் மேற்கூறிய விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இலங்கையை அண்மித்துள்ள எரிவாயு கப்பலுக்கு விசாரணைக் குழுவொன்று விஜயம் செய்து வாயு மாதிரிகளை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் பரிசோதனை முடிவுகள் வரும் வரை கப்பலில் இருந்து எரிவாயுவை இறக்குவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.


### எரிவாயு நிறுவனங்கள் மறுப்பு

எரிவாயுக் கலவையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டதனால் நாடு முழுவதும் வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்படுவதாக வெளியிடப்படும் அறிக்கைகளுக்கு எரிவாயு நிறுவனங்கள் மறுப்பு தெரிவித்துள்ளன. 'அனைத்து செய்திகளும் உண்மையல்ல, கற்பனையானவை மற்றும் ஆதாரமற்றவை. தவறான அறிக்கைகளை வெளியிடுவது நிறுவனம், அரசாங்கம் மற்றும் ஆறு மில்லியன் மக்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்தும். நாங்கள் சுமார் 150 ஆண்டுகளாக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தரத்தை கடைப்பிடித்து உள்ளூர் சந்தைக்கு எரிவாயு விநியோகம் மேற்கொள்ளப்படுவதாக' லிட்ரோ கேஸ் லங்காவின் விற்பனைப் பணிப்பாளர் ஜானக பத்திரத்ன தெரிவித்துள்ளார்.

எல்பி கேஸ் என்பது புரொப்பேன் - பியூட்டன் உற்பத்தியின் கலவையாகும். தொழில்துறை மற்றும் உள்நாட்டு பயன்பாட்டிற்கான ஒரே வாயுக் கலவை நீண்டகாலமாக ஒரு சர்வதேச சுயாதீன அமைப்பால் சோதிக்கப்பட்டு சான்றளிக்கப்பட்டது. SLS 712 காற்றழுத்தத் தரநிலை இலங்கை தர நிர்ணய நிறுவனத்தால் வழங்கப்படுகிறது. இலங்கையின் காலநிலைக்கு ஏற்ப கலவை தயாரிக்கப்படுகிறது. இந்தியா மற்றும் பிற வளரும் நாடுகளுக்கு இந்த சமன்பாடு மாறுபடும் என லிட்ரோ கேஸ் லங்கா இரசாயன எதிர்வினை பொறியியலாளர் ஜயந்த பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

லாஃப் எரிவாயு சிலிண்டர்களின் கலவை இலங்கை தர நிர்ணய நிறுவனத்தால் விதிக்கப்பட்ட விவரக் குறிப்புகளின் படி பராமரிக்கப்படுகிறது. மேலும் லாஃப் எரிவாயு நிறுவனத்தால் தனித்துவமான தர நிலைகள் பராமரிக்கப்படும். லாஃப்ஸ் கேஸ் வழங்கும் எரிவாயு சிலிண்டர்கள் இலங்கை தர நிர்ணய நிறுவனத்தால் விதிக்கப்பட்ட SLS 1178/2013 தரத்தின் கீழ் தயாரிக்கப்படுவதால், ஒவ்வொரு லாஃப் எரிவாயு சிலிண்டரும் பாவனைக்கு பாதுகாப்பானது என லாஃப்ஸ் எரிவாயு நிறுவனத்தின் பொது முகாமையாளர் குலமித்ர பண்டார தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொடர்ச்சியாக எரிவாயு தொடர்பில் சர்ச்சைகள் நிலவி வந்தாலும் விநியோகிக்கப்பட்ட எரிவாயு சிலிண்டர்களை மீளப் பெறுவதற்கான எவ்விதத் திட்டத்தையும் அரசாங்கம் அறிவிக்கவில்லை. அத்துடன் அதிகமாக 12.5 கிலோ எடையுடைய லிட்ரோ எரிவாயு சிலிண்டரில் ஏற்பட்ட கசிவு மற்றும் அழுத்தங்களின் காரணமாகவே விபத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இலங்கையில் எரிவாயு தரம் தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான வசதிகள் இலங்கையில் இல்லாமையும் உடனடித் தீர்வினை பெற்றுக் கொள்வதற்கு தடையாக அமைந்துள்ளது. எரிவாயு வெடிப்புச் சம்பவங்களுக்கு முன்னர் நாடு முழுவதும் எரிவாயுவுக்கான தட்டுப்பாடுகள் நிலவி வந்த நிலையில், தற்போது சந்தையில் லிட்ரோ எரிவாயு அதிகமாகவே காணப்படுகின்றது. மக்கள் ஏற்கனவே கொள்வனவு செய்த எரிவாயு சிலிண்டர்களும் அச்சத்தினால் பாவிக்கப்படாமல் இருக்கின்றது. எனவே எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் நாட்டில் நிலவிய எரிவாயு தட்டுப்பாட்டினை முடிவுக்கு கொண்டுவந்துள்ளதாகவே கருத வேண்டியுள்ளது.






# கருணைப்பாலத்தின் ஸ்தாபகர் அமரர் ஆ.சி.நடராஜாவின் 10ஆம் ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு அஞ்சலி நிகழ்வு



கருணைப்பாலத்தின் ஸ்தாபகரும் யாழ்.தினக்குரல் பத்திரிகையின் முன்னைநாள் பொதுமுகாமையாளருமாகிய அமரர் ஆ.சி. நடராஜாவின் 10ஆவது சிராத்ததினம் கடந்த மாதம் 22ஆம் திகதி ஆகும். அன்றைய தினம் அமரருக்கான அஞ்சலி நிகழ்வொன்று எமது யாழ்.தினக்குரல் காரியாலயத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அன்னாரது குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்புடன் மிக எளிமையான முறையில் அமரருக்கான அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.



அமரர் ஆ.சி.நடராஜா அவர்கள் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் அப்பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார். ஓய்வுக் காலத்தின் பின்னர் யாழ்.தினக்குரல் பத்திரிகையின் பொதுமுகாமையாளராக இணைந்து கொண்டார். யுத்த சூழலில் பத்திரிகையின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். சமூகத்தின் மீது அக்கறை கொண்டு வன்னிப் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக 2009 ஆம் ஆண்டு கருணைப்பாலம் என்ற சமூக அமைப்பினை ஸ்தாபித்து அதன் செயலாளராகவும் செயற்பட்டார். அவருடைய முயற்சியால் இன்று வரை வன்னிப் போரில் பாதிக்கப்பட்ட பல மக்கள் உதவிகளைப் பெற்று வருகின்றார்கள்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சி கருதி கல்விக்குரல் என்ற பகுதியை ஆரம்பித்து அதனூடாக கல்விக்கான சேவையையும் மேம்படுத்தினார். தனது இறுதிக் காலத்தில் நான் பிறந்து வாழ்ந்த குரும்பசிட்டி கிராமத்தின் விடுதலைக்கும் மீள்எழுச்சிக்கும் போராடினார். இப்படியான உன்னத மனிதனை ஒவ்வொரு ஆண்டிலும் நினைவு கூர்வதை கருணைப்பாலம் பெருமை கொள்கின்றது.

அன்னாரின் நினைவு தினத்தினை முன்னிட்டு அவருடைய மகள் திருமதி பிரபாகரன் அஞ்சலா 50ஆயிரம் ரூபா நிதியினை கருணைப்பாலத்திற்கு அன்பளித்திருந்ததுடன் அன்றைய அஞ்சலி நிகழ்விற்குரிய செலவீனத்தினையும் அவரே பொறுப்பேற்றிருந்தார்.

மேற்படி நிதியினை அவருடைய சகோதரி திருமதி இளங்கோவன் வலன்ரீனா வழங்கி வைத்திருந்தார்.

# நெதர்லாந்து தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றம் 8ஆவது தடவையாக கல்வி ஊக்குவிப்பு நிதி அன்பளிப்பு

## கல்வி ஊக்குவிப்பு நிதியைப் பெற்றுக் கொண்ட மாணவர்கள் ...




நெதர்லாந்து தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்றம் 22.07.2021 அன்று 525 யூரோவினை அன்பளித்திருந்தது. இலங்கை பெறுமதிக்கு 1 இலட்சத்து 21ஆயிரத்து 917ரூபா 33 சதம் கிடைக்கப் பெற்றிருந்தது.

அந்நிதியிலிருந்து 2ஆம் கட்ட கல்வி ஊக்குவிப்பு நிதி பெறும் ஐந்து மாணவர்களுக்கு தலா 2ஆயிரம் ரூபா வீதம் இம்மாதம் வரை 60ஆயிரம் ரூபா நிதியும். திருமதி சாந்தராணி கபிலன் வழங்கிய 30ஆயிரம் ரூபா நிதி மாங்குளத்தைச் சேர்ந்த செல்வி கயல்விழி சந்திரனுக்கு மாதாந்தம் 5ஆயிரம் ரூபா வீதமும் திருமதி கமலினி கஜமுகன் வழங்கிய 30ஆயிரம் ரூபா நிதி விசுவமடுவைச் சேர்ந்த செல்வி சாங்கீதா விநாயகமூர்த்திக்கு மாதாந்தம் 5ஆயிரம் ரூபா வீதமும் ஆக இம்மாதம் வரை வழங்கப்பட்டுள்ளது. மிகுதி நிதியானது நிர்வாகச் செலவீனத்திற்கு பயன்படுத்துமாறு மன்றத்தின் தலைவர் திரு வ.கதிர்காமத்தம்பி தெரிவித்திருந்தார்.

# உதவி தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்

வன்னி இறுதிப் போரில் பெற்றோரையிழந்த பிள்ளைகளுக்கு கல்வி உதவிகளும் கணவரையிழந்த அன்னையர்களுக்கு வாழ்வாதார உதவிகளும் எமது அமைப்பினூடாக வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரை காலமும் எமது அமைப்பிடமிருந்து எதுவித உதவியும் பெற்றுக் கொள்ளாதவர்கள் தங்கள் விண்ணப்பங்களை எமக்கு தபால் மூலமாக அனுப்பி வைக்கலாம். விண்ணப்பதாரி வன்னி இறுதிப் போரில் பெற்றோரையிழந்ததற்கான அல்லது கணவரை இழந்ததற்கான மரணச் சான்றிதழின் போட்டோப்பிரதியுடன் தங்கள் வதிவிடம் மற்றும் வறுமைநிலையை உறுதிப்படுத்திய கிராம சேவகரின் கடிதம், தங்களின் குடும்பப் புகைப்படம், குடும்பப் பங்கீட்டு அட்டையின் போட்டோப்பிரதி என்பவற்றினை இணைத்து விண்ணப்பிக்கலாம். வன்னி இறுதிப் போரில் மேற்படி பாதிப்புக்குட்பட்டவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**
**"செயலாளர்"**
**யாழ்.தினக்குரல், கருணைப்பாலம்,**
**இல - 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# பல்கலைக்கழக மாணவனுக்கு மடிகணினி அன்பளிப்பு



லண்டன் Think 2wice ஒன்றியம் வழங்கியிருந்த நிதியிலிருந்து யாழ்ப்பாணம் மீசாலை வடக்கைச் சேர்ந்த தம்பிராசா தனுஜனுக்கு மடிகணினி ஒன்று அன்பளிக்கப்பட்டது.

வன்னி இறுதிப் போரில் தந்தையைப் பறிகொடுத்த தனுஜன் தனது தாயார் கமலாவுடன் வசித்து வருகின்றார். இவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் Radiography கற்கை நெறியினை கற்று வருகின்றார். இவருடைய கற்றல் செயற்பாட்டிற்காக மேற்படி மடிகணினி அன்பளிக்கப்பட்டிருந்தது.

மேலும் இவருடைய மூத்த சகோதரி கஜந்தினியும் பல்கலைக்கழகத்தில் கல்விகற்று வருகின்றார். கடைசி சகோதரர் விதுஷன் தரம் - 10இல் கல்வி கற்று வருகின்றார்.

மேற்படி மடிகணினியை கருணைப்பால பொருளாளர் எஸ்.சுஜீவன் வழங்கி வைக்க தனுஜன் பெற்றுக் கொள்வதை இங்குள்ள படத்தில் காணலாம்.

# கருணைப்பாலத்தின்

## 2021 - ஆனி,ஆடி மாதங்களிற்குரிய கணக்கு விபரம்

| ப.இல | நிதி வழங்குனர் | தொகை | கா.இல | நிதி பெறுநர் | தொகை |
|---|---|---|---|---|---|
| 4530 | நெதர்லாந்து தமிழ்க் கலாச்சார உ.ந.ம.ம | 143214.23 | 575852 | பா.சத்தியதேவி (கிளிநொச்சி) | 12000.00 |
| 4531 | வி.சுவாமிநாதன் (இடைக்காடு) | 10000.00 | 575852 | ச.கேசிகா (புத்துவெட்டுவான்) | 2000.00 |
| 4532 | மொறட்டுவ பொறியியல் பழைய மாணவர்கள் | 12000.00 | 575852 | க.சாமுவேல் (கைவேலி) | 2000.00 |
| 4533 | Dr.எஸ்.நிறஞ்சன் (கண்டி) | 12000.00 | 575852 | வசீகரன் திசாயினி (வட்டக்கச்சி) | 2000.00 |
| 4534 | இ.ஸ்ரீதரன் (அரியாலை) | 6000.00 | 575852 | கி.ஜானுஜா (நெடுங்கேணி) | 2000.00 |
| 4535 | இ.ஸ்ரீதரன் (அரியாலை) | 10000.00 | 575852 | லோ.கைலைராணி (பரந்தன்) | 3000.00 |
| 4536 | ஓர் அன்பர் (21.06.21 வங்கி) | 5000.00 | 575852 | எஸ்.விஜயராணி (மிருசுவில்) | 3000.00 |
| 4537 | ஓர் அன்பர் (24.06.21 வங்கி) | 3250.00 | 575852 | பா.மனோரஞ்சிதம் (கோம்பாவில்) | 2000.00 |
| 4538 | மிது (கொழும்பு) | 10000.00 | 575852 | ச.மேரிஅனிற்றா (மந்துவில்) | 2000.00 |
| 4539 | மிது (கொழும்பு) | 10000.00 | 575852 | யோ.அந்தோனியாப்பிள்ளை | 3000.00 |
| 4540 | மொறட்டுவ பொறியியல் பழைய மாணவர்கள் | 12000.00 | 575852 | ய.ஜெனிந்தா (ஸ்கந்தபுரம்) | 3000.00 |
| 4541 | அமரர் கி.கோவிந்தபிள்ளை நினைவாக | 50000.00 | 575852 | ர.நாகராணி (புதுக்குடியிருப்பு) | 3000.00 |
| 4542 | லண்டன் Think 2wice ஒன்றியம் | 2193348.00 | 575852 | சி.கர்ணிகா (செல்வபுரம்) | 3000.00 |
| 4543 | நெதர்லாந்து தமிழ்க் கலாச்சார உ.ந.ம.ம | 12917.33 | 575852 | க.விஜயகுமாரி (உதும்பிராய்) | 3000.00 |
| 4544 | ஓய்வூதியர் (பாலையூர்) | 10000.00 | 575852 | ப.நிரோஜன் (கனகராஜன்குளம்) | 2000.00 |
| 4545 | பி.வைலட் (மாதகல்) | 50000.00 | 575852 | இ.வியாளம்மா (புதுக்குடியிருப்பு) | 10000.00 |
| 4546 | வி.சுவாமிநாதன் (இடைக்காடு) | 10000.00 | 575852 | லோ.காந்தரூபி (வள்ளிபுனம்) | 3500.00 |
| 4547 | Dr.எஸ்.நிறஞ்சன் (கண்டி) | 12000.00 | 575853 | க.கருணாமலர் (நெடுந்தீவு) | 5000.00 |
| 4548 | ஓர் அன்பர் (07.07.21 வங்கி) | 600.00 | 575853 | செ.சிவகாமி (கிளிநொச்சி) | 2000.00 |
| 4549 | இ.ஸ்ரீதரன் (அரியாலை) | 6000.00 | 575853 | செ.இன்பரதி (தருமபுரம்) | 2000.00 |
| 4550 | இ.ஸ்ரீதரன் (அரியாலை) | 10000.00 | 575853 | தீ.மாலதி (தேவிபுரம்) | 2000.00 |
| 4551 | ஓர் அன்பர் (20.07.21 வங்கி) | 5000.00 | 575853 | க.உதயவாணி (முள்ளியவளை) | 2000.00 |
| 4552 | ம.வீணா (திருகோணமலை) | 2000.00 | 575853 | சி.சசிகலா (தேராவில்) | 2000.00 |
| 4553 | ஓர் அன்பர் (23.07.21 வங்கி) | 3500.00 | 575853 | என்.பிலோமினியூஸ் (பூநகரி) | 2000.00 |
| | **மொத்த நன்கொடை** | **2707829.56** | 575853 | மு.செல்வலட்சுமி (பூநகரி) | 3000.00 |
| | | | 575853 | த.சரோஜினிதேவி (பூநகரி) | 3000.00 |
| | | | 575853 | சா.மகேஸ்வரி (உதயநகர்) | 2000.00 |
| | | | 575853 | கி.பவித்திரன் (நெடுங்கேணி) | 2000.00 |
| | | | 575853 | சு.டென்சிகா (கைவேலி) | 2500.00 |
| | | | 575853 | ஜெ.கேதீஸ்குமார் (துணுக்காய்) | 3000.00 |
| | | | 575853 | ச.லட்சுமி (மாங்குளம்) | 5000.00 |
| | | | 575853 | க.சோதிராணி (விசுவமடு) | 3000.00 |
| | | | 575853 | த.மேரிஅனற்றெலாறோஸ் | 5000.00 |
| | | | 575853 | பி.சுதர்சினி (கோம்பாவில்) | 2000.00 |
| | | | 575853 | சி.யோகேஸ்வரி (கிளிநொச்சி) | 2000.00 |
| | | | 575853 | வி.இந்துமதி (தேராவில்) | 5000.00 |
| | | | 575853 | சூ.சாருதா (தேவிபுரம்) | 3500.00 |
| | | | 575853 | வி.கோமளா (புதுக்குடியிருப்பு) | 10000.00 |
| | | | 575853 | சி.துரைராசா (புதுக்குடியிருப்பு) | 23000.00 |
| | | | 575854 | நானாவித செலவீனம் | 10000.00 |
| | | | 575855 | ம.சாந்தகுமாரி (நாவற்குழி) | 10000.00 |
| | | | 575856 | துவிச்சக்கரவண்டி அன்பளிப்பு | 286000.00 |
| | | | | துவிச்சக்கரவண்டி அன்பளிப்பு | 9250.00 |
| | | | | நிர்வாகச் செலவீனம் | 3000.00 |
| | | | 575857 | க.கருணாமலர் (நெடுந்தீவு) | 5000.00 |
| | | | 575857 | செ.சிவகாமி (கிளிநொச்சி) | 2000.00 |
| | | | 575857 | செ.இன்பரதி (தருமபுரம்) | 2000.00 |
| | | | 575857 | தீ.மாலதி (தேவிபுரம்) | 2000.00 |
| | | | 575857 | க.உதயவாணி (முள்ளியவளை) | 2000.00 |
| | | | 575857 | சி.சசிகலா (தேராவில்) | 2000.00 |
| | | | 575857 | என்.பிலோமினியூஸ் (பூநகரி) | 2000.00 |
| | | | 575857 | மு.செல்வலட்சுமி (பூநகரி) | 3000.00 |
| | | | 575857 | த.சரோஜினிதேவி (பூநகரி) | 3000.00 |
| | | | 575857 | சா.மகேஸ்வரி (உதயநகர்) | 2000.00 |
| | | | 575857 | கி.பவித்திரன் (நெடுங்கேணி) | 2000.00 |
| | | | 575857 | சு.டென்சிகா (கைவேலி) | 2500.00 |
| | | | 575857 | ஜெ.கேதீஸ்குமார் (துணுக்காய்) | 3000.00 |
| | | | 575857 | ச.லட்சுமி (மாங்குளம்) | 5000.00 |
| | | | 575857 | க.சோதிராணி (விசுவமடு) | 3000.00 |
| | | | 575857 | பி.சுதர்சினி (கோம்பாவில்) | 2000.00 |
| | | | 575857 | சி.யோகேஸ்வரி (கிளிநொச்சி) | 2000.00 |
| | | | 575857 | வி.இந்துமதி (தேராவில்) | 5000.00 |
| | | | 575857 | சூ.சாருதா (தேவிபுரம்) | 3500.00 |
| | | | 575857 | எஸ்.மிதுசன் (புதுக்குடியிருப்பு) | 2500.00 |
| | | | 575857 | சி.சிவமலர் (பூநகரி) | 15000.00 |
| | | | 575857 | என்.தவலட்சுமி (கோம்பாவில்) | 26000.00 |
| | | | 575857 | வி.கோமளா (புதுக்குடியிருப்பு) | 10000.00 |
| | | | 575857 | home of joy for people in spcial need | 10000.00 |
| | | | 575858 | பா.சத்தியதேவி (கிளிநொச்சி) | 12000.00 |
| | | | 575858 | ச.கேசிகா (புத்துவெட்டுவான்) | 2000.00 |
| | | | 575858 | க.சாமுவேல் (கைவேலி) | 2000.00 |
| | | | 575858 | வ.திசாயினி (வட்டக்கச்சி) | 2000.00 |
| | | | 575858 | கி.ஜானுஜா (நெடுங்கேணி) | 2000.00 |
| | | | 575858 | லோ.கைலைராணி (பரந்தன்) | 3000.00 |
| | | | 575858 | எஸ்.விஜயராணி (மிருசுவில்) | 3000.00 |
| | | | 575858 | பா.மனோரஞ்சிதம் (கோம்பாவில்) | 5000.00 |
| | | | 575858 | ச.மேரிஅனிற்றா (மந்துவில்) | 2000.00 |
| | | | 575858 | யோ.அந்தோனியாப்பிள்ளை | 3000.00 |
| | | | 575858 | ய.ஜெனிந்தா (ஸ்கந்தபுரம்) | 3000.00 |
| | | | 575858 | ர.நாகராணி (புதுக்குடியிருப்பு) | 3000.00 |
| | | | 575858 | சி.கர்ணிகா (செல்வபுரம்) | 3000.00 |
| | | | 575858 | க.விஜயகுமாரி (உதும்பிராய்) | 3000.00 |
| | | | 575858 | ப.நிரோஜன் (கனகராஜன்குளம்) | 2000.00 |
| | | | 575858 | லோ.காந்தரூபி (வள்ளிபுனம்) | 3500.00 |
| | | | 575858 | அ.கிறிஸ்டீனவியல் (இரத்தினபுரம்) | 10000.00 |
| | | | 575858 | இ.வியாளம்மா (புதுக்குடியிருப்பு) | 10000.00 |
| | | | 575859 | நானாவித செலவீனம் | 10000.00 |
| | | | 575860 | ப்ரஜ்ஞாங்கிறா அறக்கட்டளை | 200000.00 |
| | | | 575861 | டே.றஞ்சிமலர் (புதுக்குடியிருப்பு) | 30000.00 |
| | | | 575861 | ஆ.செல்வம் (மல்லிகைதீவு) | 30000.00 |
| | | | 575861 | க.ஜோதிலட்சுமி (இரத்தினபுரம்) | 25000.00 |
| | | | | நிர்வாகச் செலவீனம் | 4250.00 |
| | | | | **மொத்த அன்பளிப்பு** | **2759000.00** |